




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்

(சர்வதேச தேசிய இயக்கங்களின் வளர்ச்சியில் பல்வேறு கால கட்டங்களும் இலங்கையின் தனித்துவ நிலைமைகளும்)

பி.ஏ.காதர்

வெளியீடு : அப்பால் தமிழ்

2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | **சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்** |
| ஆசிரியர் | : | பி.ஏ.காதர் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2003 |
| வெளியீட்டாளர் | : | அப்பால் தமிழ் |
| கணினி கோர்ப்பு | : | சிவரஞ்சனி இரவீந்திரன் |
| அட்டை வடிவமைப்பு | : | க.முகுந்தன் |
| அச்சகம் | : | ஈ-குவாலிற்றி கிராபிக்ஸ், 315, ஜம்பெற்றா வீதி, கொழும்பு-13 +94 011 2389848 |
| பக்கங்கள் | : | xvi + 80 |
| பதிப்புரிமை | : | பி. ஏ. காதர் |
| விலை | : | 100/= (இலங்கையில்) |

**அப்பால் தமிழ் வெளியீடு - 3**

| | | |
|---|---|---|
| Title | : | **Lessons of International national movements** |
| Author | : | B.A.Kader |
| Edition | : | 1st Edition Dec.2003 |
| Publishers | : | Appaal-Tamil |
| Sales Rights in Sri Lanka | : | Appaal-Tamil Publications and Book Distribution 02, Urban Council QTS Gandhi Nagar, Trincomalee, Sri Lanka. +94 0777 248235 jeyamurugan@hotmail.com |

**Appaal Tamil Publications-3**


## வெளியீட்டாளர் குறிப்புகள்

கடந்த ஜூன் 2003ல் பாரிசில் இடம்பெற்ற கருத்தரங்கில் பி.ஏ.காதர் அவர்களினால் ஆற்றப்பட்ட உரையின் நூல்வடிவமிது. அக்கருத்தரங்கினில் அவரது உரையைச் செவிமடுத்த பலரும் இதனை நூல்வடிவமாக்க வேண்டுமெனப் பரிந்துரைத்தனர். அந்த ஆர்வலர்களின் பரிந்துரையை ஏற்று அப்பால் தமிழ் செயல்வடிவமாக்கியுள்ளது. அதுவே "சர்வதேச தேசிய இயக்கங்களின் படிப்பினைகள்" என்னும் தலைப்பில் எமது மூன்றாவது வெளியீடாக உங்கள் கைகளில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. எமது இரண்டாவது வெளியீடு பாரிஸ் கதைகள் என்னும் சிறுகதைத் தொகுப்பாகும்.

எமது முதல் வெளியீடாக இதே ஆசிரியரின் சுயம் - நிர்ணயம் - உரிமை என்னும் நூலினை வெளியிட்டிருந்தோம். அது வாசகர்களிடையே பெருவரவேற்பினைப் பெற்றதுடன் எமது பதிப்பக முயற்சிகளுக்கும் உறுதியான அடித்தளத்தை அமைத்துத் தந்திருந்தது. அந்நூல் ஐரோப்பா இலங்கை என இரண்டு பதிப்புக்களைக் கண்டது. மூன்றாவது பதிப்பாக தமிழ்நாட்டில் வெளிவருவதற்கு முயற்சிக்கப்பட்டாலும் அங்குள்ள அரசியல் அதற்குத் தடையாக உள்ளது. ஆனாலும் முயற்சிகள் தொடர்கின்றன.

இந்த சிறுநூல் சர்வதேச தேசிய இயக்கங்களின் அனுபவத்தில் இருந்து இலங்கைத் தீவின் தனித்துவ நிலைமைகளை அடையாளம் காட்ட முயல்கின்றது. அத்துடன் அத்தனித்துவ நிலைமைகளுக்கு ஊடான பிரச்சினைகளை தீர்க்கும் வகையான ஆலோசனைகளையும் முன்மொழிந்திருக்கின்றது. ஆதலால் இந்நூல் இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினையில் ஆர்வம் கொண்ட அனைவருக்கும் பயனுடையதாக இருக்கும் என்றே நம்புகின்றோம்.

இந்த நூலும், எமது முதல் வெளியீடான "சுயம் நிர்ணயம் உரிமை" நூலும் சாராம்சத்தில் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் இருப்பதை வாசகர்கள் உணர முடியும். இதற்கான காரணம் தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றுக்கு இடையேயான நெருக்கமேயாகும். அரசியல், வரலாறு என்பவற்றின் தொடக்கநிலை ஆர்வலர்கள் இரண்டு நூல்களையும் ஒருசேரப் படிப்பது அவர்களுக்குப் பயன்விளைவிக்கும்.

இந்நூல் சிறப்புற தயாராவதற்கு அப்பால் தமிழ் குழுமத்தினரின் கூட்டுழைப்பே முக்கிய காரணமாகும். நூல் வெளிவருவதற்கான ஆதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியையும் உழைப்பையும் தீபன், இரவீந்திரன், சிவரஞ்சனி, வின்சார்ள்ஸ், சுமத்திரி, முகுந்தன், ஜெயமுருகன், வரன், கபிலன், நவநீதன், நாகதிலகன் ஆகியோர் வழங்கினர்.

எமது முதல் வெளியீடான "சுயம் - நிர்ணயம் - உரிமை" நூலின் ஆயிரம் பிரதிகளை வாங்கி பல அறிமுக விழாக்களை நடத்திய மலையக மக்கள் முன்னணியினருக்கு எமது நன்றிகள். சிறப்பாக மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு எமது பணிக்கு உத்வேகம் அளித்ததை மறுக்க முடியாது.

இந்நூலை அழகுற அச்சிட்டு தந்த ஈ-குவாலிற்றி கிரபிக்ஸ் (கொழும்பு) அச்சகத்தாருக்கும், அதன் மேலாளர் திரு. ரஞ்சகுமாருக்கும் எமது நன்றிகள்.

தொடர்ந்தும் எமது வெளியீட்டு முயற்சிகளின் வெற்றிக்கு ஒத்துழைக்கும் அனைவருக்கும் எமது நன்றிகள்.

**அப்பால் தமிழ்**
**பதிப்பகத்தார்**

1st December 2003



## ஆசிரியர் உரை

22 ஜூன் 2003 ஞாயிற்றுக்கிழமை பரிஸ் நகரில் SALLE DE PARQUET மண்டபத்தில் **தோழர் கார்த்திகேசன் நினைவாக சமூக அசைவியக்கத்திற்கான கருத்தரங்கு** தொடர்: 02 இடம் பெற்றது. இதனை "அசை - சமூக அசைவிற்கான எழுத்தியக்கம்", "தேசிய கலை இலக்கிய பேரவை", "உயிர் நிழல்" - Exil ஆகிய அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தன.

இக்கருத்தரங்கில் எனக்கு விருப்பமான இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ற தலையங்கம் ஒன்றின் கீழ் கருத்துரையாற்ற வருமாறு தோழர் அசோக் (அசை ஆசிரியர்) அழைப்பு விடுத்திருந்தார்.

அன்பான அவ்வழைப்பை ஏற்றுக் கொண்ட நான் உரிய தலையங்கத்தைத் தேர்ந்தெடுக்க எத்தனித்த போது, என் மனத்திரையில் வெலிக்கடைச் சிறைச்சாலை ஞாபகம் விரிந்தது..... அங்கு சிறைச்சாலைக் காவலர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இரகசியமாக நாம் அமைத்த "சமூகக் கல்வி வட்டமும்" அதில் நான் நடத்திய அரசியல், சமூகவியல் வகுப்புகளும் ஆய்வுகளும் நினைவுக்கு வந்தன.

எனது ஆய்வுக்காக நான் குறித்துக் கொடுத்த நூல்களையெல்லாம் எப்படியோ சகஅரசியல் கைதியான தோழர் ஈசன் (சோமசுந்தரம் - தற்போது லண்டனில் வசிக்கிறார்) பெற்றுத் தந்தார். ஜே.ஓ.சி. குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பொலிசார் கைது செய்ய முயன்ற போது சயனைற் அருந்தித் தற்கொலை செய்து கொண்ட நடராஜா வரதனும் (அப்புச்சி) அப்போது என்னோடு சிறையிலிருந்தார். அவரும் இப்படியான இன்னும் பல தோழர்களும் எனக்குப் பலவழிகளில் பக்கத் துணையாக இருந்தார்கள். அவர்களின் உற்சாகம் கலந்த ஒத்துழைப்புடன் ஒரு ஆழமான ஆய்வொன்றை "சர்வதேச விடுதலை இயக்கத்தின் பல்வேறு காலகட்டங்கள்" என்ற தலைப்பில் மேற்கொண்டேன். அந்தத் தலைப்பையே நான் தோழர் அசோக்கிற்குக் கொடுத்தேன்.

லெனின் தான் வாழ்ந்த காலம் வரைக்கும் தேசிய இயக்கங்கள் கடந்து வந்த மூன்று காலகட்டங்களைப் பற்றி பல கட்டுரைகளிலே விளக்கி இருக்கிறார். 1789 முதல் 1871 வரையிலான முதலாவது காலகட்டம், 1871 முதல் 1917 வரையிலான இரண்டாவது காலகட்டம், 1917க்குப் பின்னரான காலகட்டம் என அவர் அவற்றை வகுத்திருந்தார். லெனினது இவ்விளக்கத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தப்பட்ட நான், அவரது மறைவிற்குப் பின்னர் சர்வதேச அரங்கில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களையும் அவை விடுதலை இயக்கத்தில் ஏற்படுத்திய தாக்கங்களையும் ஆராய முற்படலானேன். நீண்ட சிறை வாழ்க்கை எனக்கான அந்த அவகாசத்தை ஏற்படுத்தித் தந்தது.

இது ஒரு நீண்டகால முயற்சியாக அமைந்தது. எனது ஆய்வை நான் கூற, தோழர் ஈசன் தனது கையால் அழகுபட எழுதுவார். எனக்குச் சிலசமயம் காய்ச்சல் வரும். ஆனால் ஈசன் விடமாட்டார். ஏனைய தோழர் எவரிடமாவதிருந்து பெனடோல் ஒன்றைக் கொண்டு வந்து தந்து தலையணை ஒன்றைத் தனது மடி மீது வைத்து அதன்மீது எனது தலையைத் தூக்கி வைத்தபடி நான் தளர்ந்த குரலில் சொல்வதை உற்சாகத்தோடு எழுதுவார்.

நான் எழுதி முடித்த பகுதியை வண. பிதா சிங்கராயர் கடத்திக் கொண்டு போய் அடுத்த சிறை விடுதியில் இருந்த டொக்டர் சாந்தகுமாரிடம் (நேத்தாஜி) கொடுப்பார். பொது வேலையில் அவர் ஓர் இயந்திரம். சில மணித்தியாலங் களில் அதன் பல பிரதிகள் தயாராகிவிடும். அதற்கிடையில் மற்றொரு சிறை விடுதியிலிருந்த அப்புச்சியின் "டொக்டர் எழுதியாச்சா?" என்ற குரல் பல தடவை கேட்கும். நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்து நோயாளியாகி விட்டவர் என்பதாலும் நீதிமன்றில் அப்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட ஒரே அரசியல் கைதி என்பதாலும் சிறைச்சாலை விடுதிக்கு வெளியே சுற்றிவர இருந்த உயர்ந்த மதிலுக்குள் நடமாடும் அனுமதி வண. பிதா சிங்கராயருக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரதி சகல சிறை விடுதிகளுக்கும் வண. பிதா சிங்கராயரால் கடத்தப்படும். பல தோழர்கள் அதனைப் பிரதி செய்து கொள்வார்கள்.

சிறை விடுதிகளுக்கு வெளியே காவலர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தாலும் கூட இருபத்துநான்கு மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக அவர்களால் எம்மைக் கண்காணிக்க இயலாது. எனவே அவர்களின் நடமாட்டத்தைச் சில தோழர்கள் கண்காணித்து, தகவல் தரும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது ஏனைய தோழர்கள் இரகசியமாக சங்கீதம், கராட்டி, மல்யுத்தம் ஏன் கொரில்லா போர்ப்பயிற்சியில் கூட ஈடுபட்டிருப்பார்கள். சிலர் படிப்பார்கள். அங்கு படித்த பலர் இன்று லண்டனிலே மேற்படிப்பை முடித்து நல்ல நிலையில் இருக்கிறார்கள். கணிணித்துறையிலே கலாநிதிப் பட்டம் பெற்ற சிறிகாந்தன், பொறியியல்துறையிலே கலாநிதிப் பட்டம் வாங்கிய



அருணா, மகாராணி விருதுபெற்ற டொக்டர் சத்தியமூர்த்தி இப்படி ஒரு நீண்ட பட்டியலிடலாம். மொத்தத்தில் வெலிக்கடை தமிழ் விடுதி எம் அனைவருக்கும் ஒரு பல்கலைக்கழகமாக இருந்தது. இங்கு எமக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தோம். எமக்குத் தெரியாததை, தெரிந்தவர்களிடமிருந்து கற்றுக் கொண்டோம்.

இங்கு எனது ஆய்வின் மூன்றாவது காலகட்டம் பூர்த்தியாகிக் கொண்டிருக்கும் போது "வழக்குத் தொடரவேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து எதுவித வழக்கு விசாரணையுமின்றி நீண்டகாலம் பூசாமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 5000 தமிழ் அரசியல் கைதிகளுக்காக சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் 05-04-1986ந் திகதி வெலிக்கடையில் தொடங்கி விட்டது. எனது ஏழுவருட சிறைவாழ்க்கையில் இதுவே மறக்க முடியாத போராட்டமாகும்.

அப்போது தமிழ் விடுதியில் இருந்த பெரும்பாலானவர்கள் போட்டி போட்டுக் கொண்டு உண்ணாவிரதமிருக்க முன்வந்தனர். முதல்கட்டத்தில் உறுதிமிக்க ஐந்து பேரை அதில் தெரிவு செய்தோம். அவர்களின் பெயர் இன்னும் நினைவிருக்கிறது. அங்கு இடம் பெற்ற பெரும்பாலான உண்ணாவிரதப் போராட்டங்களில் கலந்து கொண்டு ஒரு சாதனை படைத்த ஈசன் (சோமசுந்தரம்) அவர்களில் ஒருவர். மற்றவர் அன்பு. அடுத்தவர் ஜே.ஒ.சீ. வரதன் (அப்புச்சி). இன்னொருவர் மாறன். அடுத்தவர் சந்திரன். இவர்கள் 18 நாட்கள் தினமும் மூவேளை இரண்டு மேசைக்கரண்டி அளவு உப்புகலந்த நீரை மாத்திரம் (மருத்துவ காரணங்களுக்கான ஒரு நடைமுறை - இதுபற்றி சிறைச்சாலை நிர்வாகத்திற்கு உத்தியோகபூர்வமாக எம்மால் அறிவிக்கப் பட்டிருந்தது) அருந்தியவண்ணம் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து மரணத்தின் விளிம்பிற்கே சென்றனர். இவர்களைத் தொடர்ந்து வாரம் ஐவர் வீதம் மேலும் 15 தோழர்கள் இப்போராட்டத்தில் குதித்தனர். அவர்களில் கீரன் (நகுலன்) சோதிலிங்கம், சுபத்திரன், ரமணன், சுரேஷ் ஆகியோரின் முகம் இன்னும் நினைவிலிருக்கிறது.

17 நாட்கள் கடந்தும் கூட அரசுதரப்பிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. பல உண்ணாவிரதத் தோழர்களின் நிலைமை மிகவும் ஆபத்தான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பேச்சுமூச்சற்று அசைவற்றுக் கிடந்த அவர்களின் உடலிலிருந்து துர்நாற்றம் வீசத் தொடங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. அவர்கள் மேனியில் மொய்க்கும் ஈயை விரட்டுவதற்காக ஏனைய தோழர்கள் கடதாசி மட்டையால் மாறி மாறி காற்று வீசிக்கொண்டிருந்தனர். உண்ணாவிரதிகளின் பின்னால் இருந்த சுவரில் "எம்முயிர் எம் உடலை விட்டுப் பிரிந்த பின்னர் எமது கல்லறைமீது பின்வரும் வாசகத்தைத் தயவு செய்து பொறித்து விடுங்கள்: விடுதலை மறுக்கப்பட்டதால் உயிர்நீத்த ஒருவனின் ஆத்மா இதனடியில் கண் துயில்கிறது" என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது.

அரசினதும் சிறைச்சாலை நிர்வாகத்தினதும் இந்த அலட்சிய மனோபாவத்தினால் ஆத்திரமடைந்த உண்ணாவிரதிகள் அல்லாத நாம் "ஒத்துழையாமை" போராட்டத்தை நடத்துவது எனத் தீர்மானித்தோம். உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கி 17 வது நாள் எமது ஒத்துழையாமைப் போராட்டம் ஆரம்பமானது. நாம் எமது விடுதிகளில் இருந்தும் கூண்டுகளில் இருந்தும் வெளியே வந்து உள்ளே செல்ல மறுத்தோம். பின்னர் இரவு பகலாகக் காரியாலயத்தின் முன்னால் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தோம்.

அன்று 22 ஏப்ரல் 1986 காலை நேரம். புறக்கோட்டை பஸ்தரிப்பு நிலையக் குண்டு வெடிப்பு நடைபெற்ற மறுநாள். எமது சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தின் 18வது நாள். நாம் சத்தியாக்கிரகம் இருந்த காரியாலயத்திற்கு அருகே இருந்த உயரமான மதில் ஒன்று தான் எமது விடுதியை வெலிக்கடை பிரதான சிறைச்சாலையிலிருந்து பிரித்தது. எமது தமிழ் விடுதியில் 176 அரசியல் கைதிகள் மாத்திரமே இருந்தோம். அச்சுவருக்கு மறுபுறத்தில் சுமார் 3000 சிங்களக் கைதிகள் இருந்தனர். அவர்களில் பயங்கரமான குற்றச் செயல்களில் ஈடுபட்டு மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளும் அடங்குவர். அந்த வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை, டொக்டர் ராஜசுந்தரம் உட்பட 53 தமிழ்க் கைதிகளை 1983இல் படுகொலை செய்த கறைபடிந்த வரலாறு உண்டு. அந்தக் கறைபடிந்த வரலாறைத் தமது இரத்தம் தோய்ந்த கொடிய கரங்களால் எழுதிய பல அதிகாரிகளும் கைதிகளும் இன்னும் அங்கிருந்தனர்.

திடீரென அந்தச் சுவர் உடைக்கப்படும் ஓசை கேட்டது. எம்மைப் பாதுகாக்க வேண்டிய சிறைச்சாலைக் காவலர்கள் காரியாலயத்தை மூடிவிட்டு ஓடிவிட்டனர். அதனைத் தொடர்ந்து காவலரணில் இருந்த காவலாளிகள் எம்மை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். எம்மீது கண்ணீர்ப்புகைவெடி



பிரயோகிக்கப்பட்டது. சிறைச்சாலைக் காவலர்களின் அனுசரணையோடு ஆயுத அறையை உடைத்து, கத்தி, கோடரி, அலவாங்கு சகிதம் தடைச்சுவரை ஒரு பகுதியினர் தகர்த்துக் கொண்டு எமது தமிழ் விடுதிக்குள் நுழைய முயன்றனர். இன்னுமொரு பகுதியினர் தமது கூரைமீது ஏறி நின்று கொண்டு ஓடுகளை உடைத்து எம்மீது வெறித்தனமாக எறிந்தனர். அவர்கள் எறிந்த கற்களையும் கூரை ஓடுகளையும் எம்மில் சிலர் கெரில்லா பாணியில் பதுங்கி ஊர்ந்து சென்று திரட்டி வர, கல்லெறிவதில் திறமை வாய்ந்த சிலர், குறிதவறாமல் எதிர்த்தாக்குதல் நடத்தினர். அந்த ஜீவமரணப் போராட்டத்தில் அவர்களது கைகளிலிருந்து புறப்பட்ட ஒவ்வொரு கல்லும் ஓட்டுத்துண்டும் செல்லைப் போல வீச்சுடன் இலக்குகளைத் தாக்கின. உயரமான காவலரணிலிருந்து எம்மை நோக்கிச் சுட்ட சிறைச்சாலைக் காவலர்களின் கைகளிலிருந்து துப்பாக்கிகள் கீழே விழுந்தன. இத்திடீர்த் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாமல் அவர்கள் ஓட்டம் பிடித்தனர். விடுதியின் கதவுகளையும் ஜன்னல்களையும் உடைத்து ஆளுக்கொரு பொல்லைக் கையில் எடுத்துக் கொண்டு அனைவரும் சமர்க்களத்தில் இறங்கினோம்.

உண்ணாவிரதத்தை நாமே முடிவுக்குக் கொண்டு வந்தோம். உண்ணாவிரதிகளின் நிலைமையும் அவர்களது பாதுகாப்பும் எமக்குக் கவலையளித்தன. அவர்களில் பெரும்பாலானோர் எழுந்து நடக்கவோ வாய் திறந்து பேசவோ முடியாமலிருந்தனர். அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதில் டொக்டர் சாந்தகுமார் (நேத்தாஜி) முழுமையாக ஈடுபட்டார். அடுத்தடுத்த வாரங்களில் இணைந்த சில உண்ணாவிரதிகள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டதும் கையில் பொல்லுகளுடன் சமர்க்களத்துக்குள் நுழைந்தனர். அவர்களில் தாடிக்கார சுரேஷ் தள்ளாடியபடி பிறர் தடுத்தும் கேளாமல் நாமிருந்த தாக்குதல் குவிமையப்பகுதிக்கு வந்து எம்முடன் இணைந்து கொண்ட காட்சியை இன்னும் என்னால் மறக்கமுடியவில்லை. ரெலோ இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான குரு, கடற்புலிகள் பிரிவுக்கு ஒருகாலத்தில் பொறுப்பாயிருந்த அழகம்மான், ஈபீஆர்எல்எப் இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான சுகு, ஈரோஸ் இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான கமலேஸ்வரன், புளொட் இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான சத்தியமூர்த்தி, நாகப்படைத் தலைவரான சிறிபத்மன் ஆகியோர் எமது அணியின் தாக்குதல் பிரிவுக்குத் தலைமை தாங்கினர். டொக்டர் நேத்தாஜி, நகுலன் (கீரன்), சுகு, நான் உட்பட ஐவர் கொண்ட குழு ஒன்று இப்போராட்டத்தை நெறிப் படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது முதிர்ந்த தோழர்கள் கூட உண்ணாவிரதிகளைக் கவனித்தும், கற்களைச் சேகரித்தும் தமது பங்களிப்பைச் செலுத்தினர். வண. பிதா சிங்கராயர் ஒரு வாளியில் தண்ணீரையும் மறு கையில் துணித்துண்டையும் எடுத்துக் கொண்டு பம்பரமாகச் சுழன்றார். கண்ணீர்ப் புகையின் எரிச்சலில் இருந்து விடுபடுவதற்கு முகத்தைக் கழுவிக் கொள்வது சிறந்த நிவாரணம். அதைத்தான் அவர் செய்து கொண்டிருந்தார்.

என்னால் மறக்கமுடியாத இன்னும் இரண்டு சம்பவங்கள் அன்று நடைபெற்றன. ஒன்று, கடைசியாக உண்ணாவிரதத்தில் குதித்த தோழர்கள் கூட அந்த ஜீவமரணப் போராட்டத்தில் கலந்து கொண்டபோது எமக்கெல்லாம் மல்யுத்தப்பயிற்சி வழங்கிய பிரபல சாண்டோ மாஸ்டர் ஒருவர் மாத்திரம் ஓடிப்போய் மலசலகூடத்தில் ஒழிந்து கொண்டார். இரண்டாவது சம்பவம் சுத்த இராணுவக் கண்ணோட்டம் எத்தனை ஆபத்தான ஒன்று என்பதை உணர்த்தும் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது. எமக்கு வழங்கப்பட்ட உணவு வெலிக்கடைச் சிறையின் மறுகோடியில் சிங்களக் கைதிகளால் சமைக்கப்பட்டு தமிழ்விடுதிக்குக் கொண்டு வரப்பட்டு சிங்களக் கைதிகளால் பரிமாறப்படும். இவ்வாறு எமது உணவைக் கொண்டு வந்து பரிமாறுவதற்கும், முற்றத்தைக் கூட்டிப் பெருக்குவதற்கும் குறகிய காலத் தண்டனை பெற்ற சிங்களக் கைதிகள் நாலுபேர் எமது தமிழ் விடுதியில் தனியான ஓர் அறையில் தங்கியிருந்தனர். அவர்களைப் "பார்ட்டி" என்றழைப்பது வழக்கம். இந்த அமளியில் நாம் அவர்களை மறந்து விட்டோம். திடீரெனத் தசரதன் என்ற தோழர் மூச்சுத்திணறும் வேகத்தில் ஓடோடி வந்தார். அந்த பார்ட்டிமாரைக் கொல்ல எம்மில் சிலபேர் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவலைக் கூறினார். அவ்வளவு தான் தசரதனும் நானும் இன்னும் சிலரும் அவ்விடத்திற்கு விரைந்தோம். இன்னும் சிறிது நேரம் தாமதித்திருந்தால் கூட அங்கு அந்தச் சிங்களக் கைதிகள் கொலை செய்யப்பட்டிருப்பர். அதன் விளைவு பாரதூரமானதாக இருந்திருக்கும்.

வழமையாக, சாந்தமாக இருக்கும் நாலைந்து தோழர்கள் அங்கு இருந்த ஆவேசகோலம் என்னை ஆச்சர்யம் கொள்ள வைத்தது. நான் தடுத்தும் கேளாமல் யாரும் எம்மைக்கட்டுப்படுத்த முடியாது என அவர்கள் ஆக்ரோசமாகக் கூறினர். உடனே தசரதனுக்குக் கோபம் வந்து விட்டது. கையிலே இருந்த பொல்லை அவர்களது முகத்தின் முன்னால் நீட்டி யாராவது ஒரு அடி முன்னால் எடுத்து வைத்தால் என்னநடக்கும் என்று எனக்கே தெரியாது எனக் கர்ச்சித்தார். அவரது அரசியல் கலந்த வீரம் அவர்களைப்



பின்வாங்கச் செய்தது. "இந்த நேரத்தில் எமக்குள் மோதல் வேண்டாம், முதலில் வெளியிலிருந்து வரும் ஆபத்திற்குக் கூட்டாக முகங் கொடுப்போம். பிறகு வேண்டுமானால் நீங்கள் எம்மை விமர்சிக்கலாம். இப்போது கட்டுப்படுங்கள்" என வினயமாக நான் கூறியதும் அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டனர். தசரதன் தலைமையில் வேறு சில தோழர்களையும் அந்த சிங்களக் கைதிகளின் பாதுகாப்பிற்காக வைத்து விட்டு நாம் மீண்டும் சமர்க்களத்தில் இறங்கினோம்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் இடைவிடாமல் நாம் எமது உயிருக்காகப் போராடினோம். இதற்கிடையில் எம்மத்தியில் சிக்கிக் கொண்டு உயிருக்காக நடுங்கிக் கொண்டிருந்த அந்த நான்கு சிங்களக் கைதிகளுக்கு எம்மத்தியில் உள்ள வேறு யாரிடமிருந்தாவது உயிராபத்து வரலாம் என்ற சந்தேகம் எமக்குள் எழுந்தது. ஆகவே அவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வந்து சிறைக்கதவைத் திறந்து வெளியே காரியாலயத்திற்கு அனுப்பி வைத்தோம். அந்த விடயம் அவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என நாம் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் - குட்டிமணியை முன்னர் அவர்கள் கண்ணைத் தோண்டி, ஆண்குறியை வெட்டி குரூரமாகக் கொலை செய்ததைப் போல அதற்கு பழிக்குப் பழி வாங்கும் விதத்தில் - இந்த நான்கு சிங்களக் கைதிகளையும் நாம் குரூரமாக படுகொலை செய்து விட்டதாக ஒரு வதந்தி சிங்கள கைதிகள் மத்தியிலும் அங்கு அவசர கடமைக்காக அழைக்கப்பட்ட இராணுவத்தின் மத்தியிலும் பரவி ஒரு கொந்தளிப்பான நிலைமை உருவானது. இவர்கள் உயிரோடு அங்கு சென்றதும் அந்தப் பதட்டம் தணிந்தது. மனிதாபிமானமுள்ள உயர் அதிகாரிகள் சிலரால் அதன் பின்னரே எம்மைக் காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட முடிந்தது. அப்போது பிரதி சிறைச்சாலை ஆணையாளராக இருந்த திரு. தருமதாச தலைமையில் ஒரு அதிகாரிகள் குழு வந்து நிலைமை கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது எனக்கூறி எம்மை உடனடியாக வெளியே பாதுகாப்பாக அழைத்துச் சென்று நாலந்த கல்லூரியில் தங்க வைத்தனர். அவர்கள் சிங்களக் கைதிகள் பாதுகாப்பாக வெளியே வரும்வரை தாம் ஒரு தர்மசங்டமான நிலையில் இருந்ததை விளக்கினர்.

அதன்பிறகு நாம் அனுபவித்த கசப்பான அனுபவங்களை எல்லாம் விபரிப்பது இங்கு பொருத்தமற்றது. இங்கே நான் கூறவந்த விடயம் இதுதான்: நாம் வெலிக்கடைச் சிறைச்சாலையை விட்டு ஆபத்தான அந்தச் சூழலில் உடுத்த உடையோடு உண்ணாவிரதிகளைச் சுமந்தபடி வெளியேறிய போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அறிவுப் பொக்கிஷங்களை - எமது நூல்கள் எமது ஆய்வுகள் - எதையும் மீட்டுவர அவகாசம் இருக்கவில்லை. நாம் பஸ் வண்டியில் ஏற்றப்பட்டு நாலந்த கல்லூரிக்குக் கொண்டு செல்லப்படும்போது நாம் தங்கியிருந்த வெலிக்கடை தமிழ் விடுதி தீவைத்துக் கொளுத்தப்பட்டு சுவாலையுடன் எரிவதைக் கண்டோம். நாம் திரட்டிய அறிவுச் செல்வமும் அந்தக் கரிய புகைமண்டலத்தில் கலந்து சங்கமித்ததை உணர்ந்த போது இனி இழப்பதற்கு இதற்குமேல் என்ன இருக்கிறது என மனம் இடிந்து போனது.

தோழர் அசோக்கிற்கு அத் தலைப்பைக் கொடுத்த பின்னர் அதுவரை அவ்வப்போதெல்லாம் நேரம் கிடைக்கும் போது தொடர்ந்த அவ்வாய்வைத் தொகுக்கலானேன். அப்போது சற்றும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடைபெற்றது. திடீரென ஒருநாள் தோழர் சுரேஷ் தொலைபேசியில் என்னோடு தொடர்பு கொண்டார். கதைவாக்கில் எனது அந்த ஆய்வின் பிரதி ஒன்று தன்னிடம் இருப்பதாகக் கூறினார். அதைக் கேட்டதும் எனக்கேற்பட்ட மகிழ்ச்சியை விபரிக்க வார்த்தைகள் கிடையாது. அதன் பிரதி ஒன்று இரண்டு நாட்களில் எனக்குத் தபாலில் வந்து சேர்ந்தது. அதனால் எனது பணி எளிதாக நிறைவேறியது.

22 ஜுன் 2003 அன்று குறிப்பிட்டபடி கருத்தரங்கு பரிஸில் ஆரம்பமானது. தோழர்கள் த.தர்மகுலசிங்கம் (டென்மார்க்) க.தணிகாசலம் (இலங்கை) வி.சிவலிங்கம் (இங்கிலாந்து) ஆகியோருடன் நானும் கருத்துரை நிகழ்த்தினேன். அங்கு நான் நிகழ்த்திய உரைக்காக தயாரிக்கப்பட்ட குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டே இந்நூல் எழுதப்பட்டது.

எனது "சுயம் - நிர்ணயம் - உரிமை" என்ற நூல் எதிர்பாராத வரவேற்பைத் தமிழ் அரசியல் அறிவுலகில் பெற்றது. அதன் வெளியீட்டுப் பொறுப்பைச் சிறப்பாக செய்த அப்பால் தமிழ், இந்நூலையும் வெளியிட உற்சாகத்துடன் முன்வந்ததும் எழுதுவது மாத்திரந்தான் எனது பணி மற்றபடி எல்லா வெளியீட்டுச் சுமைகளையும் அப்பால் தமிழ் தோழர் கி.பி.அரவிந்தனும் அவரது தோழர்களும் எனக்கெந்த தொல்லையும் தராமல் செவ்வனே செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்நூலை எழுதத் தொடங்கினேன். வழமை போல தோழர் தீபன் தனது வேலைக்கு லீவு போட்டுவிட்டு சொன்ன நேரத்திற்கு சொன்ன இடத்திற்கு சிரித்த முகத்துடன் வந்து பல நாட்கள் என்னுடன் தங்கி இந்நூலை எழுதித் தந்தார். நான் சொல்லுவதை அப்படியே பிரதி செய்யும் எழுதுவினைஞரைப் போல அவர்



நடந்து கொள்ளவில்லை. நான் சொல்வதில் ஏதும் மயக்கங்கள் இருந்தால் அல்லது மாற்றுக் கருத்து இருந்தால் எழுதுவதை நிறுத்தி விட்டு விளக்கம் கேட்பார். சில சமயம் விவாதிப்பார். எனவே எனது எழுத்து செம்மை பெறுவதிலும் அவரது பங்களிப்பு நிறையவே இருந்தது.

இந்நூலை எழுதும் போது எனது "சுயம் - நிர்ணயம் - உரிமை" நூலை வாசித்து விட்டு சில தோழர்கள் முன் வைத்த ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் நான் கவனத்தில் எடுத்துக் கொண்டேன். தோழர் சிறிகாந்தன் அந்நூலில் இலங்கை வாழ் முஸ்லீம்களைப் பற்றி ஒரு வசனம் கூட எழுதப்படவில்லை என்ற குறையைச் சுட்டிக்காட்டினார். தோழர்கள் வேலு- தணிகாசலம் ஆகியோர், சுய நிர்ணய உரிமையை மதித்த இரு பெருந்தலைவர்களாக லெனினையும் அமெரிக்க ஜனாதிபதி வில்சனையும் சமநிலையில் வைத்து விபரித்திருப்பதைப் போன்ற மயக்கமொன்று அந்நூலில் இருப்பதாகவும் அதில் லெனின் வகித்த பாத்திரம் உயர்வானது என்பது தெளிவாகக் கூறப்படவில்லை எனவும் குறிப்பிட்டனர். அவ்விமர்சனங்கள் சரியானவை. அக்குறைகளைச் சுட்டிக்காட்டியதற்காக அவர்களுக்கு எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தவறுகள் இந்நூலில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எழுதப்பட்ட பிரதி திருமதி சிவரஞ்சனி அவர்களின் கைகளுக்குச் சென்றது. அப்போது தான் அவர் கடுமையாக நோயினால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து தேறிக் கொண்டிருந்தார். எனினும் வழமையான மலர்ந்த முகத்துடன் எழுத்துப்பிரதியை கணினியாக்கம் செய்து தந்தார். அவர்காட்டிய ஆர்வம் எமக்கெல்லாம் ஒருவகை புது உற்சாகத்தைத் தந்தது.

இந்நூல் பிரதியை பல தடவைகள் திரும்பத் திரும்ப வாசித்து அச்சுப்பிழை எழுத்துப் பிழைகளைப் பொறுமையோடு திருத்திய பணி தோழி சுமத்திரியுடையது. இந்நூலின் வசன அமைப்புகளை - எனது அனுமதியுடன்- ஆங்காங்கு செப்பனிட்டு தோழர் கி.பி.அரவிந்தன் புது வீச்சை ஏற்படுத்தியுள்ளார்.

இவர்கள் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்கள்.

**பி.ஏ,காதர்**
**லண்டன், 10-10-2003**
தொடர்புகளுக்கு: bakader6@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம் :


| | | |
|---|---|---|
| வெளியீட்டாளர் குறிப்புக்கள் | | iii |
| ஆசிரியர் உரை | | V |
| தேசம், தேசியம் வளர்ந்த வரலாறு | பக்கம் | 1 |
| சர்வதேச தேசிய இயக்கங்களின் வளர்ச்சியில் பல்வேறு காலகட்டங்கள் | பக்கம் | 10 |
| இலங்கையின் தனித்துவ நிலைமை இன்றைய உலகில் இலங்கையின் முக்கியத்துவம் | பக்கம் | 58 |
| சில முன் மொழிவுகள் தமிழ் பேசும் தேசியங்களின் ஒன்றிணைந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது எவ்வாறு? | பக்கம் | 70 |
| நூலாசிரியர் பற்றி..................... | பக்கம் | 79 |
| குறிப்புக்கள் | பக்கம் | 80 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 1

## தேசம், தேசியம் வளர்ந்த வரலாறு

தேசங்களோ, தேசியங்களோ கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றியவை அல்ல. மூலதனத்துவ (முதலாளித்துவ) புரட்சிக்கு முன்னர் உலகில் எந்தப் பாகத்திலும் நிலையான தேசங்கள் உருவாகவில்லை.

வாலில்லாக் குரங்கிலிருந்து (பிதிகன்த்ரோபஸ் இரக்ட்ரஸ்) உழைப்பால் உருமாறிய மனிதர் வரை மனிதராக வாழும் காலத்திலிருந்தே அவர்கள் ஒரு சமூகமாக வாழ்ந்து வந்தனர். சமூக வாழ்க்கை என்பது அநேகமாக அனைத்து உயிரிகளுக்கும் பொதுவான ஒன்று. காட்டிலே துள்ளித்திரியும் புள்ளிமான் கூட்டமாயினும் சரி, வானத்தில் சிறகடித்துப் பறக்கும் புறாக் கூட்டமாயினும் சரி, நீரில் நீந்தி விளையாடும் சுறா மீன் கூட்டமாயினும் சரி அவை சமூகமாகவே வாழ்கின்றன. மனிதர் மாத்திரம் இதற்கு விதிவிலக்கல்ல.

பிரடெரிக் ஏங்கெல்ஸ் தனது "வாலில்லாக் குரங்கிலிருந்து மனிதரை மனிதராக உருமாற்றியதில் உழைப்பின் பாத்திரம்" என்ற நூலில் ஏனைய விலங்குகள் உழைப்பதில்லை, வாலில்லாக் குரங்கு நிலையிலிருந்த ஆரம்ப மனிதர் உழைக்கத் தொடங்கிய போது தான், அவர்கள் ஏனைய விலங்கிலிருந்து வேறுபட்ட வளர்ச்சியடைந்த நவீன விலங்காக அதாவது மனிதராக உருமாறினர் என்பதைத் தெளிவுபட விளக்கியுள்ளார். உழைப்பால் மனிதரின் கரங்கள் தேர்ச்சி பெற்றன. உழைப்பால் கரங்கள் நுட்பம் பெறுமளவிற்கு மூளை வளர்ச்சியடைந்தது.

விலங்குலகத்திலிருந்து மனிதரை விடுவித்தது மனிதரின் உழைப்பு ஒன்று தான். ஒவ்வொரு மனிதருக்கும் இடையேயான சமூக உறவும், இயற்கையுடனான உழைப்புப் போராட்டமும், மனிதரது உடலமைப்பை மாத்திரம் அல்ல சமூகத் தன்மையையும் பரிணாமம் கொள்ளச் செய்தது. ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிப்பதற்கு அல்லது செயலைக் குறிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட ஓசையை வானர மனித சமூகம் எழுப்பத் தொடங்கியது. பரம்பரை பரம்பரையாக குறிப்பிட்ட ஓசை ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிப்பதாக நிலைக்கத் தொடங்கியது. பின்னர் அக்குறிப்பிட்ட ஓசையைக் குறிப்பதற்கு சில குறியீடுகளை அவர்கள் வரையத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளடைவில் இவ்வோசைகள் பேச்சுகளாகவும், குறியீடுகள் எழுத்துகளாகவும் பரிணமித்து மொழி உருவானது. இவ்வாறு வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்த வெவ்வேறு மனித சமூகங்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசத் தொடங்கின. அவ்வவ் சமூகங்கள் வாழ்ந்த சுற்றாடல் சார்பு நிலைக்கேற்ப அவர்களது வாழ்க்கை முறையும் உருவ அடையாளங்களும் வேறு படத் தொடங்கின. பேச்சு வடிவில் குழந்தைப் பருவத்திலிருந்த மொழி, எழுத்து வடிவம் பெறத் தொடங்கிய பின்னர் புரட்சிகர மாற்றங்களுக்குள்ளாகி வேகமாக வளர்ச்சி பெறத் தொடங்கியது.

காடுகளிலே உணவு தேடி அலையும் போது உடலில் முட்புதர்களும் பற்றைகளும் காயத்தை ஏற்படுத்தின. அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இலைகுழைகளாலும் மிருகங்களின் தோல்களாலும் தமது உடலை மறைக்கத் தொடங்கினர். நாளடைவில் இத்துறை வளர்ச்சியடைந்து ஆடையாகப் பரிணமித்தது. ஆண் - பெண் உடல் அமைப்பு வேறுபாட்டிற்கு ஏற்பவும், காலநிலை வேறுபாட்டிற்கேற்பவும், தாம் செய்யும் தொழிலுக்கு இசைவாகவும், சமூகத்தில் தான் வகிக்கும் அந்தஸ்தை வெளிப்படுத்தும் விதத்திலும், -இப்படியான பல அம்சங்களை வெளிப்படுத்தும் விதத்திலே- ஆடைக்கலை, வளர்ச்சி பெறத் தொடங்கியது.

ஆரம்பத்தில் மரத்தின் மீதும் கல்லிடுக்குகளிலும் குகைகளிலும் வாழ்ந்த மனிதர் குடில்களை அமைக்கத் தொடங்கினர். இவை நாளடைவில் வீடுகளாகப் பரிணமித்தன. தாம் காடுகளில் சேகரித்த தானியங்களும் தாம் சாப்பிட்டுவிட்டு எறிந்த பழங்களின் விதைகளும் முளைப்பதைக் கண்ட மனிதர் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கி நீருள்ள ஆற்றங்கரைப் பகுதிகளில் குடியேறத் தொடங்கினர். இது படிப்படியாக அவர்களது நாடோடி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. தொடர்ச்சியாக அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் பரம்பரை பரம்பரையாக அச்சமூகம் பதித்த அடையாளங்கள் நிர்மாணங்களாக வடிவெடுத்தன. நீர்ப்பாசன முறை நடைமுறைக்கு வந்தது. இவ்வாறு உற்பத்தியோடு சேர்ந்தே மனிதகுலம் வளர்ச்சியடைந்தது.

வானர மந்தைக் கூட்டமாக மனிதகுலம் வாழ்ந்த ஆரம்ப காலத்தில் அவர்களால் இனங்காணக்கூடிய உறவுமுறை எதுவும் வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. எந்த ஆடவரும் எந்த மகளிரோடும் புணரலாம் என்ற நிலைமை காணப்பட்டதால் பிறந்த குழந்தைக்கு யார் தந்தை என்பதையே இனம்காண முடியாமலிருந்தது. ஆனால் பெற்ற தாயை மாத்திரம் இயற்கை இனம் காட்டியது. இதனால் பெண்களே உறவின் அடித்தளமாகவும் தாயே தார்மீக அதிகாரம் கொண்டவளாகவும் அச்சமூகத்தில் திகழ்ந்தாள். அத்துடன் ஆண்களைப் போலவே பெண்களும் உழைப்பில் சமமாகப் பங்கு கொண்டதாலும் அம்மனித மந்தைகள் கூட்டாகத் திரட்டிய உணவுப் பொருட்களை நிர்வகிப்பது, பராமரிப்பது, பங்கிடுவது போன்ற பணிகள் அம்மந்தை கூட்டத்தின் மூத்த தாயின் தலைமையிலே பெண்களின் கட்டுப்பாட்டில் இருந்தபடியாலும் பெண்களுக்கு அச்சமூகத்தில் உயர் அந்தஸ்து காணப்பட்டது. இது "தாய்வழிச் சமூகம்" என சமூகவியலாளர்களால் அழைக்கப்படுகிறது. இச்சமூகங்கள் இரத்த உறவை அடிப்படையாகக் கொண்டிருந்தன. எனவே இது கணம் (Clan) என வரையறுக்கப்படுகிறது. காலப்போக்கில் தாய்வழிக் கணங்கள் பெருகி அவை கூட்டாக வாழ நேர்ந்தன. இத்தகைய கூட்டுக் கணவாழ்க்கை கொண்ட சமூகம், கோத்திரம் எனப்படுகிறது.

வளர்ச்சியடையாத ஆரம்ப சமூகத்தில் ஒரு கோத்திரம் இன்னொரு கோத்திரத்தை இயல்பாகவே எதிரியாகக் கருதியது. ஒவ்வொரு கோத்திரமும் ஏனைய கோத்திரங்கள் தமக்கு சொந்தமான இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதாகக் கருதின. இதற்குக் காரணம் இயற்கையாகவிருந்த வளங்களைப் பல சமூகங்கள் உற்பத்தி செய்யாமல் நுகரும் பொழுது ஏற்படுகின்ற பற்றாக்குறைக்கு பரிகாரம் காணப்படாமையே ஆகும். ஆகவே பலமான ஒரு கோத்திரம் பலங்குன்றிய கோத்திரங்களைத் தாக்கி அழித்தது, அல்லது கடும் உணவுப் பற்றாக்குறை நிலவும் போது, பிடித்துச் சாப்பிட்டது. இதனால் மனிதமாமிசம் உண்ணும் வழக்கமும் இரத்தப் பலி கொடுக்கும் வழிபாட்டு முறையும் நரபலியும் தோன்றியது.

மிருகங்களை மாத்திரமல்ல ஏனைய கோத்திரங்களை மோதி அழிப்பதற்கும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் கூட ஆயுதங்கள் செம்மை பெற வேண்டியிருந்தன. விவசாயம் உருவாகத் தொடங்கிய பின்னர் நிலத்தைத் தோண்டுவதற்கும் விளைச்சலை அறுவடை செய்வதற்கும் ஆயுதங்கள் தேவைப்பட்டன. கல்லும், பொல்லும், புல்லும் ஆயுதமாக இருந்த நிலைமாறி உலோக ஆயுதங்கள் உருவாகத் தொடங்கின. கருவிகள் நுட்பம் பெறும் அளவிற்கு உழைப்பின் வினைத்திறன் அதிகரிக்கத் தொடங்கியது. உற்பத்தி வளர்ச்சி பெற்ற போது, உதாரணமாக நீர்ப்பாசனத் துறை நடைமுறைக்கு வந்த பின்னர் ஆள் பற்றாக்குறை தோன்ற ஆரம்பித்தது. எனவே பலவீனமான கோத்திரங்களை அழித்தொழிப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பிடித்துச் சாப்பிடுவதை விடுத்து அவற்றை அடிமைப்படுத்தித் தமக்கு குற்றேவல் புரியவைக்கும் அடிமைச் சமூகம் அரங்கிற்கு வந்தது.

ஒவ்வொரு கோத்திரமும் தனது குலத் தலைவிக்குக் கட்டுப்பட்டது. குலத்தலைவிகள் இறந்த பின்னரும் குலத்தலைவிகளை வழிபடும் போக்கு நிலவியது. தங்களை குலத்தலைவிகளின் ஆவிகள் பல்வேறு வடிவங்களில் வந்து காப்பாற்றுவதாக அவர்கள் நம்பினார்கள். மதநம்பிக்கைக்கும் கடவுள் நம்பிக்கைக்கும் இவை வழிவகுத்தன.

மனிதன் தான் வேட்டையாடிய மிருகங்களின் எலும்புகளை எறிந்த போது அவற்றை உண்பதற்கு வந்த நாய்களும் பூனைகளும் அவர்களது நண்பர்களாயின. இவற்றிலிருந்து மிருக வளர்ப்புக்கான ஆரம்ப பாடத்தை மனிதர் கற்றனர். மனிதர் தாம் வேட்டையாடிய மிருகங்களைச் சுமந்து வரும் போது அவற்றின் குட்டிகள் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தன. நாளடைவில் அவற்றை வளர்த்துத் தேவையான போது உணவாக உட்கொள்ளவும் அவற்றைப் பழக்கி விவசாயத்தில் ஈடுபடுத்தவும் அவர்கள் கற்றுக் கொண்டனர். வளர்ப்பு மிருகங்கள் குட்டி போட்டு பெருகத் தொடங்கியவுடன் கால்நடைவளர்ப்பு ஒரு தொழிலாக உருவாகத் தொடங்கியது. அதுவரை இயற்கையில் கிடைத்த அனைத்தையும் பொதுவாக தமக்குள் பகிர்ந்து கொண்டு தமது சமூகத்தின் பொதுத் தேவைக்காக தனது உழைப்பைப் பயன்படுத்திய மனிதர் வாழ்ந்த அந்த சமூகம் "ஆதிப் பொதுவுடைமைச் சமூகம்" என சமூகவியலாளர்களால் அழைக்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்பு உருவானதோடு முதல் தடவையாகத் தனிச் சொத்துடைமை மனித சமூகத்தில் அறிமுகமாகியது. மிருகங்களைப் பிடிப்பதிலும் மிருகங்களைப் பழக்குவதிலும் ஆணின் பலம் பெண்களை மிஞ்சியதால் அவனே அத்தனிச் சொத்தின் அதிபதியானான். அடிமைகளைப் பிடிப்பதிலும் அவர்களை அடக்கிப் பணிய வைப்பதிலும் பிற கோத்திரங்களிலிருந்து தனது கோத்திரத்தைப் பாதுகாப்பதிலும் ஆணின் பலம் கூடுதலான பாத்திரத்தை வகிக்கத் தொடங்கியது. அடிமைகளாகப் பிடிக்கப்பட்ட மனிதர்களும் பலசாலிகளின் தனிச் சொத்துகளாக கருதப்பட்டனர். எனவே தனிச் சொத்துரிமையோடு ஆணாதிக்கம் கோலோச்சத் தொடங்கியது. பிடிக்கப்பட்ட பிற கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்ட அடிமைகளாக விலங்குகளைப் போல வேலை வாங்கப்பட்டனர். பெண்கள் படிப்படியாக உற்பத்தியிலிருந்து பிரிக்கப்பட்டு





விலங்கிடப்படாத வீட்டடிமைகளாக மாற்றப்பட்டனர். பெண் என்பவள் ஆண்களின் தனிச் சொத்தானாள். அவள் தனது வீட்டு எசமானுக்கு - கணவனுக்கு விசுவாசமாக குற்றேவல் புரிந்து அவனால் மாத்திரம் குழந்தை பெற்றுத்தர வேண்டிய சம்பிரதாயத்திற்கு உட்படுத்தப்பட்டாள். இப்பொழுது தந்தை தனது மகனை இனம் கண்டு தனது சொத்துகளையும் அதிகாரத்தையும் அவனிடம் கையளிக்கும் தந்தைவழிச் சமூகம் உருவானது. பலம் வாய்ந்த குலத் தலைவர்கள் பல கோத்திரங்களை வெற்றி கண்டு அவற்றை அடிமைப்படுத்தி பெரும் குலத் தலைவராகவும் பின்னர் குட்டி அரசராகவும் மாறுகின்ற நிலைமை உருவானது. இம் மாற்றங்கள் யாவும் ஓரிரு தசாப்தங்களில் நடந்தேறியவை அல்ல. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் மெது மெதுவாக நடந்தேறிய மாற்றங்களாகும். இதுவே "பரிணாமம்" என அழைக்கப்படுகின்றது.

மறுபுறத்தில் மனித சமூகங்கள் நீண்ட காலமாக பரம்பரையாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழ்ந்து அதன் காலநிலை பாதிப்பிற்கும் சுற்றாடல் ஈர்ப்புக்கும் உள்ளாயின. இதற்குக் காரணம் இச்சமூகங்களைச் சூழ்ந்திருந்த இயற்கைத் தடைகளை (உதாரணம் - கடல், உயர்ந்த மலை, விரிவான சதுப்பு நிலம், பெரும் ஏரிகள், ஆழமான ஆறுகள் போன்றவை) வெற்றி கொள்ளுமளவிற்குக் கருவிகள் இன்னும் வளர்ச்சி பெறாமையேயாகும்.

நாளடைவில் நீரில் மரங்கள் மிதப்பதைக் கண்ட மனிதர் கட்டுமரங்களைக் கட்டினர். பின்னர் படகுகள் உருவாகி பாய்மரக்கப்பலாக உருமாறின. விலங்குகளை விவசாயத்தில் ஈடுபடுத்திய மனிதர் அவைகளைப் போக்குவரத்திற்கும் பயன்படுத்தினர். இப்போக்குவரத்து வளர்ச்சி கருநிலையில் இயற்கைத் தடைகளை ஓரளவிற்கு மேவ வழிவகுத்தாலும் பெரும்பகுதி மக்கள் குறிப்பிட்ட பிரதேசத்தில் இயற்கைத் தடைகளுக்கு கட்டுபட்டு அதன் காலநிலையின் ஆளுமைக்குட்பட்டிருந்தனர். இதனால் அவர்களது உடல் அமைப்பில் இயற்கையின் முத்திரை ஆழமாகப் பதிந்தது. வெப்ப மண்டலப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான வருடங்களாக, தொடர்ச்சியாகச் சிறைபட்டு வாழ்ந்த மக்களின் உடலில் கருமை நிறம் ஆதிக்கம் செலுத்தியது. இவர்கள் கறுப்பின (Negroide) மக்களாகப் புறத் தோற்ற அடிப்படையில் இனம் காணப்பட்டனர். இடைவெப்பநிலை நிலவிய பகுதிகளில் நீண்ட காலம் வாழ்ந்த மக்களின் உடலில் வெண் சிவப்பு நிறம் செல்வாக்கு பெற்றதால் அவர்கள் வெள்ளை இனம் (Cogosoide) என அழைக்கப்பட்டனர். இதைப்போல மற்றொரு வேறுபட்ட புவியியல் சுற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பில் வாழ்ந்த மக்களின் புறத் தோற்றத்தில் மஞ்சள் நிறம் ஆதிக்கம் செலுத்தியதால் அவர்கள் மஞ்சள் இனத்தவர் (Mongoloide) என அழைக்கப்பட்டனர்.

இவ்வாறு மனித சமூகங்களின் புறத்தோற்ற வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு மனித சமூகத்தை அடையாளப்படுத்தும் முறைமையே இனம் (Race) எனப்படுகின்றது. இத்தகையை இனங்களின் புறத் தோற்றத்தில் சில துலக்கமான வேறுபாடுகள் காணப்பட்டாலும் பரம்பரை அலகின் மூலம் அவை அவற்றின் உயிரியல் தன்மைகள் சில, இன்னும் கடத்தப்பட்டுக் கொண்டிருந்தாலும் கூட உள் உருவ அமைப்பில் சகல மனிதர்களும் பொதுத்தன்மையையே கொண்டிருக்கிறார்கள். மனிதர்களின் புறத்தோல் எந்த வண்ணத்தைக் கொண்டிருந்தாலும் அவர்களுக்குள்ளே ஓடிக்கொண்டிருக்கும் குருதி, சிவப்பாகவே இருக்கிறது. ஒவ்வொரு மனிதருக்கும் புறத் தோற்றத்தில் வேறுபாடுகள் இருந்தாலும் பொதுத் தன்மையில் அனைவரும் ஒரே ஒழுங்கமைப்பையே கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் நெற்றிக்குக் கீழே தான் கண் இருக்கிறது. கழுத்திற்கு மேலே தான் தலை இருக்கிறது. இடுப்புக்கு கீழே தான் கால் இருக்கிறது. அதைப் போலவே ஒவ்வொரு சமூகத்தின் புறத் தோற்றத்திற்கும் பண்புகளுக்கும் இயல்புகளுக்கும் விஞ்ஞான ரீதியில் முடிச்சுப் போட இயலாது. இயற்கைத் தடைகள் பெருமளவிற்கு வெல்லப்பட்டு சனத்தொகை அதிகரித்து மக்களின் இடப்பெயர்வும் சமூகங்களின் இரண்டறக் கலப்பும் உத்வேகம் பெற்றிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இனம் (Race) என்ற சொல் அர்த்தமற்றதாக ஆகிவருகின்றது. இன்று உலகில் இனக்கலப்பில்லாத தூய இனம் எதையும் எங்குமே காண முடியாது. பனிப்படலத்தில் தனித்து வாழும் பிக்மிக்கள் மத்தியில் கூட பல இனக்கலப்புகள் காணப்படுவதை மானுடவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஹிட்லரினால் இனத் தூய்மை பற்றி பேசப்பட்ட ஜேர்மனியர்கள் மத்தியில் கூட பல்வேறு மனித இனக்குழுக்கள் சங்கமித்துக் கலவையாகி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே இன்று இன ரீதியில் மனித சமூகங்களை இனங்காண இயலாது.

மனித சமூகம் தனது பரிணாமத்தில் பல சமுதாய அமைப்புகளைக் கண்டிருக்கிறது. இவ்வாறு மனித குலம் கண்ட முதலாவது மனித சமூகம் ஆதிப் பொதுவுடைமைச் சமுதாயமாகும். இந்தச் சமூகத்தில் கோத்திரங்களும் குலங்களும் செல்வாக்குச் செலுத்தின. இம்மனிதர் தேசத்தையோ





மொழியையோ அடிப்படியாகக் கொண்டிராமல் தமது இரத்த உறவுகளை அடிப்படியாகக் கொண்டே அச்சமூகத்தில் வாழ்ந்தனர். அத்துடன் உணவு தேடியும், பிற கோத்திரங்களுக்கு அஞ்சியும், இயற்கை மாற்றங்களின் காரணமாகவும் இச்சமூகம் நிலையின்றி அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. ஆகவே நிலையான வளர்ச்சி பெற்ற சமூகமாக அது திகழவில்லை.

அதையடுத்து மனித குலம் கண்ட அடிமைச் சமூகத்தில் அடிமைகளைக் கொள்ளையடிக்கும் யுத்தங்களில் வெற்றி பெற்ற - ஆளுமைமிக்க பல அரசர்கள் (உதாரணம் - ஜீலியஸ் சீசர்) உருவாயினர். இவர்கள் தற்காலிகமாகச் சில பேரரசுகளை உருவாக்குவதில் வெற்றி பெற்ற போதும், அவை உட்பூசல் காரணமாகவும் அடிமைகளின் கிளர்ச்சி காரணமாகவும் விரைவிலேயே சரிந்தன. சிற்றரசுகளின் எல்லைகள் அடிக்கடி மாறின. ஆகவே நிலையான தேசங்கள் அப்போது உருவாகவில்லை. அடிமைகளின் உற்சாகமற்ற வேலையும் எஜமானர்களின் ஆடம்பர வாழ்க்கையும் சேர்ந்து அடிமைச் சமூகம் வீழ்ச்சியடைந்ததோடு அப்பேரரசுகளும் சிதைந்து போயின.

மனித குலம் கண்ட அடிமைச் சமூகத்தை விட வளர்ச்சியடைந்த சமூகமாக நிலப்பிரபுத்துவ சமூகம் விளங்கியது. இச்சமூக அமைப்பில் சங்கிலிக்குப் பதிலாக உழைப்பாளர்கள் நிலத்தால் பிணைக்கப் பட்டிருந்தார்கள். நிலம், நிலப்பிரபுகளுக்கும் அரசர்களுக்கும் சொந்தமானதாகக் கருதப்பட்டது. நிலமற்ற விவசாயிகள் பண்ணை அடிமைகளாக நிலப்பிரபுகளுக்குக் குற்றேவல் புரிந்தனர். பணம் புழக்கத்தில் இல்லாத அந்தச் காலகட்டத்தில் நிலப்பிரபுகளுக்குச் சொந்தமான ஒரு துண்டு காணி பண்ணை அடிமைக்கு வழங்கப்பட்டது. அதனை விவசாயம் செய்து பெறுகின்ற விளைச்சல் பண்ணை அடிமைக்கு சொந்தமானது. அதற்கு பிரதியீடாக எஜமானின் நிலத்தில் அவன் வருடம் முழுவதும் கூலியின்றி உழைக்க வேண்டியிருந்தது.

நிலப்பிரபுத்துவ சமுதாயம் நிலை பெற்ற காலத்தில் தான் உலக மதங்கள் பல உருவானதை நாம் காண்கிறோம். ஏனெனில் மொழிகளை விட, கலாசாரங்களை விட மதங்களைப் பரப்பி மதங்களின் பெயரால் நிலபிரபுத்துவ பேரரசுகளை உருவாக்கி விரிவாக்கிக் கொள்வது வலிமை பெற்ற அரசுகளுக்கு எளிதான - தேவையான விடயமாக இருந்தது. இதில் சுவாரசியமான ஒரு போக்கை அவதானிக்கலாம். கமத் தொழிலை ஆதாரமாகக் கொண்ட இந்தியாவில் உருவான இந்து மதம், பௌத்த மதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை ஜீவகாருண்யத்தைப் போதித்த அதே வேளை கால்நடை வளர்ப்பை ஆதாரமாகக் கொண்ட மத்திய ஆசியாவில் உருவான கிறித்துவ மதம், இஸ்லாமிய மதம், யூத மதம், போன்றவை மாமிச உணவை ஒரு கலாசாரமாக உருவாக்கியுள்ளதைக் காணலாம். இந்தியாவில் அன்று கமத்தொழிலுக்கு மிருகங்கள், இன்றைய டிராக்டர்களைப் போன்ற உழவு சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டமையால் அவற்றைப் பாதுகாக்க வேண்டிய தேவையிருந்தது. எனவே மதம் அதற்கு துணை சேர்க்கப்பட்டது. ஆனால் கால்நடை வளர்ப்பைப் பொருளாதாரமாகக் கொண்டிருந்த மத்திய ஆசியாவில் விலங்குணவைத் தடை செய்துவிட்டு அத் தொழிலை அபிவிருத்தி செய்ய முடியாத நிலைமையிருந்தது. ஆகவே அங்கு மதம் விலங்குணவை அங்கீகரித்து ஊக்குவித்தது.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் அரசன், அரச கடமை, அரச பக்தி என்பன பிரதான சித்தாந்தங்களாகத் திகழ்ந்தன. நில உடைமையாளர்களின் பாதுகாவலனாக அரசன் திகழ்ந்தான். நிலத்தைக் கொள்ளையடிக்கும் யுத்தத்தில் அரசனுக்குத் தேவையான படைகளை நிலபிரபுக்கள் தமது கொத்தடிமைகள் மத்தியிலிருந்து திரட்டிக் கொடுத்தனர். சனத் தொகை குறைந்த அன்றைய காலகட்டத்தில் ஆங்காங்கு சிதறி வாழ்ந்த மக்கள் கூட்டங்களும், தனிமையான நிலப்பிரதேசங்களும், கிராமிய பொருளாதாரமும், முறையான நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படவில்லை. போக்குவரத்துப் பாதைகளும் தொடர்பு சாதனங்களும் அவற்றை இணைக்குமளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. எனவே பேரரசர்களின் கீழ் ஆளப்பட்ட நிலப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் கூட மேலோட்டமாகவே ஒன்றிணைக்கப்பட்டிருந்தனர். ஆங்காங்கே சிற்றரசர்களால் நிர்வாகம் நடத்தப்பட்டன. நிலப்பிரபுத்துவ யுத்தங்கள் இடையறாது தொடர்ந்தன. ஆகவே அரசின் எல்லைகள் சுருங்கியும், விரிந்தும், மாறியும், மறைந்தும் நிலையற்றுக் காணப்பட்டன. ஆகவே நிலப்பிரபுத்துவ காலகட்டங்களில் நிலையான மத்தியப்படுத்தப்பட்ட அரசுகள் உருவாகியிருக்கவில்லை.

மூலதனத்துவப் புரட்சி ஏற்பட்ட பின்னரே உற்பத்திச் சாதனங்கள் வளர்ச்சியுற்று மத்தியப்படுத்தப்பட்ட நிலையான தேசங்களுக்கான அடிப்படைகள் உருவாகின. போக்குவரத்துச் சாதனங்களும், தொலைத் தொடர்புச் சாதனங்களும், முன்னேறிய நிர்வாக முறையும் வளர்ச்சியுற்றன. மூலதனத்துவப் புரட்சியானது மொழி, கலாசாரம் போன்ற பொதுத்தன்மை கொண்ட ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் சிதறிக் கிடந்த மக்கள் கூட்டங்களை





ஒன்றிணைத்து, விரிவடைந்த போக்குவரத்துப் பாதைகளாலும், பணப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரத்தாலும், நெருக்கமாகப் பின்னிப் பிணைத்தது. அத்துடன் அப்புரட்சியானது நிலையான தேச எல்லைகளை ஏற்படுத்தி, நிலப்பிரபுத்துவத் தடைகளுக்கும் பிளவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து, நிலையான தேசங்களையும் தேசியங்களையும் உருவாக்கியது. பல்வேறு வரலாற்றுக் காரணங்கள் இத்தகையை தேசியங்களை உருவாக்கினாலும் உலகெங்கும் இருவகையான அரசுகளை நாம் காணமுடியும். அவை:

**தேசிய அரசுகள்** : பல மக்கள் சமூகங்களையும், பல மொழி பேசும் மக்களையும் இரண்டற அரைத்துக் கரைத்து ஒரு மொழி, ஒரு பொதுவான கலாசாரம் ஆகியவற்றைக் கொண்ட ஒரே வகையான மக்கள் கூட்டத்தை கொண்ட அரசுகள் பெரும்பாலும் மேற்கு ஐரோப்பாவில் உருவாகின. இன்று இத்தகைய தேசிய அரசுகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

**பல் தேசிய அரசுகள்** : ஒன்றுக்கு மேற்பட்ட வெவ்வேறுமட்ட வளர்ச்சிகொண்ட மக்கள் சமூகங்களை உள்ளடக்கிய மத்தியப்படுத்தப்பட்ட அரசுகள் பல பல்வேறு காரணங்களால் உருவாகின. இத்தகைய பல நாடுகளிலே எண்ணிக்கையில் பெரும்பான்மை வகிக்கும் ஒரு தேசிய சமூகத்தால் ஏனைய தேசிய சமூகங்கள் ஒடுக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது.

தேசங்களின் உருவாக்கத்திற்காகவும் தேசிய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதற்காகவும் நடைபெற்ற போராட்டங்களின் வரலாறு தான் நவீன வரலாற்றின் பிரதான போக்காகும். இன்றைய வரலாற்றுக் காலகட்டத்தில் தேசிய விடுதலை இயக்கங்கள் வகிக்கக் கூடிய பாத்திரத்தையும் சர்வதேச அரங்கில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் விளங்கிக் கொள்வதற்குத் தேசிய இயக்கங்கள் கடந்து வந்த பல்வேறு கால கட்டங்களையும் இன்றைய கால கட்டத்தையும் இக்கால கட்டங்களிடையிலான வேறுபாட்டையும் புரிந்து கொள்வது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 2

## சர்வதேச தேசிய இயக்கங்களின் வளர்ச்சியில் பல்வேறு காலகட்டங்கள்

மூலதனத்துவம் அடைந்த மாற்றங்களையும் சர்வதேச அரங்கில் அது ஏற்படுத்திய தாக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு உலக தேசிய இயக்கங்களின் போக்கை பின்வரும் கால கட்டங்களாக வகுக்கலாம்:

1. 1789 பிரான்சியப் புரட்சி முதல் 1871 பாரிஸ் கம்யூன் வரையிலான காலகட்டம்.

2. 1871 பாரிஸ் கம்யூன் முதல் 1917 ஒக்டோபர் சோசலிசப் புரட்சி வரையிலான காலகட்டம்.

3. 1917 ஒக்டோபர் புரட்சி முதல் 1949 சீன மக்கள் புரட்சி வரையிலான காலகட்டம்.

4. 1949 சீன மக்கள் புரட்சி முதல் 1991 சோவியத் யூனியன் சிதையும் வரையிலான காலகட்டம்.

5. 1991 சோவியத் யூனியன் சிதைவடைந்த பின்னரான இன்றைய காலகட்டம்.

### 2.1 1789 முதல் 1871 வரை: (முற்போக்கு பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக் காலகட்டம்)

மூலதனத்துவத்தின் ஆரம்ப கூறுகளை இத்தாலி, ஒல்லாந்து முதலிய நாடுகள் 16ம் நூற்றாண்டு முதல் தரிசிக்கத் தொடங்கிய போதும் ஒரு முழுமையான மூலதனத்துவப் புரட்சியை 1789ல் பிரான்ஸ் நாடே முதலில் கண்டது. "மக்கள் குடியரசு" என்ற பதாகையின் கீழ் இப்புரட்சி நிறைவேறியது. அதுவரை தேசிய உருவாக்கம் என்பது முடியை (அரசனை) மையமாகக் கொண்டே நிறைவேறியது. மக்கள் எனப்படுவோர் அரசனால் ஆளப்படும் அவனது உடைமை எனக் கருதப்பட்டனர். நிலப்பிரபுத்துவ



சமுதாயத்திலிருந்து பெறப்பட்ட சட்டங்கள் கோலோச்சின. பிரான்சியப் புரட்சிதான் முதன் முதலாக முடியாட்சிக்கு எதிராக மக்கள் குடியரசு என்ற மத்தியப்படுத்தப்பட்ட அரசை முன் வைத்தது. இம்மூலதனத்துவப் புரட்சியின் போது பிரிட்டோன்களாலும் (Bretons), நார்மன்ஸ்களாலும் (Normans), பிரௌவன்சுகளாலும் (Provencals) முன் வைக்கப்பட்ட தனி நாட்டு முழக்கங்களும் பிரதேச வாதங்களும் நசுக்கப்பட்டு ஒரே தேசியமாக அம்மக்கள் அரைத்துக் கரைக்கப்பட்டனர். பிரான்சியப் புரட்சி முன்வைத்த மக்களாட்சித் தத்துவமும், மனித உரிமைகள் சாசனமும் மனிதகுல வரலாற்றில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியது. பிரான்சிய கொலனிகளில் இருந்து அடிமை முறை நீக்கப்பட்டது. நிலப்பிரபுத்துவத்திற்கும் முடியாட்சிக்கும் எதிராக பெரும் கிளர்ச்சிகள், பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கக் கண்டத்தின் சில பகுதிகளிலும் கிளர்ந்தெழுந்தன. பிரான்சில் அப்போது ஏற்பட்டிருந்த குழப்ப நிலையைப் பயன்படுத்தி போனபார்ட் நெப்போலியன் 1799ல் பதவியேற்றதன் பின்னர் பிரான்சியப் புரட்சியின் விழுமியங்கள் பின்னடைவுற்றன. எனினும் பிரான்சியப் புரட்சியால் பெறப்பட்ட பயன்கள் முழுவதும் வீணாகவில்லை.

பிரான்சியப் புரட்சி ஐரோப்பாவை உலுக்கிய பின்னர் 1848ம் ஆண்டு மீண்டும் ஒருமுறை அதனை புரட்சி மேகங்கள் சூழ்ந்து கொண்டன. ஜேர்மனியர்களும் போலந்து மக்களும் இத்தாலியர்களும் தனித்தனித் தேசமாக உருவாகிக் கொண்டிருந்தனர். ஜேர்மனியில் தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் அத்தேசியப் பணி நிறைவேறும் என்ற நம்பிக்கை ஏற்படும் விதத்தில் காரியங்கள் சிறிது காலம் நடந்தேறிய போதும் ஜேர்மனியை ஒன்றுபடுத்தும் அந்த வரலாற்றுப் பணி பிஸ்மார்க்கினால் (Bismarck) இரும்பாலும் இரத்தத்தாலும் (கைத்தொழிலாலும் துப்பாக்கியாலும்) நிறைவேற்றப்பட்டது.

நிலப்பிரபுத்துவ ஐரோப்பாவிலே சிதறிக்கிடந்த மத்தியத்துவப் படுத்தப்படாத சிற்றரசுகளை மூலதனத்துவ புரட்சி எவ்வாறு இணைத்து, தேசங்களை உருவாக்கின என்பதையும் இப்பூர்ஷ்வா புரட்சியில் சில தனிநபர்கள் வகித்த பாத்திரத்தையும் ஜேர்மனியின் உதாரணம் எமக்கு விளக்குகிறது. 1814ல் ஜேர்மனி நெப்போலியனின் பிரான்சிய பேரரசின் கீழ் இருந்தது. நெப்போலியன் ரைன் பிரதேசத்தை மையமாகக் கொண்டு சிதறிக்கிடந்த வட ஜேர்மன் அரசுகளை முதல்தடவையாக மேலோட்டமாக இணைத்தான். மேலோட்டமான இந்த கூட்டமைப்பே ஜேர்மனியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியவாதம் தோன்றுவதற்கு வித்திட்டது. இத்தேசியவாதம் மொழியையோ கலாசாரத்தையோ அதிகம் சார்ந்திராமல் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நெப்போலியன் ரஷ்யா, பிரஸ்யா, பிரிட்டன், ஆஸ்திரியா ஆகிய நாடுகளால் கூட்டாக முறியடிக்கப்பட்ட போது இக்கூட்டமைப்பு சிதறியது. வெற்றிபெற்ற நாடுகள் வீயன்னா காங்கிரஸில் தமக்கிடையே இக்கூட்டமைப்பின் கீழ் இருந்த ஜேர்மனியின் பிரதேசங்களைப் பகிர்ந்து கொண்டன. யுத்தத்தில் பங்குகொண்ட பிரஸ்யாவும் இதனால் லாபமடைந்தது. இக்காங்கிரஸ் மீண்டும் ரைன் கூட்டமைப்பை ஒத்த ஜேர்மன் கூட்டமைப்பை உருவாக்கி அதனை நிர்வகிக்கும் அதிகாரத்தை ஆஸ்திரியாவிடம் ஒப்படைத்தன. ஆனால் பிரஸ்யா தனது தலைமையில் ஜேர்மனி ஒன்றுபட வேண்டுமெனத் தேசியவாதக்கனவு காணத் தொடங்கியது. ஆனால் வழி தெரியாமல் திணறியது.

ஜேர்மன், சிற்றரசுகளாகச் சிதறிக்கிடந்தன. ஒவ்வொரு சிற்றரசும் தனித்தனியாக சுங்கத்தீர்வினை விதித்தன. இதனால் ஜேர்மன் அரசுகளுக்கிடையே தடையின்றி வர்த்தகத்தை மேற்கொள்ள முடியாமலிருந்தது. 1834ல் பிரஸ்யா மேட்டுநிலப்பிரபுக்களான ஜங்கர்களின் தலைமையில் ஜேர்மனிய சுங்கத்தீர்வு சங்கம் (Zollverein) ஒன்றை அமைத்தது. இதன்மூலம் ஆஸ்திரியா போஹ்மியா ஆகிய நாடுகள் கவனமாகத் தவிர்க்கப்பட்டுப் பெரும்பாலான ஜேர்மனிய நாடுகள் தமக்கிடையே ஒருமித்த சுங்கத்தீர்வுமுறை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டன. இதனால் ஆஸ்திரியாவின் வர்த்தகம் பாதிக்கப்பட்டது. இரு அரசுகளுக்கு மிடையிலான உறவும் பழுதடையத் தொடங்கியது. மறுபுறத்தில் இச்சிற்றரசுகளில் புதிய செல்வந்த மத்தியதர வர்க்கமும் படித்த வகுப்பினரும் தொழிலாள வர்க்கமும் உருவாகத் தொடங்கின. இவர்களின் தலைமையில் விவசாயிகளும் மாற்றத்திற்காக கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். தாராளவாதகொள்கையும் பாராளுமன்ற ஜனநாயகத்துக்கான கோரிக்கையும் வலுப்பெறத் தொடங்கியது. 1848 - 49ல் மன்னராட்சிக்கு விசுவாசமான படைகளால் இவ்வெழுச்சிகள் குரூரமாக நசுக்கப்பட்டன.

1850 - 1870ல் ஜேர்மனியின் பொருளாதாரம் துரிதவளர்ச்சி கண்டது. பிரஸ்யாவை மையமாகக் கொண்டு ஜேர்மனியின் கைத்தொழில் புரட்சி வேகமாக முன்னேறியது. புதிய தொழிற்சாலைகள் உருவாகின. துணி உற்பத்தியும் இரும்பு உற்பத்தியும் நிலக்கரி உற்பத்தியும் ஏற்றுமதி வர்த்தகத்தை பாய்ச்சல் நிலைமைக்கு இட்டுச்சென்றன. ஜேர்மனிய





சுங்கத்தீர்வுக் சங்கம் இதற்கான அடித்தளத்தை உருவாக்கியிருந்தது. கைத்தொழில் புரட்சியானது சிற்றரசுகளை இரயில் பாதைகளாலும் தொலைத்தொடர்புக் கம்பிகளாலும் பொருளாதார வலைப்பின்னலால் இணைக்கத் தொடங்கியது. தொழிலாள வர்க்கம் ஒரு சமூக சக்தியாகத் தன்னை வெளிப்படுத்தத் தொடங்கியது. சமூக ஜனநாயக கட்சி பலம்பெறத் தொடங்கியது.

ஊறிப்போன பழைமைவாதியான ஓட்டோ வொன் பிஸ்மார்க் (Otto von Bismark 1815 - 1898) பிரஸ்ய மேட்டுநிலப்பிரபுக்களான ஜங்கர்களின் அசல் பிரதிநிதியாக இருந்தான். இவன் 1847ல் அரசியலுக்குள் அடியெடுத்து வைத்தான். 1848ல் ஐரோப்பாவை உலுக்கிய புரட்சியின் குவிமையம் பேர்லினுக்கு நகர்ந்த போது அதனை நசுக்குவதற்கு அரசனுக்கு விசுவாசமான விவசாயிகளைத் திரட்டி அனுப்பியவர்களில் இவனும் ஒருவன். இவனது ஒரே இலட்சியம் பிரஸ்யா தலைமையில் சிற்றரசுகளாக சிதறிக் கிடந்த ஜேர்மனியை ஒன்றுபடுத்தி ஒரே தேசமாக அதனைக் கட்டியெழுப்புவது தான். இதற்கு அவன் தேர்ந்தெடுத்த கொள்கை - அவனே தனது சொற்பொழிவொன்றில் கூறியதைப் போல "இரும்பும் இரத்தமும்" (இயந்திர கைத்தொழிலும் போரும்) ஆகும். அவன் 1862ல் பிரஸ்யாவின் சென்சலரான பின்னர் அரசனுக்கு விசுவாசமான மதியுரைஞனாகவும் பிரகடனப்படுத்தாத சர்வாதிகாரியாகவும் செயற்பட்டான். அவன் சோசலிசத்தை மாத்திரமல்ல ஜனநாயகத்தையும் தாராளவாதத்தையும் கூட வெறுத்தான். பிரஸ்யா தலைமையில் ஜேர்மனியை ஒன்றுபடுத்துவதற்கு அவன் கடைப்பிடித்த தந்திரோபாயத்தைப் பின்வருமாறு சுருக்கலாம்:

- மக்களைக் கவரக்கூடிய ஒரு தலைவனின் (மன்னனை) பின்னால் விழிப்புணர்வு குன்றிய கீழ்த்தட்டு வர்க்கங்களை அணிதிரட்டி புதுவிதமான சர்வாதிகாரத்தை நிறுவுவது.

- உள்நாட்டில் புரட்சிகரசக்திகளை நசுக்குவதற்குத் துப்பாக்கிகளை மாத்திரம் பிரயோகிக்காமல் அவர்களின் மக்கள் தளத்தை பலவீனப்படுத்தும் விதத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது. (சமூக ஜனநாயகவாதிகள் மீதும் தாராளவாதிகள் மீதும் வன்முறையுடன் கூடிய அடக்குமுறையை பிரயோகித்ததுடன் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் எழுச்சிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈவிரக்கமின்றி நசுக்கினான். பின்னர் மூன்றாம் நெப்போலியன் பாணியில் வாக்குரிமை மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் அதிகாரத்தை மத்தியதர வர்க்கத்திற்கு வழங்கி தாராளவாதிகளின் ஆதரவு சக்திகளை திருப்திபடுத்தினான். விபத்துகளுக்கும் நோய்க்குமான காப்புறுதித் திட்டத்தையும் பென்சன் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி உழைக்கும் மக்களைச் சாந்தப்படுத்தி சோசலிசவாதிகளைப் பலவீனப்படுத்தினான்.

- எதிர்சக்திகளை அடக்கி பின்னர் அவர்களுடன் சமரசம் செய்து கொள்வதன் மூலம் உள்நாட்டிலும் எதிரணியினர் தனக்கெதிராகக் கூட்டுச்சேர்வதைத் தவிர்த்துத் தனது பிரதான எதிரியைத் தனிமைப்படுத்துவது. (கத்தோலிக்க மதத்தவரை முதலில் அடக்கினான். பின்னர் அவர்களுடன் சமரசம் செய்து கொண்டு அவர்கள் தாராளவாதிகளுடனோ சமூக ஜனநாயகவாதி களுடனோ கூட்டுச்சேராமல் தடுத்தான்.

- நாட்டை இயந்திர கைத்தொழில் ரீதியாக மாத்திரமல்ல இராணுவ ரீதியாகவும் வல்லரசாகக் கட்டியெழுப்புவது. (அவன் ஜேர்மனியை, துப்பாக்கியின் துணையின்றி ஒன்றுபடுத்த முடியாதென்பதை உணர்ந்து பிரஸ்யாவை இராணுவ ரீதியில் பலம் மிக்க வல்லரசாகக் கட்டியெழுப்பினான். அவன் அரசியலில் இராணுவ பலத்தின்மீது கூடுதலான நம்பிக்கை கொண்டவன். எனினும் பொருளாதாரதுறையில் வளர்ச்சியுறாமல் இராணுவபலம் நீடித்திருக்க முடியாது என்பதை நன்குணர்ந்து இயந்திரக் கைத்தொழில் துறையையும் வளர்த் தெடுத்தான்.

- வெளிநாட்டு எதிரிகளை சாணக்கியத்தோடு கையாண்டு அவர்கள் தனது நாட்டிற்கு எதிராகக் கூட்டுச் சேராமல் தடுத்து ஒருசமயத்தில் ஒரு எதிரியை மாத்திரம் எதிர்கொண்டு ஒவ்வொரு எதிரியாக வெற்றி கொள்வது. (1863ல் டென்மார்க் மீது போர் தொடுப்பதற்கு தனது எதிரி நாடான ஆஸ்திரியாவுடன் கூட்டுச் சேர்ந்து அதன் நல்லெண்ணத்தை வென்றதுடன் அப்போரில் தோல்வியடைந்த டென்மார்க்கின் ஒரு பகுதியை பிரஸ்யாவுடன் இணைத்துக் கொண்டான். இப்போரை உள்நாட்டில் எதிர்த்த தாராளவாதிகளையும் சமூக ஜனநாயகவாதிகளையும் தனது இராணுவ வெற்றியால் வாயடைக்கச் செய்து இராணுவ பலத்தினால் எதையும் சாதிக்கக் கூடியவன் என்ற பிம்பத்தை தனது மக்கள் மத்தியில் ஏற்படுத்திக் கொண்டான். அதனையடுத்து தன்னுடன் கூட்டுச் சோந்த ஆஸ்திரியாவை மூன்று வருடங்களுக்குள் - 1866ல் போரில் வென்றான். அப்போரில் இரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி போன்ற நாடுகள் ஆஸ்திரியாவுக்கு ஆதரவளிக்காமல் தடுப்பதில் அவனது இராஜதந்திரம் வெற்றி பெற்றது. இதில் பிஸ்மார்க் விளையாடிய சதுரங்க ஆட்டம் - குள்ளநரித் தந்திரம் பிரபல்யமானது. ஆஸ்திரியா பிரஸ்யா மீது யுத்தம் தொடுக்குமானால் பிரான்ஸ் நடுநிலை வகிக்க வேண்டும் அதற்குப் பதிலாக ஜேர்மனியின் ஒருபகுதி நிலத்தைத் தரத் தயார் என ஒரு கடிதத்தை பிரான்ஸ் மன்னனுக்கு எழுதினான். உண்மையில் அவனிடம் பிரான்சுக்கு ஜேர்மனியின் நிலத்தைத் தாரை வார்க்கும் எண்ணம் எதுவும் இருக்கவில்லை. எனவே அவன் அம்மடலில் வேண்டுமென்றே கையெழுத்திடவில்லை. இவனது தந்திரம் பலித்தது. 1866ல் அவன் ஆஸ்திரியாவை ஆத்திரமூட்டித் தனது நாட்டின்மீது போர் தொடுக்க வைத்தான். பிரான்ஸ் நடுநிலை வகித்தது. இதனால் ஏனைய நாடுகளும் நடுநிலை வகித்தன. ஆனால் பெரும்பாலான ஜேர்மன் சிற்றரசுகள் ஆஸ்திரியாவுடன் இணைந்து பிரஸ்யாவுடன் போரில் ஈடுபட்டன. ஈற்றில் பலம்மிக்க பிஸ்மார்க்கின் படை யுத்தத்தில் வெற்றி பெற்றது. பின்னர் பிரான்ஸை ஆத்திரமடையச் செய்து 1870ல் தனது நாட்டின்மீது போர்தொடுக்கச் செய்தான். அதனைத் தனிமைப்படுத்தி தனது படைப்பலத்தால் அதனை வெற்றிகொண்டான்.

- தோல்விகண்ட நாடுகள் மீது அவமானகரமான நிபந்தனைகளைத் திணித்து வன்மத்தை வளர்க்காமல் வினயமாக நடந்து கொண்டு தனது பிரதான இலக்கை நிறைவேற்றிக் கொள்வது. (அவன் ஆஸ்திரியாவை வெற்றி கொண்டபோது அதன் நிலத்தை அபகரிக்கவில்லை, மிகவும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதமான யுத்த நஷ்டஈடே அதனிடமிருந்து பெறப்பட்டது. இதனால் பிரான்சுடன் யுத்தம் மூண்ட போது ஆஸ்திரியா அவ்யுத்தத்தில் இணைந்து கொள்ளவில்லை. ஆனால் பிரான்சுடனான யுத்தத்தில் மாத்திரம் அவன் இக்கொள்கைக்கு முரணாக நடந்து கொண்டான். இதன் விளைவை முதலாம் உலக மகாயுத்தத்தின் போது ஜேர்மனி அனுபவிக்க வேண்டியதாயிற்று.

எப்படியோ பிரான்சுடனான யுத்தம் முடிவுற்றதுடன் பிரஸ்யாவின் வல்லமை நிரூபணமானது. அதன் மன்னரை ஜேர்மனியின் பேரரசனாக ஏனைய ஜேர்மன் சிற்றரசுகள் அங்கீகரித்தன. அச்சிற்றரசுகளுக்கு வரையறுக்கப்பட்ட சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. 1871 ஜனவரி 18 ஒன்றிணைந்த ஜேர்மனி தேசம் உருவானது. பிஸ்மார்க் தனது ஐங்கர் பாணியில் அதனைச் செய்து முடித்தான். ஜேர்மனி என்னும் தேசம் துப்பாக்கியால் (இரத்தத்தால்) மாத்திரம் உருவாக்கப்படவில்லை. மூலதனத்துவ பொருளாதார வலைப்பின்னலால் (இரும்பால்) சிறுசிறு சிற்றரசுகளில் சிதறிக்கிடந்த மக்கள் இணைக்கப்பட்டதால் தான் இப்பணி நிறைவேறியது.

இத்தாலியிலே கவூர் கோமகன் (Count Covour) இராஜதந்திரியான மாசினி (Mazzini)யின் துணையோடு மத்தியத்துவப்படுத்தப்பட்ட குடியரசை நிறுவ முயன்றான். அதே சமயம் கரிபால்டி (Garibaldi) தலைமையிலான ஆயிரம் செஞ்சட்டை வீரர்கள் மத்தியப்படுத்தப்பட்ட குடியரசை நிறுவுவதற்கு மறுபுறத்தில் போராடினர். ஆனால் இலண்டனும் பாரிசும் புரட்சிகர குடியரசுக்குப் பதிலாக பழமைவாதக் குடியரசு ஒன்று இத்தாலியில் உருவாவதிலேயே விரும்பங் கொண்டிருந்தன. ஆதலால் மாறியிருந்த சர்வதேசச் சூழலைப் புரிந்து கொண்ட கரிபால்டி (Garibaldi) உள்நாட்டில் யுத்தம் மூண்டால் அது வெளிச்சக்திகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்ற காரணத்தினால் விக்டர் இம்மானுவேல் மன்னனோடு மோதலைத் தவிர்த்துத் தனது போராட்டத்தைக் கைவிட்டான். இதனால் இத்தாலியில் மத்தியத்துவப்படுத்தப்பட்ட முடியரசு உருவானது. 1871ல் ரோமிலிருந்து பிரான்சிய படைகள் வெளியேறியதுடன் இத்தாலியை ஒன்றுபடுத்தும் பணி பூர்த்தியடைந்தது.

இவ்வாறு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் முழுவதுமான மூலதனத்துவப் புரட்சி 1789 முதல் 1871 வரையிலான காலகட்டம் வரை நிறைவேறி முடிந்தது.





இக்காலப் பகுதியில் தான் வரலாற்றின் முதல் தடவையாக நிலையான நவீன தேசங்கள் உருவாகின. அவை அனைத்தும் மேற்கு ஐரோப்பாவிலேயே உருவாகின.

1871ல் முதலாவது சோசலிச அரசு ஒன்றை நிர்மாணிக்கும் முயற்சி பிரான்ஸ் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டது. அவர்களால் பாரிஸ் நகரில் ஏற்றி வைக்கப்பட்ட செங்கொடியை, சிறிது காலத்தில் பிரான்சின் ஜென்ம வைரியான பிஸ்மார்க்கின் துணையோடு பிரான்சிய ஆளும் வர்க்கம் குரூரமாக நசுக்கியது. எனினும் பாரிஸ் கம்யூன் ஏற்றி வைத்த சோசலிச தீபத்தை மூலதனத்துவவாதிகளால் நிரந்தரமாக அணைத்துவிட முடியவில்லை. அது ஒக்டோபர் புரட்சியாக 1917ல் சோவியத் ரஷ்யாவில் வெடித்தது.

இக்காலப்பகுதியில் இடம்பெற்ற தேசிய இயக்கங்களின் பொதுவான இலட்சணங்கள் பின் வருமாறு:

முதலாவதாக, மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே வரலாற்றில் முதல் தடவையாக மூலதனத்துவப் புரட்சித் தேசத்துவம் (Nation hood) என்ற சித்தாந்தத்தை தோற்றுவித்து அதன் அடிப்படையில் நிலையான மத்தியத்துவப்படுத்தப்பட்ட அரசுகளை கொண்ட தேசங்களை உருவாக்கின.

இரண்டாவதாக, ஐரிஸ் மக்களின் விடுதலைப் போராட்டம் இங்கு ஒரு விதிவிலக்காக இருந்தது. ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் தேசியத்துவ உருவாக்கம் என்பது தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான விடுதலைப் போராக அன்றி உள்நாட்டின் சந்தைகளை நிலப்பிரபுத்துவத் தடைகளிலிருந்து மீட்டு மத்தியப்படுத்தப்பட்ட விற்பனைச் சந்தையை உருவாக்குவதாகவே அமைந்தன.

மூன்றாவதாக, இக்காலகட்டத்தில் பூர்ஷ்வாக்கள் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தில் முற்போக்குப் பாத்திரம் வகித்தன. இப் புரட்சிகள் யாவும் பூர்ஷ்வாக்கள் தலைமையிலேயே நடைபெற்றன. சோசலிசப் புரட்சி ஒன்று உருவாவதற்கான காரணிகளும் சமூக சக்திகளும் அப்போது பலம்பெற்றுத் திகழவில்லை. மூலதனத்துவப் புரட்சியின் வெற்றி இரத்தத்தாலும் துப்பாக்கியாலும் எழுதப்பட்டது என்றாலும் வரலாற்றில் அதன் முற்போக்குப் பாத்திரத்தைக் குறைத்து மதிப்பிட இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில் வல்லரசுகளின் பிடியிலிருந்து விடுபடுவதற்காக சில தேசங்கள் போராடின. அயர்லாந்து மக்களின் விடுதலைப் போராட்டமும் போலந்து மக்களின் விடுதலைப் போராட்டமும் சிலாவ் மக்களின் விடுதலைப் போராட்டமும் இவ்வகையில் அடங்கும். இவற்றுள் அயர்லாந்து விடுதலைப் போராட்டம் பிரித்தானிய பேரரசிற்கும், போலந்தின் விடுதலைப் போராட்டம் இரஷ்யப் பேரரசிற்கும், எதிராக மிகவும் முற்போக்கான பாத்திரத்தை வகித்தது. அதேசமயம் சிலாவியர்களின் போராட்டம் இரஷ்யாவின் நலன்களை பாதுகாப்பதாகவும், ஐரோப்பாவிலே பலநாடுகளில் அப்போது உருவாகியிருந்த புரட்சிகரமான தேசிய இயக்கங்களுக்கு எதிரானதாகவும் இருந்ததால் அது பிற்போக்குப் பாத்திரத்தை வகித்தது.

இனி, தேசிய இயக்கங்களின் அடுத்த கால கட்டத்திற்கு நுழையுமுன்னர் முதலாவது காலகட்டத்தில் தேசிய இயக்கங்கள் தொடர்பாக மார்க்ஸிச மூலவர்கள் கடைபிடித்த கொள்கைகளைச் சற்று பார்க்கலாம்.

## முதலாவது காலகட்ட தேசிய இயக்கங்கள் தொடர்பாக மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் நிலைப்பாடுகள்:

1883ல் சாகாவரம் பெற்ற கார்ல் மார்க்சும் 1895ல் அமரத்துவம் அடைந்த பிரடெரிக் ஏங்கல்சும் இக்காலப் பகுதியிலே தான் வாழ்ந்தார்கள். அவர்கள் உருவாக்கிய முதலாவது அகிலத்தில் (International Working Men's Association) புருதோனின் (Proudhon) தேசியப் பிரச்சினையை மறுக்கும் போக்கை எதிர்த்தும், மாசினியின் தேசியவாதத்தைத் தூக்கிப் பிடிக்கும் குட்டி முதலாளித்துவப் போக்கை எதிர்த்தும் இருமுனைகளில் போராடினர். முதலாவது அகிலத்தில் அராஜகவாதத்தின் பிதாமகனும் இளைய பிரான்ஸ் என்ற குழுவின் தலைவருமான புருத்தோன் சோசலிசப் புரட்சி என்ற பெயரால் தேசிய இயக்கங்களின் முற்போக்குப் பாத்திரத்தை நிராகரித்து வந்தார். போலந்து மக்களினதும் இத்தாலிய மக்களினதும் ஐரிஷ் மக்களினதும் விடுதலைக்கான போராட்டம் அர்த்தமற்றது, சமூகப் புரட்சிக்கு பிரான்ஸ் தயாராகும் வரை அவர்கள் அனைவரும் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் என அவர் கூறிவந்தார். ஆயினும் மார்க்சும் ஏங்கெல்சும் அவரது கருத்துகளை நையாண்டி செய்தனர். (பார்க்க : (Marx and Engles, selected correspondence, Letter of June 7th, 1886).





மார்க்சும் சரி ஏங்கெல்சும் சரி அவர்களது சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தை ஏற்றுக் கொண்ட எந்த ஒரு சமூகவியலாளர்களும் சரி தேசிய விடுதலைப் போராட்டங்களை என்றுமே குறைத்து மதிப்பிட்டதில்லை. அதே சமயம் அவற்றின் முற்போக்குப் பாத்திரத்தை மிகைப்படுத்திப் பார்த்ததும் இல்லை. மார்க்சிய மூலவர்கள் தேசியப் பிரச்சினைகள் தொடர்பாக பாட்டாளி வர்க்கம் கடைபிடிக்க வேண்டிய கொள்கையைப் போலந்து அனுபவத்திலிருந்தும் அயர்லாந்து விடுதலைப் போராட்ட அனுபவத்தில் இருந்தும், பிராங்கோ - புருஷ்ய யுத்தத்தின் அனுபவத்திலிருந்தும் சிலாவியர்களின் போராட்டத்திலிருந்தும் எமக்களித்திருக்கிறார்கள்.

## போலந்துப் பிரச்சினையில் மார்க்சும் ஏங்கெல்சும்:

1840களிலும் 1850களிலும் 1860களிலும் மார்க்ஸ் போலந்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதை மாத்திரம் அல்ல அது சுதந்திர நாடாக அமைவதையும் விரும்பினார். போலிஷ் விடுதலை இயக்கத்திற்கு பிற்போக்கு மேல்குடிப் பிரபுக்கள் தலைமை தாங்கிய போதும் கூட அவ்விடுதலைப் போராட்டத்தை அவர்கள் ஆதரிக்கத் தவறவில்லை. அவர்கள் போலந்துப் பிரச்சினையை முழு ஐரோப்பாவினதும் புரட்சிகர இயக்கங்களினது நலன் என்ற கண்ணோட்டத்திலிருந்து நோக்கினார்கள். ஏங்கெல்ஸ் அவரது இறுதிக் காலத்தில் எழுதிய கட்டுரைகளில் ஒன்றான "இரஷ்ய ஜாரியத்தின் வெளிநாட்டுக் கொள்கை" (The Forign Policy of Russian Tsarisam) என்ற கட்டுரையில் போலந்து மக்கள் தமது ஜாரிச இரஷ்யாவுக்கு எதிரான தீர்மான போராட்டத்தின் மூலம், 1892 - 1894களில் இரஷ்யாவினால் போலந்து தோற்கடிக்கப்பட்ட போதும் கூட பிரான்சியப் புரட்சியை அது காப்பாற்றியதைப் போன்று பல தடவைகள் இரஷ்யாவிடமிருந்து பல நாடுகளின் புரட்சிகளை அது காப்பாற்றியுள்ளது எனப் பாராட்டியுள்ளார். அதேசமயம் போலந்து மக்களின் பலவீனங்களையும் அவர் அதில் சுட்டிக் காட்டியுள்ளார். 19ம் நூற்றாண்டில் ஐரோப்பிய அரசியல் முழுவதிலும் போலந்துப் பிரச்சினை ஒரு பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. மார்க்சும் ஏங்கெல்சும் அப்போராட்டம் தொடர்பாகக் கொண்டிருந்த கருத்து மார்க்சியத்திற்கு செழுமை சேர்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜேர்மனி ஒன்றிணைப்பு
### மார்க்ஸ் - ஏங்கெல்ஸின் நிலைப்பாடு:

ஜேர்மனியரான மார்க்சிற்கு ஜேர்மனியில் நடைபெற்றுக் கொண்டிருந்த மூலதனத்துவப் புரட்சி தொடர்பாகத் துல்லியமான தகவல்கள் தெரிந்திருந்தன. அப்புரட்சியில் மனோரீதியான ஈடுபாடும் அவருக்கிருந்தது. எனவே பிஸ்மார்க்கின் பிற்போக்குக் கொள்கையை அவர் அடியோடு வெறுத்தார். ஆயினும் பிஸ்மார்க் மீது அவர் கொண்டிருந்த வெறுப்பு அவனது தலைமையில் ஜேர்மனி ஒன்றிணைவதை நிபந்தனையுடன் ஆதரிப்பதிலிருந்து பின்வாங்கச் செய்யவில்லை. அங்கு தொழிலாள வர்க்கம் பிஸ்மார்க்கால் கொடூரமாக நசுக்கப்பட்டது. ஆயினும் வரலாற்றில் பிஸ்மார்க் வகித்த முற்போக்குப் பாத்திரத்தை - அதாவது சிதறுண்டு கிடந்த ஜேர்மனியை ஒன்றுபடுத்தியதை - அவர் அங்கீகரிக்கத் தவறவில்லை. அதேசமயம் பாட்டாளி வர்க்கம் வலிமைபெற்று ஸ்தாபன பலத்துடன் ஒன்றுபட்டு பிஸ்மார்க்கை தூக்கி எறிய வேண்டும் என்பதை அவர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார்.

### ஐரிஷ் பிரச்சினையில்
### மார்க்சும் - ஏங்கெல்சும்:

மார்க்ஸிச மூலவர்கள் ஐரிஷ் பிரச்சினையில் கடைப்பிடித்த கொள்கை சமூகவியலுக்கு மேலும் வெளிச்சம் பாய்ச்சுகிறது. ஐரிஷ் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய மத்தியதரவர்க்கத் தாராளவாத தலைவர்களான டேனியல் ஒகென்னல் (Daniel O'Connell) போன்றவர்களை ஆரம்பம் முதலே இவர்கள் விமர்சித்து வந்த போதும் ஐரிஷ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக உறுதியாகக் குரல் கொடுத்தே வந்தனர். அத்துடன் ஐரிஷ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகப் பிரித்தானியத் தொழிலாளர்கள் நடத்திய ஊர்வலத்திலும் அவர்கள் முன்னணிப் பாத்திரம் வகித்தனர். ஐரிஷ் போராட்டத்தில் வழிகாட்டிய மார்க்ஸ்,

"ஐரிஷ் மக்கள் தமது விடுதலைக்காக உறுதியுடன் போராட வேண்டும். அதேசமயம் அவர்களது போராட்டத்திற்கு பிரிட்டிஷ் தொழிலாளர்களது ஆதரவைப் பெறுவது அவசியம் என்பதையும் மறுபுறத்தில், ஐரிஷ் போராட்டத்திற்கு ஆதரவாகப் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் குரல் கொடுக்க வேண்டும்" என்பதையும் வலியுறுத்தினார்.





இதுவே சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தின் அடிப்படை ஆகும். ஐரிஷ் போராட்டத்தை ஆராய்ந்த ஏங்கெல்ஸ் ஒரு முக்கியமான தத்துவத்தை முன் வைத்தார். அது என்றென்றும் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்திற்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. அது:

பிற தேசியங்களை ஒடுக்கும் எந்த ஒரு தேசியமும் சுதந்திரமாக இருக்க முடியாது என்பதேயாகும்.

### ஸ்லாவ் மக்களின் போராட்டம்
### மார்க்ஸ் - ஏங்கெல்ஸின் நிலைப்பாடு:

போலிஷ் போராட்டத்தையும் ஜேர்மனியின் ஒன்றிணைவையும் ஐரிஷ் மக்களின் விடுதலையையும் ஆதரித்த அதே மார்க்சும் ஏங்கெல்சும் ஸ்லாவியர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து நடத்திய போராட்டத்தை ஆதரிக்கவில்லை. ஏங்கெல்ஸ் ஒருபடி மேலே போய் ஸ்லாவியர்கள் முற்றாகத் துடைத்தெறியப்பட்டாலும் கூட, தனக்கு கவலையில்லை எனக் கூறினார். இதற்கு ஒரே ஒரு காரணம் அப்போது ஐரோப்பாவில் வெடித்த சகல புரட்சிகளையும் நசுக்குவதில் ஜாரிச ரஷ்யா முன்னணியில் நின்றது. அதற்கு ஸ்லாவியர்களின் போராட்டம் துணை போனமையே காரணமாகும்.

ஆகவே சமூக விஞ்ஞானிகள் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் முற்போக்குத் தன்மையை, அதற்குத் தலைமை தாங்கும் வர்க்கத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு நிர்ணயப்பதில்லை. மாறாக, அது வரலாற்றுப் போக்கிற்குச் சாதகமாக செயல்படுகிறதா? பாதகமாக செயல்படுகிறதா? சர்வதேச பிற்போக்குத் தனத்திற்கு, குறிப்பாக இன்றைய சூழலில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக செயல்படுகிறதா? அல்லது உறுதுணையாகச் செயல்படுகிறதா? என்பதை அடிப்படையாகக் கொண்டே அதன் தன்மை நிர்ணயிக்கப்படுகிறது. எனினும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு வழங்கப்படும் ஆதரவு நிபந்தனையுடன் கூடியதாகவே இருக்கும். அந்நிபந்தனையானது பாட்டாளி வர்க்க நலனுக்கு எந்த அளவுக்கு அவ்வியக்கம் உகந்ததாகச் செயல் படுகிறதோ அந்தளவுக்குத்தான் அதற்கு வழங்கப்படும் ஆதரவும் அமைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. 1871 - 1917 வரை.
### (ஏகாதிபத்தியத்தின் தோற்றமும் கொலனிகளின் எழுச்சியும்)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மூலதனத்துவம் ஏகாதிபத்தியமாகப் பரிணமித்தது. திறந்த சந்தையின் போட்டிக்குப் பதிலாக ஏகபோக உரிமைக்காக, பாரிய மூலதன மையங்கள் போட்டியிடத் தொடங்கிய காலகட்டம் இதுவாகும். லெனின் ஏகாதிபத்தியத்தை முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் என விபரித்தார். ஏகாதிபத்தியம் உருவான பின்னர் கொலனிகளின் சுரண்டல் முறை புது வடிவத்தை எடுத்தது. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே கொலனி நாடுகளைப் பகிர்ந்து கொள்ளும் போட்டி உத்வேகம் பெற்றது. மேற்கில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இரஷ்யா, ஆஸ்திரியா-ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளும் ஆசியாவில் ஜப்பானும் காலனிகளைத் தமக்குள் பகிர்ந்து கொள்வதற்காக ஒன்றோடொன்று மோதின. கிழக்கு ஐரோப்பாவிலே மத்தியத்துவப்படுத்தப்பட்ட பல் தேசிய அரசுகள் இக்கால கட்டத்தில் உருவாகி விட்டன. 1912 - 1913களில் நடைபெற்ற பால்கன் யுத்தங்கள் தென்மேற்கு ஐரோப்பாவிலே தேசிய அரசுகள் உருவாகும் பணி பூர்த்தியாகி விட்டதைக் குறித்தது.

1905ம் ஆண்டு காலனிய நாடுகள் தூக்க நிலையிலிருந்து விழித்தெழும் தொடக்கப் புள்ளியாக அமைந்தது. இவ்வாண்டில்தான் சுவீடனிலிருந்து நோர்வே ஜனநாயக முறையில் - சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலே பிரிந்து சென்றது. இதைவிட உலக அரங்கில் தாக்கத்தை ஏற்படுத்திய முக்கியமான சம்பவமான, போர்ட் ஆர்தர் துறைமுக யுத்தத்தில் ஜப்பான் இரஷ்யப் படையைத் தோற்கடித்தது. அதுவரை வெற்றி கொள்ளப்பட முடியாதவர்கள் எனக் கருதப்பட்ட ஐரோப்பிய நாடொன்றை ஆசிய நாடொன்று தோற்கடித்தது இதுவே முதன்முறையாகும். இதனால் ஏற்பட்ட தேசிய எழுச்சிகள் பாரசீகம், துருக்கி, எகிப்து, இந்தியா போன்ற நாடுகளில் பலமாக எதிரொலித்தது. இத் தோல்வியையடுத்து 1905ல் ரஷ்யாவில் வெடித்த நிறைவேறாத புரட்சி கொலனிய நாடுகளில் ஏற்பட்ட எழுச்சிக்கு புதிய வீச்சைக் கொடுத்தது.

இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில், அநேகமாக ஆசிய ஆபிரிக்க காலனிய நாடுகள் யாவும் பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற பழைய முதலாளித்துவ - ஏகாதிபத்திய நாடுகளின் பிடிக்குள் சென்றன. புதிதாக அரங்கிற்கு வந்த ஜேர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி போன்ற நாடுகளுக்குப் போதியளவு கொலனிகள் எஞ்சியிருக்கவில்லை. எனவே அவை பழைய ஏகாதிபத்தியங்களின் பிடியில் இருந்த கொலனிகளில் கைவைக்கத் தொடங்கின. கொலனிகளை மறுபங்கீடு செய்து கொள்வதற்காக ஏகாதிபத்தியங்கள் ஒன்றோடொன்று மோதத் தொடங்கின. இதன் விளைவாகத்தான் முதலாவது உலக மகா யுத்தம் மூண்டது. ஓரணியில் ஜேர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, துருக்கி முதலிய நாடுகளும் மற்றோரணியில் பிரிட்டன், பிரான்ஸ், இரஷ்யா முதலிய நாடுகளும் அணிவகுத்து இக்கோர யுத்தத்தில் ஈடுபட்டன. ஆனால் யுத்த முடிவில் ஏகாதிபத்திய நாடுகள் சற்றும் எதிர்பாராத, முற்றிலும் மாறுபட்ட சர்வதேசச் சூழல் ஒன்றைச் சந்தித்தன. உலகின் நிலப்பரப்பில் ஆறில் ஒரு பங்கைத் தன்னகத்தே கொண்டு லெனின் தலைமையிலே மகத்தான ஒக்டோபர் புரட்சியின் மூலம் சோவியத் யூனியனில் சோசலிச அரசு ஒன்று உருவாகியிருந்தது. கொலனியல் நாடுகளில் எல்லாம் விடுதலைப் போராட்டங்கள் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு வீறு கொண்டெழுந்தன.

இக்காலப்பகுதியில் மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் மறைவிற்குப் பின்னர் உலக சோசலிச இயக்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலம்வரை, அதாவது முதலாவது உலக மகா யுத்தத்திற்கான கார்மேகம் சூழ ஆரம்பிக்கும் வரை கார்ல் கவுட்ஸ்கியே தலைமை தாங்கினார். இரண்டாவது அகிலத்திலே ஒரு சமயத்தில் மிகவும் மதிக்கப்பட்ட ஒரு தலைவராக இவர் திகழ்ந்தார். பின்னர் இரண்டாவது அகிலத்தின் இயல்பான தலைவராக லெனின் உருவாகினார். இவரோடு போலந்தைச் சேர்ந்த ரோசா லக்சம்பர்க், ஜேர்மனியைச் சார்ந்த லீப்நெக்ட் போன்றோர் செல்வாக்கு மிக்க தலைவர்களாகத் திகழ்ந்தனர். இக்காலப் பகுதியில் சமூக விஞ்ஞானிகள் மத்தியில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் தொடர்பாக ஏற்பட்ட விவாதங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை தேசிய விடுதலை இயக்கங்கள் தொடர்பாகப் பாட்டாளி வர்க்கம் கொண்டிருக்க வேண்டிய தெளிவான கண்ணோட்டத்தை எமக்கு வழங்குகின்றன.

இவ்விவாதங்களில் ஒட்டோ பவர், கார்ல் ரென்னர் ஆகியோரும் யூதர்களின் அமைப்பான பூந்தும் (Bund) முன் வைத்த தேசிய கலாசார தன்னாட்சி என்ற தத்துவத்திற்கெதிராக லெனினும் ரோசா லக்சம்பர்க்கும் நடத்திய கருத்துப் போராட்டமும், கொலனியப் பிரச்சினையில் திரிபுவாதியான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்ன்ஸ்டைனுக்கு எதிராக லெனினும் ரோசா லக்சம்பர்க்கும் நடத்திய போராட்டமும், போலந்துப் பிரச்சினையில் லெனினுக்கும் ரோசா லக்சம்பர்க்கிற்கும் இடையில் நடைபெற்ற தர்க்கங்களும், முதலாவது உலக மகா யுத்தம் தொடர்பாக லெனின் தலைமையிலான சர்வதேசியவாதிகளுக்கும் ஏகாதிபத்திய அணிக்குச் சார்பாக நிலைமாறிய கார்ல் கவுட்ஸ்கிக்கும் இடையில் நடைபெற்ற கருத்து மோதல்களும் பிரதானமானவை. அவற்றை மேலோட்டமாக இனிப் பார்க்கலாம்.

## தேசிய கலாசார தன்னாட்சி தொடர்பாக லெனின்:

ஆஸ்திரிய சோசலிச ஜனநாயகவாதியான ஒட்டோ பவர் (Otto Bauer), அவரது நண்பர் கார்ல் ரென்னர் (Karl Renner) ஆகியோரும், இரஷ்ய யூதர்களை பிரதிநிதித்துவப்படுத்திய பூந்த் (Bund) அமைப்பும் பிராந்திய அடிப்படையிலின்றி கலாசாரத்தின் அடிப்படையில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு சமூகத்தையும் கலாசாரத்தின் அடிப்படையில் இனம் கண்டு அவற்றிற்கான தனித்தனிப் பாடசாலைகளையும் நிர்வாக அலகுகளையும் அமைக்க வேண்டும் என்றும் இரண்டாவது அகிலத்தில் வாதிட்டனர். இக்கருத்து தொழிலாள வர்க்கத்தை கூறு போடுவது. எனவே பிற்போக்கானது எனவும் அதற்குப் பதிலாக, பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட தன்னாட்சி முறையே வரலாற்று ரீதியானது எனவும் லெனின் தலைமையிலான சமூகவியலாளர்கள் வாதிட்டனர். இக்கருத்தையே அப்போது மார்கஸிசவாதியாக இருந்த கார்ல் கவுட்ஸ்கியும் வலுவாக ஆதரித்தார்.

## கொலனிய மக்களின் விடுதலைக்கு எதிரான பேர்ன்ஸ்டைன் வாத கருத்தும் லெனினிஸ்டுகள் நடத்திய போராட்டமும்:

1907-ல் நடைபெற்ற இரண்டாவது அகிலத்தின் ஸ்டுட்கார்ட் மாநாட்டில் (Stuttgart Congress) லெனினும் ரோசா லக்சம்பர்க்கும் யுத்தம் தொடர்பாக பிரபல்யம் வாய்ந்த தமது திருத்தங்களை முன் வைத்த பொழுது திரிபுவாதியான எட்வர்ட் பேர்ன்ஸ்டைன் (Edward Bernstein) தலைமையிலான அணியினருடன் கடுமையான கருத்து மோதல் மூண்டது. அதில் பேசிய பேர்ன்ஸ்டைன் ஆக்ரோசத்தோடு பின் வருமாறு கூறினான்.





"கொலனிகளைக் கைவிடுவது என்ற கற்பனாவாதக் கருத்தை நாம் கைவிட வேண்டும். இத்தகைய கண்ணோட்டத்தின் இறுதிப் பெறுபேறு ஐக்கிய அமெரிக்காவை இந்தியர்களிடம் திருப்பிக் கொடுப்பதாக அமையும். கொலனிகள் அங்கிருக்கின்றன. அவற்றுடன் நாம் இணக்கத்திற்கு வந்தாக வேண்டும். சோசலிஸ்டுகள் கூட நாகரிக மனிதர்கள் நாகரிகம் அடையாதவர்களின் பாதுகாவலர்களைப் போல ஏதோவொரு விதத்தில் நடந்து கொள்ள வேண்டிய தேவையைப் புரிந்து கொண்டேயாக வேண்டும்" என அவன் முழங்கினான். இதற்கு பதிலளித்த போலந்து பிரதிநிதியான கார்ஸ்கி (Karski) "ரஷ்யாவின் ஜாரும் புருஷ்ய அரசாங்கமும் எமது பாதுகாவலர்களாகச் செயல்பட்டதின் காரணத்தினால் பாதுகாவலன் என்ற சொற்பதத்தின் அர்த்தம் போலந்துக்காரனான எனக்கு நன்கு தெரியும்" எனக் கேலியாகச் சாடினார்.

லெனினிஸ்டுகள் கொலனிய மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை மட்டுமல்ல அதன் புரட்சிகர அம்சத்தையும் உளப்பூர்வமாக ஆதரித்துத் தீர்க்கமாக கருத்துப் போராட்டம் நடாத்தினார்.

## போலந்துப் பிரச்சினையில் லெனின் - ரோசா லக்சம்பர்க் கருத்து மோதல்:

இரண்டாவது அகிலத்தில் போலந்து விடுதலை தொடர்பாக விவாதம் மூண்ட போது தேசியப் பிரச்சினையில் பெரிதும் கருத்தொற்றுமை கொண்டிருந்த போலிஷ் சோசலிசவாதியான ரோசா லக்சம்பர்க்கிற்கும் (Rosa Luxemburg) லெனினுக்கும் இடையே சுவாரசியமான நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன. ரோசா லக்சம்பர்க் பிற்காலத்தில் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் உயிர் துறந்த ஒரு பெண்மணி மட்டுமல்ல ஒரு சிறந்த தத்துவார்த்த ஆசிரியரும் ஆவார். போலந்து நாட்டுக்காரரான இவர் சர்வ தேசியவாத உணர்வு நிலையிலிருந்து கொண்டு போலந்தின் தேசிய விடுதலை இயக்கத்திற்குத் தலைமை கொடுக்கும் பிற்போக்காளர்களுக்கு எதிராகவும் குறுகிய தேசிய வாதத்திற்கெதிராகவும் போராடினார். அதேவேளையில், அவர் அதி தீவிர இடதுசாரி கருத்தோட்ட நிலைக்குச் சென்று போலந்து மக்களின் சுய நிர்ணய உரிமையை மறுத்து வாதாடினார். போலந்து நாட்டை ஆக்கிரமித்த ஜாரிச ரஷ்ய நாட்டைச் சார்ந்த சர்வதேசியவாதியான லெனின் போலந்து மக்களின் சுய நிர்ணய உரிமையை ஆதரித்து ரோசா லக்சம்பர்க்குடன் கருத்து மோதலில் பகிரங்கமாக ஈடுபட்டார். இவ்வாதங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது லெனினால் முன்வைக்கப்பட்ட ஒரு அடிப்படைக் கருத்து மிகவும் முக்கியமானது. "ஒடுக்கும் தேசியங்களும் ஒடுக்கப்படும் தேசியங்களும் முன்வைக்கின்ற தேசியவாதங்களை ஒரே விதமாகப் பார்க்கலாகாது. ஒடுக்கப்படும் தேசியங்களின் தேசியவாதத்தில் ஒடுக்கு முறைக்கெதிரான ஜனநாயக அம்சம் ஒன்றுள்ளது. அதனை சமூகவியளாளர்கள் ஆதரிக்க வேண்டும்" என்ற கருத்தே அதுவாகும்.

இவ்விவாதங்களினால் ரோசா லக்சம்பர்க் மீது லெனின் கொண்டிருந்த பாசமும் மதிப்பும் சற்றும் குறையவில்லை. சிலர் போலந்து பிரச்சினையில் ரோசா லக்சம்பர்க்கின் நிலைப்பாட்டை வைத்து அவரது பங்களிப்பை சிறுமைப்படுத்த முயன்ற போது லெனின் அவர்களை இவ்வாறு நையாண்டி செய்தார்: "உயரப்பறக்கும் கழுகு சில சமயங்களில் தாழப் பறப்பதுண்டு. ஆனால் ஊர்க்குருவி எவ்வளவு தான் முயன்றாலும் கழுகின் உயரத்திற்கு பறக்க முடியாது".

## முதலாவது உலக மகாயுத்தத்தில் லெனினிய - கவுஸ்ட்கிய முரண்பாடுகள்

இரண்டாவது அகிலத்தில் தேசியங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தீர்மானம் நீண்ட சர்ச்சைக்கு மத்தியில் 1896ல் இலண்டன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டபோதும் கூட கொலனிய மக்களின் சுய நிர்ணய உரிமை தொடர்பான விடயத்தில் கருத்து முரண்பாடு தொடர்ந்த வண்ணமே இருந்தது. உதாரணமாக 1904ல் ஆம்ஸ்டர்டம் மாநாட்டில் ஒல்லாந்துப் பிரதிநிதியான வேன் கால் (Van Kol) நாகரிகத்தைப் பரப்பும் பணி என்ற பெயரால் கொலனியலிசத்தை ஆதரித்துத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து பேசுகையில் "பூகோளத்தின் அரைவாசிப் பகுதியை அதில் பொதிந்துள்ள ஏராளமான வளங்களைக் கொண்டு அபிவிருத்தி செய்யாமலும் இம்மண்டலத்தின் மிகவும் செழிப்பான பகுதியை விவசாயம் செய்யாமலும் வெறுமனே கைவிட்டு இன்னும் குழந்தைப் பருவத்தில் இருக்கும் மக்களின் கருணைக்காகக் காத்திருக்கு முடியுமா?" என வினவினார். அதே மாநாட்டில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய இந்திய தேசிய காங்கிரஸின் ஸ்தாபர்களில் ஒருவரும் அதன் தலைவருமாகிய தாதாபாய் நவ்ரோஜி (Dadabhai Naoroji) முன்வைத்த இந்தியாவுக்கான சுயாட்சி பிரேரணை பிரித்தானிய இறைமைக்குட்பட்ட சுயாட்சியாக அமையும் என்ற அடிப்படையில் முன்வைக்கப்பட்டதால் தான் அது அங்கீகரிக்கப்பட்டது.





கவுட்ஸ்கி தேசியங்களின் சுய நிர்ணய உரிமைக்காக நீண்ட காலம் குரல் கொடுத்து வந்தவர். 1896 இலண்டன் மாநாட்டில் அதற்கான தீர்மானத்தையும் நிறைவேற்றியவர். ஆயினும் உலக மகா யுத்தம் நெருங்கியதும் அவரது ஊசலாட்டம் வெளிப்படத் தொடங்கியது. பிற்போக்கு இரஷ்யா, யுத்தத்தில் தோல்வியுறுவது பாட்டாளி வர்க்க நலனுக்கு நன்மை பயக்கும் எனக் கூறிக் கொண்டு தனது தாய்நாடான ஜேர்மனி ஏனைய நாடுகளைக் கொள்ளையடிப்பதற்காக மேற்கொண்ட யுத்தத்தை ஆதரிக்கத் தொடங்கினார். இவரைப் போலவே பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த சமூக ஜனநாயகவாதிகளும் தமது தேசிய வெறியால் கண் மழுங்கிப் போய் தாய்நாட்டைக் காப்பது என்ற பெயரில் தமது நாட்டின் ஏகாதிபத்திய எஜமானர்கள் ஏனைய நாடுகளை கொள்ளையடிப்பதற்காக மேற்கொண்ட யுத்தத்தை ஆதரிக்கத் தொடங்கினார்கள். இவர்களுக்கு எதிராக லெனின் தலைமையிலான அணி விடாப்பிடியாகக் கருத்துப் போராட்டத்தை நடத்தியது.

ஒவ்வொரு நாட்டினதும் பாட்டாளி வர்க்கம் தமது ஆளும் வர்க்கம் பிறநாடுகளையும் கொலனிகளையும் கொள்ளையடிப்பதற்குத் துணை போகாமல் தமது சொந்த நாட்டில் தமது ஆளும் வர்க்கத்திற்கு எதிராக சிவில் யுத்தத்தைத் தொடங்கி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் - அதாவது ஏகாதிபத்திய கொள்ளைக்கார யுத்தத்தை பாட்டாளி வர்க்கம் தமது சொந்த நலனுக்காக உள்நாட்டு யுத்தமாக மாற்ற வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தது. இதன் மூலம் "தாய்நாட்டுப்பற்று" "தேசியவாதம்" என்ற பெயரால் பாட்டாளி வர்க்கம் கண்மூடித்தனமாக மனிதகுல வரலாற்றிற்குத் துரோகம் இழைக்காமல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதை லெனினிசம் போதித்தது. 1914ல் இரண்டாம் அகிலம் சிதைந்த போதும் கூட லெனினின் இந்த கருத்துகள் 1917 ஒக்டோபர் புரட்சியால் சரியானது என நிரூபிக்கப்பட்டதுடன் பாட்டாளி வர்க்கக் கடமையை தேசியவாத வெறி திசைத்திருப்பி விடக்கூடாது என்ற பாடம் நிலைநிறுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3. 1917 - 1949 வரை:
### (தேசிய விடுதலை இயக்கங்கள் சோசலிசத்துக்கான புதிய ஜனநாயகப் புரட்சியுடன் இணைக்கப்பட்ட காலகட்டம்)

மகத்தான 1917 ஒக்டோபர் புரட்சி முதல் 1949 சீன மக்கள் புரட்சி வரையிலான இந்தக் காலகட்டமானது தேசிய விடுதலை இயக்கங்கள் பெரும்பாலான நாடுகளில் மிகவும் முற்போக்குப் பாத்திரம் வகித்த காலகட்டமாகும். லெனின் தலைமையில் உலகின் முதலாவது சோசலிச நாடு 1917ல் உருவானது. சர்வ தேசியவாதியான லெனினது தலைமையிலே தேசியங்களின் சுய நிர்ணய உரிமை என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிகர முழக்கமாக மாறியது. கொலனிய மக்களினதும் ஒடுக்கப்பட்ட தேசியங்களினதும் நம்பிக்கை நட்சத்திரமாக லெனின் உயர்ந்தார். ஒக்டோபர் சோசலிசப் புரட்சி தேசிய விடுதலை இயக்கங்களின் தன்மையில் ஒரு அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வந்தது. முன்னரைப் போலன்றி தேசிய ஒடுக்கமுறைக்கு எதிரான போராட்டத்தில் தீரத்துடன் தலைமை கொடுக்கும் பாத்திரத்தை பூர்ஷ்வாக்கள் வகிக்கத் தயங்கினர். ஒக்டோபர் சோசலிச புரட்சியால் உந்தப்பட்ட பாட்டாளி வர்க்கமும், தேசிய ஒடுக்கு முறையிலிருந்து உண்மையான விடுதலையை சோசலிசத்தில் தேடிய ஒடுக்கப்படும் தேசியங்களும் இப்பொழுது தேசிய விடுதலையை மூலதனத்துவ ஜனநாயக புரட்சியின் அங்கமாகப் பார்க்கவில்லை. மாறாக பாட்டாளி வர்க்கத் தலைமையில் விவசாயிகளின் துணையோடு ஏனைய தேசிய பூர்ஷ்வாக்கள் உட்பட சகல தட்டு வர்க்கங்களையும் இணைத்துக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சியின் அம்சமாகப் பார்க்கத் தொடங்கினர். சாராம்சத்தில் தேசிய விடுதலை என்பது பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் அங்கமாக அன்றி புதிய ஜனநாயகப் புரட்சியின் அங்கமாக மாறிவிட்டது. இக்காலப் பகுதியில் சோசலிசத்தை உச்சரிக்காத விடுதலை இயக்கங்களே இல்லை என்ற அளவிற்கு சோசலிசத்தின்பால் விடுதலை இயக்கங்கள் ஆத்மார்த்தமாக ஈர்க்கப்பட்டிருந்தன.

ஒக்டோபர் புரட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அதுவரை ஜாரிச இரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த போலந்தும் பின்லாந்தும் பிரிந்து சென்றன. அதுவரை தேசியங்களின் சிறைச்சாலை என விமர்சிக்கப்பட்ட ஜாரிச இரஷ்யாவில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான - வெவ்வேறு அளவில் தன்னிறைமை கொண்ட - சுயாட்சி, சுய நிர்வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலகுகள் உருவாக்கப்பட்டு லெனின் காலத்தில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. இதனால் உலகெங்கும் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய விடுதலை இயக்கங்களின் ஆதர்ச பூமியாக, சோவியத் யூனியன் மாறியது. சோவியத் யூனியன் என்பது சுய விருப்பத்தின் அடிப்படையில் சுய நிர்ணய உரிமை கொண்ட தேசியங்கள் சுயமாக தாமே அமைத்துக் கொண்ட கூட்டமைப்பாகத் திகழ்ந்தது. 1924ல் லெனின் காலமாகும் வரை அவர் உலகெங்கும் உள்ள பாட்டாளி வர்க்கத்தினது ஒடுக்கப்பட்ட தேசியங்களினதும் இரட்சகனாகக் கருதப்பட்டார். லெனின் தேசியப் பிரச்சினையைக் கையாளும்போது பெரிய தேசியங்கள், சிறு தேசியங்களுடன் பெருந்தன்மையுடனும் விட்டுக்கொடுப்புடனும் சகிப்புத்தன்மையுடனும் மிகவும் லாவகமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார். ஆயினும் அவருக்குப் பின்னர் அதிகாரத்திற்கு வந்து நீண்ட காலம் சோவியத் யூனியனின் தலைவராக இருந்த ஸ்டாலின் காலத்தில் தேசியப் பிரச்சினையைக் கையாள்வதில் பல பாரதூரமான தவறுகள் நடந்தன.

ஸ்டாலின், தேசியப் பிரச்சினை தொடர்பாக வரலாற்றுப் புகழ் மிக்க நூல் ஒன்றை எழுதியவர் என்ற பெருமையைப் பெற்றவர். லெனின் தலைமையிலான சோவியத் அரசாங்கத்தில் லெனினின் நம்பிக்கைக்கு உரியவராக தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, பொறுப்பான அமைச்சராக இருந்தவர். எனினும் அவர் பல சந்தர்ப்பங்களில் சகிப்புத் தன்மையற்றவராக மாறி உள்நாட்டில் தேசியப்பிரச்சினையை முரட்டுத்தனமாகவும் தவறாகவும் கையாண்டிருக்கிறார். சில சந்தர்ப்பங்களில் சர்வதேசரீதியில் தேசியப் பிரச்சினையைக் கையாளும்போது கூட அவர் தவறான முடிவுகளை மேற்கொண்டிருக்கிறார். லெனின் உயிரோடு இருந்த காலத்திலேயே ஜோர்ஜிய மக்களின் பிரச்சினையைக் கையாண்ட விதம் தொடர்பாக லெனினால் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டதுடன் அல்லாமல் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு - அப்போது அவர் கட்சியில் வகித்த பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலக வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இரண்டாவது உலக மகா யுத்த காலத்தின் போது ஏழு தேசியங்களை (கிரிமிய டார்டர்கள், வோல்கா ஜேர்மனியர்கள், கார்ல்மிக்ஸ் கரைச்சாய், பால்கர்கள், இங்யூசி மக்கள், செசனியர் ஆகியோர்) மத்திய ஆசியாவில் உள்ள சைபீரியாவுக்கு நாடு கடத்தினார். இரண்டாவது உலக மகா யுத்த முடிவில் தோல்வியுற்ற நாடுகளை வெற்றி பெற்ற நாடுகள் பகிர்ந்து கொள்வதில் ஸ்டாலின் பாரதூரமான தவறுகளை இழைத்திருக்கிறார். ஜேர்மனி துண்டாடப்பட்டமை இதற்கான நல்ல உதாரணமாகும். சியோனிசவாதிகளால் பாலஸ்தீனியர்களை

விரட்டியடித்துவிட்டு இஸ்ரேல் நாட்டை செயற்கையான முறையில் ஏகாதிபத்திய தேவைக்காக 1947ல் உருவாக்குவதற்கு துணை போனமை அவர் இழைத்த மற்றொரு பாரதூரமான தவறாகும்.

ஆயினும் அவர் இரண்டாவது உலக மகா யுத்தத்தில் சோவியத் யூனியனை ஹிட்லரின் பிடியிலிருந்து காப்பாற்றியதில் வகித்த பாத்திரம் மகத்தானது. அதுமாத்திரமல்ல கொலனியல் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதில் அவர் காட்டிய தீரம் அவருக்குப் பின்னர் வந்த எந்த சோவியத் தலைவரும் காட்டியதில்லை.

1914ல் வெடித்த முதலாவது உலக மகா யுத்தம் 1918ல் ஜேர்மனி சரணடைந்ததைத் தொடர்ந்து முடிவுக்கு வந்தது. அதுவரை மனிதகுலம் கண்டிராத பேரழிவை அவ்யுத்தம் ஏற்படுத்தியது. 1917ல் அமெரிக்காவும் அக்கொள்ளைக்கார யுத்தத்தில் இணைந்தது. இக்காலப் பகுதியில் தான் தேசியங்களின் சுய நிர்ணய உரிமையை அமெரிக்க ஜனாதிபதி வூட்றோ வில்சன் உயர்த்திப் பிடித்தார். இதற்குப் பின்னால் அமெரிக்காவின் சுயநலமும் இருந்தது. ஏற்கெனவே கொலனிய நாடுகள் பழைய ஏகாதிபத்தியங்களால் கைப்பற்றுப்பட்டு விட்டன. புதிதாக அரங்கிற்கு வந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அனேகமாக எந்த கொலனியும் எஞ்சியிருக்கவில்லை. எனவே ஒடுக்கப்பட்ட கொலனிகள் சுதந்திரம் பெற்றால் அவற்றை மூலதன ஏற்றுமதி மூலம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம் என அது கருதியது.

1919ல் தோல்வியடைந்த ஜேர்மன் தலைமையிலான நாடுகள் மீது அவமானகரமான வார்சேய்ல்ஸ் ஒப்பந்தம் திணிக்கப்பட்டது. தோல்வியடைந்த ஏகாதிபத்திய நாடுகளின் பல வளமான பிரதேசங்கள் வெற்றி பெற்ற ஏகாதிபத்தியங்களால் இவ்வொப்பந்தத்தின் மூலம் கொள்ளையடிக்கப்பட்டன. அத்துடன் அவை வெற்றி பெற்ற நாடுகளுக்கு இழப்பீடும் செலுத்த வேண்டியதாயிற்று. இது ஜேர்மனியர்களின் தேசிய கௌரவத்தைப் புண்படுத்தி அவர்கள் மத்தியில் பழிவாங்கும் உணர்வைத் தூண்டி நாஸிக்கள் ஹிட்லரின் தலைமையிலே அதிகாரத்திற்கு வருவதற்கு வழிவகுத்தது. 1929ல் அதுவரை கண்டிராத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டு மூலதனத்துவ நாடுகள் மூச்சுத் திணறின. இதே காலப் பகுதியில் ஸ்டாலின் தலைமையில் சோவியத் யூனியன் பொருளாதாரத்தில் பல சாதனைகளைப் படைத்துக் கொண்டிருந்தது.





வரலாறு வேடிக்கையான ஒரு ஒப்பீட்டை எம் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறது. இன்றைய பொருளாதாரவாதிகள் சோவியத் யூனியன் சிதைந்த பின்னர் இரஷ்யாவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் பின்னடைவை அமெரிக்கத் தலைமையிலான வளர்ச்சியடைந்த மூலதனத்துவ நாடுகளின் பொருளாதாரத்துடன் ஒப்பிட்டு சோசலிசப் பொருளாதாரத்தைக் கேலி செய்கின்றனர். ஆனால் உலக சனத்தொகையில் நாலில் ஒரு பகுதியினரைத் தன்னகத்தே வைத்திருக்கும் மக்கள் சீனா இன்று சகல துறையிலும் அடைந்து வரும் முன்னேற்றத்தைப் பற்றி அவர்கள் ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை. அத்துடன் அவர்கள் இன்றைய இரஷ்யாவின் பொருளாதாரப் பின்னடைவைச் சுட்டிக்காட்டி சோசலிசம் தோற்று விட்டது எனக் கூறி உலக மக்களை நம்ப வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் 1929 - 1933 காலப் பகுதியில் முழு மூலதனத்துவ நாடுகளும் பொருளாதார நெருக்கடியால் தள்ளாடிக் கொண்டிருந்த வேளை சோசலிசப் பொருளாதாரத்தின் மேன்மையைப் பறைசாற்றிக் கொண்டு அன்றைய சோவியத் யூனியன் பொருளாதாரத் துறையில் பிரமாண்டமான வெற்றிகளை ஈட்டிக் கொண்டிருந்தது.

ஆயினும் உலகின் முதலாவது சோசலிச நாடான ரஷ்யா அங்கு சோசலிச பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் பல தவறுகளை இழைத்திருக்கிறது. அதன் விளைவாக இன்று அது பின்னடைவைக் கண்டிருக்கிறது. அது தன் தவறுகளைத் திருத்திக் கொண்டெழுமானால் இந்நிலைமை தலைக்கீழாக மாறக்கூடும். மாறும்.

1930களில் பொருளாதார நெருக்கடி உச்சமடைந்த வேளையில் ஜேர்மனி வார்சேல்ஸ் ஒப்பந்தத்தின் அவமானகரமான சரத்துகளை மிக ஆழமாக உணரத் தொடங்கியது. இந்நிலையில் ஜேர்மனியத் தொழிலாளர்கள் மத்தியில் சோசலிச தத்துவத்திற்கான ஆதரவு அதிகரித்து வந்த போதும் சமூக ஜனநாயகவாதிகள் கம்யூனிஸ்டுகள் என்ற கட்சிப் பிரிவினை அவர்களது கூட்டுப் பலத்தைப் பலவீனப்படுத்தியது. இவ்விரு சாராரும் கூட்டுச் சேர்ந்திருந்தால் ஜேர்மனியில் பாசிஸம் வெற்றி பெறுவதைத் தடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் தமது முரண்பாடுகளைப் பெரிதுபடுத்திக் கூட்டாகச் செயல்பட தவறினர். இந்த நிலைமை ஹிட்லருக்குச் சாதகமாக அமைந்து விட்டது. ஆரம்பத்தில் தன்னை ஒரு சோசலிசவாதி என்று கூறிக் கொண்டு தொழிலாளர்களின் ஒரு பகுதி ஆதரவைப் பெற்றுக் கொண்ட ஹிட்லரின் தலைமையில், நாஸிக்கள் 1933ல் ஜேர்மனியின் அதிகாரத்தைக் கைப்பற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தொடர்ந்து இத்தாலியிலும் பாசிஸம் முசோலினியின் தலைமையில் ஆட்சியைப் பிடித்தது. இதற்கிடையில் ஆசியாவின் ஒரே ஒரு ஏகாதிபத்திய நாடாக வளர்ச்சி பெற்ற ஜப்பான் 1931ல் மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. இது மாசே துங் தலைமையிலான சீனாவின் விடுதலைப் போராட்டத்திற்கு புதிய வீச்சைக் கொடுத்தது.

1933ல் பாஸிசம் ஆட்சிக்கு வந்த பின்னர் சர்வதேச அரங்கின் அரசியல் போக்கிலே திடீர் மாற்றம் ஏற்பட்டது. முழு மனித குலத்திற்கும் அச்சுறுத்தலாக பாஸிசம் திகழ்ந்தது. ஜேர்மனியர்கள் ஆரியர்கள் - இரத்தக் கலப்பில்லாத தூய இனத்தவர்கள் - நாகரீகத்தில் உயர்ந்தவர்கள் - அவர்களுக்கு மாத்திரமே உலக மக்களை ஆளும் தகுதியும் உரிமையும் உண்டு - ஏனைய தேசியங்கள் ஆரியர்களால் ஆளப்பட வேண்டியவர்கள் எனக் கூறிக் கொண்டு, ஹிட்லரின் பாஸிச சித்தாந்தம் ஏனைய நாடுகளை அடக்கி ஆளப்புறப்பட்டது. 1939ல் போலந்தை அது கைப்பற்றியது. இது இரண்டாவது உலக மகா யுத்தத்தின் தொடக்கத்தைக் குறித்தது. இக்காலகட்டத்தில் உலக பாட்டாளி வர்க்கத்தின் கடமை பாஸிசத்தை தோற்கடித்து ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதாக மாறியது. ஆகவே பாஸிச அச்சுறுத்தல்கள் நிலவிய சகல நாடுகளிலும் பாட்டாளி வர்க்கம் பாஸிசத்தைத் தோற்கடிக்கும் யுத்தத்தில் தமது நாட்டின் ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டிய கடமையை வரலாறு முன் கொண்டு வந்து நிறுத்தியது. முதலாவது உலக மகா யுத்தத்திற்கும் இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கும் ஒரு அடிப்படை வித்தியாசம் இருந்தது. முதலாவது மகா யுத்தமானது ஏகாதிபத்திய நாடுகள் கொலனிகளை தமக்கிடையே மீள்பகிர்வு செய்து கொள்வதற்காக நடத்திய கொள்ளைக்கார யுத்தமாகும். அதில் முற்போக்கு அம்சம் எதுவும் இருக்கவில்லை. மாறாக படுபிற்போக்கு அம்சங்களையே கொண்டிருந்தது. ஆனால் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது நிலைமை வேறு. மனிதகுல நாகரிகத்திற்கே அச்சுறுத்தலாக முளைத்துவிட்ட பாஸிசத்தை முறியடிப்பதற்காகப் பிற்போக்கு ஏகாதிபத்திய சக்திகளுடனும் கூட கூட்டுச் சேர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தம் உலக பாட்டாளி வர்க்கத்திற்கு இருந்தது. இவ் யுத்தத்தை உள்நாட்டில் தன் ஆளும் வர்க்கத்தை தூக்கி எறிவதற்கான போராட்டமாக மாற்றுவது என்ற பழைய கொள்கை பொருத்தமற்றதாக ஆகிவிட்டது. அவ்வாறு செய்திருந்தால் ஜனநாயக சக்திகளை பலவீனப்படுத்தி உலகெங்கும் பாஸிசம் வெற்றி பெறுவதற்கே வழிகோலியிருக்கும். ஆகவே மூன்றாம் அகிலம் பாஸிசத்திற்கெதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக அளவிலான பரந்து பட்ட ஐக்கிய முன்னணி என்ற தந்திரோபாயத்தை வகுத்தது. இவ் ஐக்கிய முன்னணித் தத்துவம் பாஸிசத்தை வெற்றி கொள்வதில் தீர்க்கமான பாத்திரத்தை வகித்தது.

ஆயினும் பாஸிசத்திற்கெதிரான யுத்தத்தில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடுகளல்லாத ஏனை நாடுகளுக்கு, குறிப்பாக ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்த ஐக்கிய முன்னணிக் கொள்கையை அமுல் நடத்தியதில் பெரும் தவறுகள் இடம்பெற்றன. உதாரணமாக இவ் ஐக்கிய முன்னணிக் கொள்கையானது உலக கம்யூனிச இயக்கத்திற்குள் செல்வாக்கு பெறுவதற்கு முன்னர் இந்தியா போன்ற நாடுகளில் விடுதலைப் போராட்டத்தில் தொழிலாள வர்க்கம் பிரதான பாத்திரத்தை வகித்ததுடன் அங்கு போராட்டங்கள் தீவிர வடிவில் நடைப்பெற்றன. ஆனால் இவ் ஐக்கிய முன்னணிக் கொள்கையைத் தவறான முறையில் பிரயோகிக்கத் தொடங்கி உள்நாட்டு பூர்ஷ்வாக்களின் தலைமைக்கு அவை அடிபணிந்த போது அப்போராட்டம் மிதவாதிகளால் தலைமை தாங்கப்பட்டு வலுகுன்றிப் போனது. இதற்கு விதிவிலக்காக சீனா விடுதலைப் போராட்டம், பாட்டாளி வர்க்கத் தலைமையில் விவசாயிகளின் ஆதரவோடு சரியான முறையில் ஏனைய முற்போக்கு வர்க்கங்களுடன் ஐக்கியப்பட்டு புதிய ஜனநாயகப் புரட்சியாக உருவெடுத்தது.

1939ல் தொடங்கிய இரண்டாவது உலக மகா யுத்தம் 1945ல் முடிவடைந்தது. இக்காலப் பகுதியில் தேசியப் பிரச்சினையும் தேசிய விடுதலைப் போராட்டங்களும் சர்வதேச அரங்கில் ஏற்பட்ட மாற்றங்களுக்கேற்ப தமது மூலோபாயத்தையும் கொள்கையையும் வகுத்துக் கொள்ள வேண்டி நேர்ந்ததை இங்கு காணலாம். இக்காலப் பகுதியில் பாட்டாளி வர்க்கம் பெற்ற அனுபவங்களில், பின்வருபவை பிரதானமானவை:

## லெனின் காட்டிய சர்வதேச பாட்டாளி வர்க்கப் பாதை:

ஏற்கெனவே விபரித்ததைப் போல, லெனின் தனது சொந்த இரஷ்ய தேசியத்தால் ஒடுக்கப்பட்ட தேசியங்களுக்கு நியாயம் வழங்குவதிலும் அரசியல் தீர்வு வழங்குவதிலும் மிகுந்த விட்டுக் கொடுப்புடன் நடந்து கொண்டார். சோசலிசப் புரட்சி தேசிய ஒடுக்கு முறையைத் தானாக முடிவுக்கு கொண்டு வந்துவிடும் என அவர் கருதவில்லை. சோசலிச அரசின் கீழும் தேசிய ஒடுக்கு முறையைத் தீர்ப்பதற்கான திட்டவட்டமான வேலைத்திட்டமும் வழி முறையும் இருக்க வேண்டும் என அவர் கருதினார். எனவேதான்,

பல்வேறு அளவில் இறைமை கொண்ட பலவகையான சுயாட்சி நிர்வாக அலகுகள் -அங்கே அதுவரை ஒடுக்கப்பட்ட தேசியங்களுக்கு உருவாக்கிக் கொடுக்கப்பட்டன. அவற்றின் சுய நிர்ணய உரிமை மிகவும் உயர்ந்த அளவில் மதிக்கப்பட்டது.

ஒடுக்கப்பட்ட கொலனிய மக்களின் போராட்டத்தின்பால் லெனின் விசேட அக்கறை கொண்டிருந்தார். அதற்குக் காரணம் வெறும் அனுதாபம் மட்டுமல்ல. ஏகாதிபத்தியத்திற்கெதிரான யுத்தத்திலும் உலக சோசலிச புரட்சியிலும் விடுதலைப் போராட்டங்கள் வகிக்கக் கூடிய புரட்சிகர பாத்திரத்தை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார். எனவேதான் உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! என மார்க்ஸ் உருவாக்கிய சர்வதேச பாட்டாளி வர்க்க முழக்கத்தை மாறிவிட்ட புதிய சூழலுக்கேற்ப "உலகத் தொழிலாளர்களே! ஒடுக்கப்படும் தேசியங்களே! ஒன்றுபடுங்கள்" என வளர்த்தெடுத்தார். அதுவரை பாட்டாளி வர்க்கப் புரட்சியில் தொழிலாளர்களின் நேசசக்தியாக விவசாயிகள் கருதப்பட்டனர். இப்போது அதனுடன் மூன்றாவது ஒரு சக்தியும் லெனினால் இணைத்துக் கொள்ளப்பட்டது. அதுதான் ஒடுக்கப்படும் தேசியங்கள்.

இவ்வாறு ஒடுக்கப்படும் தேசியங்களின் போராட்டத்திலுள்ள முற்போக்குத் தன்மையை தெளிவாகப் புரிந்து கொண்டிருந்த லெனின் - தேசியங்களின் சுய நிர்ணய உரிமை பற்றி ஏனைய எந்தத் தலைவரையும் விட மிகக் கூடுதலாக அக்கறை காட்டியவரான லெனின், ஒக்டோபர் புரட்சிக்கு எதிராக ஏகாதிபத்தியம் ஆர்மீனிய - டஷ்னாக்குகளையும் (Aremenian Dashnaks) உக்ரேனிய ராடாக்களையும் (Ukrainian Rada) பயன்படுத்திய போது, இத் தேசியங்களின் பூர்ஷ்வாக்கள் ஏகாதிபத்தியங்களின் கருவிகளாக கிளர்ச்சி செய்த பொழுது அவர்களது கலகத்தை ஆயுத முனையில் நசுக்கத் தயங்கவில்லை. எனவே தேசிய முழக்கங்கள் என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முற்போக்கானதாக இருப்பதில்லை. ஒடுக்கும் தேசியங்கள் கூடத்தான் தமது மக்களின் மத்தியில் தேசியவாதத்தைக் கிளப்பிக் கொண்டு பிற தேசியங்களை ஒடுக்குகிறது. எனவே தேசியவாதங்களில் முற்போக்கானவைகளை மாத்திரமே பாட்டாளி வர்க்கம் ஆதரிக்க வேண்டும் என மார்க்ஸிச விஞ்ஞானம் எமக்குப் போதிக்கின்றது. இதே கண்ணோட்டத்தில் இருந்து தான் அன்று ஜாரிச இரஷ்யாவின் கூலிப்படையாக ஸ்லாவியர்களின் இயக்கம் செயல்பட்ட போது அது முற்றாகத் துடைத்தெறியப்பட்டாலும் நான் கவலைப்பட மாட்டேன் என





ஏங்கெல்ஸ் கூறினார். இதே நிலைப்பாட்டிலிருந்து தான் முதலாம் உலக மகா யுத்தம் வெடித்த போது ஒவ்வொரு ஏகாதிபத்திய நாடும் தேசிய வெறியைத் தூண்டிவிட்டுத் தாய்நாடு என்ற பெயரால் ஏனைய நாடுகளைக் கொள்ளையடிக்க முயன்ற போது தேசபக்தி என்ற விஷச்சுழிக்குள் சிக்கிக் கொள்ளாமல் பாட்டாளி வர்க்கம் தனது குறிக்கோளில் உறுதியாக இருந்து ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்ற வேண்டும் என லெனின் போதித்தார்.

## பாஸிசத்திற்கெதிரான ஐக்கிய முன்னணி:

1930களில் பாஸிசம் ஐரோப்பாவில் ஒரு போக்காக வளர்ந்து விட்ட போது உலக அரசியலின் உள்ளடக்கம் மாற்றமடைந்தது. இதற்கேற்ப பாஸிசத்திற்கெதிரான போரில் ஏகாதிபத்திய பூர்ஷ்வாக்களுடன் கூட பாட்டாளி வர்க்கம் கைகோர்க்க வேண்டியிருந்தது. தூய புரட்சியைப் பற்றியும் உணர்ச்சி வசப்பட்ட வீர வசனங்களையும் மாத்திரம் பேசிக்கொண்டு பாட்டாளி வர்க்கம் இந்தக் கடமையைச் செய்யத் தவறியிருந்தால் பாஸிசம் உலகெங்கும் வெற்றிபெற்று சோசலிச சக்திகள் மட்டுமல்ல ஜனநாயக சக்திகளும் முற்றாக அழிக்கப்பட்டிருக்கும்.

## ஜேர்மனியுடன் சோவியத் யூனியன் செய்து கொண்ட சமரச ஒப்பந்தம்:

1933ல் ஜேர்மனியின் ஆட்சிப்பீடத்திற்கு வந்த ஹிட்லர் தேசிய வெறியை மூட்டிவிட்டு யூதர்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் எதிராக ஜேர்மனியர்களை ஏவி, படுகொலை செய்வித்தான். அசுர பலத்தோடு அதிசய வேகத்தில் இராணுவ பொருளாதாரக் கட்டமைப்பை புனர்நிர்மாணம் செய்து கட்டியெழுப்பிய அவன், அதுவரை உலகம் கண்டிராத பீரங்கிகள், கவச வாகனங்கள், டாங்கிகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் என நவீன ஆயுதங்களின் துணையோடு புதிய இராணுவ உத்திகளைப் பயன்படுத்தி அயல்நாடுகளை அச்சுறுத்தத் தொடங்கினான். பாஸிசத்தை வளரவிடாமல் அதனைக் கருநிலையிலேயே அழித்துவிட வேண்டும் என ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியன் கூறியபோதும் கூட, மேற்கத்திய நாடுகள் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. போலந்தை ஹிட்லர் கைப்பற்றிய போது மேற்கத்திய நாடுகள் அடுத்த அவனது இலக்கு சோவியத் யூனியன் தான் என மகிழ்ச்சி கொண்டன. பாஸிசப் படைகளுக்கும் சோவியத் யூனியன் படைகளுக்கும் இடையே யுத்தம் மூண்டு இரு தரப்பினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனப்படுவதை அவர்கள் விரும்பினர். இதனைப் புரிந்து கொண்ட ஸ்டாலின் சுய கௌரவம், வறட்டுத் தேசியவாதம், என்றெல்லாம் பாராமல் மிகவும் இராஜதந்திரமான ஒரு காரியத்தைச் செய்தார். 1939 ஒகஸ்டு மாதம் ஹிட்லருடன் யுத்தத் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். இதனையடுத்து ஹிட்லரின் கவனம் மேற்கு நாடுகளின் மீது திரும்பியது. சோவியத் யூனியனுக்கு இராணுவ ரீதியில் தன்னை பலப்படுத்திக் கொள்வதற்கு சற்று அவகாசம் கிடைத்தது. இவ்வொப்பந்தம் சிறிது காலத்திற்குள் முறிவடைந்து சோவியத் யூனியனுக்கும் ஜேர்மனிக்கும் யுத்தம் மூண்ட போது சோவியத் யூனியன் ஹிட்லரின் படையை எதிர்கொள்ளும் அளவிற்குப் பலம் பெற்றிருந்தது. அப்போது ஸ்டாலின் ஹிட்லரோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை சோவியத் யூனியனில் இருந்த சில தேசியவாத சக்திகள் கடுமையாக விமர்சித்தன. தேசபக்தி என்பது உலகில் மிக உயர்ந்த புனிதமான விடயம் என்று மார்க்சிஸ்டுகள் கருதியதில்லை. அவர்களது அடிப்படைத் தத்துவமானது மார்க்ஸ் தனது கம்யூனிஸ்ட் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு "பாட்டாளி வர்க்கத்திற்கு எந்த நாடும் கிடையாது" என்பதாகும். எனவே தான் வறட்டுத் தேசியவாத சகதியில் சிக்கிக் கொள்ளாமல், முன்னால் உள்ள ஆபத்தை முன்னுணர்ந்து இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு சோவியத் யூனியனைக் காப்பற்ற முடிந்தது.

இக்காலகட்டத்தில் வரலாற்றில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு குறிப்பாக ஆசிய - ஆபிரிக்க நாடுகளில் விழிப்புப் பெற்ற மக்களின் விடுதலைப் போராட்டம் வீறுநடை போட்டது. உலக சனத் தொகையில் நான்கில் ஒரு பங்கைக் கொண்டிருந்த சீனாவில் சோசலிசப் பதாகையுடன் மக்கள் புரட்சி முன்னேறிக் கொண்டிருந்தது. இங்கு சன்யெட்சன் தலைமையிலான தேசிய முதலாளித்துவ அணியுடன் சீன கம்யூனிஸ்ட் கட்சி சரியான முறையில் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டு ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்திற்குத் தலைமை கொடுத்தது. சன்யெட்சன்னின் மறைவிற்குப் பிறகு குவாமிங்தாங்கின் (தேசிய விடுதலை முன்னணி ) தலைமைப் பதவிக்கு வந்த சீயாங்காய் ஷேக் ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாக மாறிய போது அவனுக்கு எதிராகவும் யுத்தம் நடத்தியது சீனப் புரட்சிதான். பூர்ஷ்வாக்களின் தலைமையில் அன்றி பாட்டாளி வர்க்க தலைமையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது வெற்றிகரமான சோசலிசத்திற்கான புதிய ஜனநாயகப் புரட்சியாகும்.





ஆனால் இந்தியாவின் நிலைமை வேறுமாதிரி இருந்தது. 1931ல் உப்பு யாத்திரையோடு பிரபல்யம் பெற்று விட்ட காந்திய வாதம் அங்கு உருவாகியிருந்த ஏகாதிபத்திற்கு எதிரான தீச்சுவாலையைத் தணிப்பதற்கு உள்நாட்டு பூர்ஷ்வாக்களுக்குத் துணை போனது. அங்கு கம்யூனிஸ்டுகளின் தலைமையில் விடுதலைப் போராட்டம் பல இடங்களில் வெற்றிகரமாக தீவிரவடிவில் முன்னெடுக்கப்பட்ட போதும் கூட, சோவியத் யூனியன் முகாம் அவற்றை ஆதரிப்பதற்குப் பதிலாக இந்தியாவின் காந்தி - நேரு தலைமையிலான பூர்ஷ்வா தலைமையையே ஆதரித்தது. கம்யூனிஸ்டுகளால் வெற்றிகரமாக நடத்தப்பட்ட தெலுங்கானா போராட்டத்தைக் கூட சோவியத் யூனியன் ஆதரிக்கத் தவறியது. ஐதாராபாத்தில் அதன் ஆட்சியை சர்தார் வல்லபாய் படேல் குரூரமாக நசுக்குவதற்கு இராணுவத்தை ஏவியபோது அதையும் சோவியத் யூனியன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தது. இந்திய பூர்ஷ்வா ஆளும் வர்க்கத்திற்குத் தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கி கொண்டிருந்தது. இந்திய சுதந்திரத்திற்கான போராட்டம் மிதவாத, மதவாத, பூர்ஷ்வாக்களினால் முன்னெடுக்கப்பட்டதனால் இந்தியா பெற்றெடுத்த சுதந்திரம் குறைப்பிரசவமாக அமைந்துவிட்டது. அதன் விளைவை இந்தியா அனுபவித்தது. இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

இந்திய பூர்ஷ்வாக்களால் எழுப்பப்பட்ட இந்திய தேசியவாதத்தின் ஒரு அம்சத்தை இங்கே மனதில் இருத்திக் கொள்வது ஈழப் போராட்டத்தின் கண்ணோட்டத்தின் நோக்கு நிலையில் எமக்கு சில பயனுள்ள பாடங்களைத் தரக்கூடும். தொழிலாள வர்க்கம் இந்தியாவின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமையைத் தமது கைகளில் பற்றிக் கொள்ளாமல் தமது பூர்ஷ்வாக்களுக்கு அதனைத் தாரை வார்த்துக் கொடுத்ததன் இரண்டு பிரதான விளைவுகளை இந்தியாவின் முழு மக்களும் இன்று அனுபவிக்கிறார்கள். முதலாவது, இந்திய - பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டது. இரண்டாவது, சாதியவாதம் நிரந்தரமான அம்சமாக இந்திய அரசியலுக்குள் நிறுவனமயப்படுத்தப்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்டம் இந்திய பூர்ஷ்வாக்களால் தலைமை தாங்கப்பட்ட போது அங்கு எழுப்பப்பட்ட தேசியவாதம், சாராம்சத்தில் ஹிந்து பிராமணிய உயர் சாதியினரின் சித்தாந்தமாகவே திகழ்ந்தது. இந்தியா மதச் சார்பற்ற நாடு என்று கூறப்பட்டாலும் இந்திய தேசியவாதம் மத சார்பற்ற பொது சித்தாந்தமாகத் திகழவில்லை. இந்திய தேசிய வாதத்தின் தந்தையாகக் கருதப்படும் காந்தி, தான் நடத்திய போராட்டத்திற்கு மதச்சார்பற்ற தன்மையை வழங்குவதற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலாக ஹிந்து உயர் குடிகளின் செல்வாக்கிற்குட்பட்ட சித்தாந்தத்தை அதற்குள் புகுத்தியே வந்தார். எனவே இந்திய தேசியவாதத்திலிருந்து முஸ்லிம்களை பிரித்தானியாவால் தனது ஏகாதிபத்திய தேவைக்காக இலகுவில் அந்நியப்படுத்த முடிந்தது. மறுபுறத்தில் மகாத்மா காந்தியின் தீண்டாமை ஒழிப்பு இயக்கமானது சாதி ஒழிப்புப் போராட்டமாக முன்னெடுக்கப்படவில்லை. மாறாக சாதிக் கட்டுமானம் சிதையாமல் அதனைப் பாதுகாத்த வண்ணம் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவர்களை இணைத்துக் கொள்ளும் உத்தியாகவே அது சாராம்சத்தில் இருந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டம் பாட்டாளி வர்க்கத் தலைமையில் நடந்திருந்தால் இந்தியாவின் முன்னேற்றம், சீனா இன்று அடைந்திருக்கும் முன்னேற்றத்தை விட வேகமாக இருந்திருக்கும். மதச்சார்பற்ற புரட்சிகர தேசியவாதம் சகல தேசியங்களையும் மேலும் இறுக்கமாக ஒன்றிணைத்திருக்கும்.

## 2.4. 1949 - 1991 வரை: (பனிப்போர் (Cold War) நிகழ்ந்த காலகட்டம்):

இரண்டாம் உலக மகா யுத்த முடிவில் சர்வதேச அரங்கின் அரசியல் நிலைமை வெகுவாக மாற்றமடைந்திருந்தது. முதலாவது உலக மகா யுத்த முடிவில் உலக நிலப்பரப்பில் ஆறில் ஒரு பங்கைக் கொண்டிருந்த சோவியத் யூனியன் சிவப்பு கொடியின்கீழ் ஆளப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை அழிப்பதற்காகத்தான் ஹிட்லரை மறைமுகமாக மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் மௌனமாக ஆதரித்து வந்தன. ஆனால் சோவியத் யூனியனோடு நடந்த போரில் ஹிட்லரின் படைகள் உரிய பாடத்தைக் கற்றதுடன் பாஸிசத்தின் முதகெலும்பும் சோவியத் யூனியனால் அடித்து நொருக்கப்பட்டது. இரண்டாவது, உலக மகா யுத்த முடிவில் ஏகாதிபத்தியங்கள் எதிர்பாராத மற்றொரு விளைவை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. உலக சனத்தொகையில் நாலில் ஒரு பங்கைக் கொண்டிருந்த சீனாவிலும் செங்கொடி பறப்பதை ஏகாதிபத்தியங்கள் கண்டன. அத்துடன் ஆசியா ஆபிரிக்க நாடுகளில் எல்லாம் சுதந்திர விடுதலை வேட்கை கரைபுரண்டு ஓடுவதையும் அவை கண்டன. பெரும்பாலான விடுதலை இயக்கங்கள் சோசலிசப் புரட்சியைத் தமது இலக்காகக் கொண்டிருப்பதைக் கண்டு அவை பீதியடைந்திருந்தன. மறுபுறத்தில் அதுவரை சூரியன் மறையாத பேரரசைக் கொண்டிருந்த பிரித்தானியாவும் ஏனைய





ஏகாதிபத்தியங்களும் பல கொலனிகளை இழந்திருந்ததுடன் முன்னர் இருந்த உன்னத நிலையில் இருந்து தரமிறக்கப்பட்டிருந்தன. பல புதிய சுதந்திரம் பெற்ற நாடுகள் உலக அரங்கில் உதயமாகியிருந்தன. இன்னும் பல கொலனிய நாடுகள் தமது சுதந்திரத்தின் விளிம்பில் இருந்தன.

எகிப்தில் 1952ல் மன்னர் பாரூக் தலைமையிலான பிரித்தானிய சார்பு அரசாங்கம் தூக்கி எறியப்பட்டு கமால் அப்துல் நாசர் ஆட்சிக்கு வந்தார். 1956ல் சூயஸ் கால்வாய் தேசியமயமாக்கப்பட்டது. 1957ல் கானா சுதந்திரம் பெற்ற முதல் நாடாக ஆபிரிக்க கண்டத்தில் உதித்தது. 1960ல் கொங்கோ பெல்ஜியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றது. 1962ல் அல்ஜீரியா பிரான்ஸிடமிருந்து சுதந்திரம் பெற்றது. 1963ல் ஆபிரிக்க ஐக்கியத்திற்கான அமைப்பு உருவாக்கப்பட்டது. 1958ல் ஐக்கிய அரபுக் குடியரசு உருவானது. 1948ல் வல்லரசுகளால் பாலஸ்தீனம் துண்டாடப்பட்டு இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பின்னர் 1964ல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் உருவானது. ஆசியாவின் ஒரு கோடியில் சீனப் புரட்சியினால் உந்தப்பட்ட வியட்நாம், லாவோஸ், கம்பூச்சியா ஆகிய நாடுகள் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்காக ஆயுதம் ஏந்தி போராடிக் கொண்டிருந்தன. அதுவரை தோல்வியே கண்டிராத அமெரிக்கா முதல் தடவையாக 1954ல் தென் கொரியப் போரில் படு தோல்வியைச் சந்தித்தது.

இத்தகைய நிலைமைகளால் ஆட்டம் கண்டுபோன பழைய ஏகாதிபத்தியம் தனது சுரண்டல் வடிவத்தை மாற்றிக் கொண்டது. இப்போது அது நவ ஏகாதிபத்தியமாக மாறியது. இந்தப் புதிய ஏற்பாட்டின் கீழ் ஏகாதிபத்தியங்கள் நேரடியாகத் தமது கொலனிகளை ஆயுதமுனையில் ஆட்சி செய்யவில்லை. மாறாக, உள்நாட்டில் தமக்கு விசுவாசமான வர்க்கங்களின் கைகளில் தாம் அதுவரை சுரண்டிய கொலனிகளைப் பாதுகாப்பாக சுதந்திரம் என்ற பெயரால் ஒப்படைத்துவிட்டு அவை மறைவாகக் கடனுதவி வழங்குவதன் மூலமும் முதலீடு செய்வதன் மூலமும் தமது சுரண்டலைத் தொடர்ந்தன. இதே முறையின் கீழ் கொலனிய நாடுகளின் மூலவளங்களையும் சுரண்டின.

ஒரு காலத்தில் அகண்ட - இஸ்லாமியவாதம் (உலகெங்கும் உள்ள முஸ்லிம்களை ஒரு கலிபாவின் தலைமையின்கீழ் கொண்டு வருவது என்ற சர்வதேச இஸ்லாமிய மதவாதம் Pan – Islamism என அழைக்கப்படுகிறது) ஏகாதிபத்தியத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. மத்திய கிழக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் ஒரே மொழியைப் பேசும் - (அதாவது அரபு மொழியைப் பேசும்) ஒரே மதத்தை வழிபடும் (இஸ்லாம் மதத்தை) மக்களை, பல அரசுகளாக செயற்கையான முறையில் கூறுபோட்டு இஸ்லாம் மதத்திற்குள்ளிருக்கும் சில உட்பிரிவுகளுக்கு உயிரூட்டி வளர்த்து அவற்றிடையே ஒற்றுமையைச் சீர்குலைத்ததன் மூலம் அவர்களின் கூட்டுப் பலத்தை பலவீனப்படுத்தி அவர்களது மண்ணுக்குக் கீழ் உள்ள எண்ணெய் வளத்தை மறைமுகமாகத் தனது கட்டுப்பாட்டிற்குள் அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் கொண்டு வந்தன.

இவ்வாறு புதுவடிவம் பெற்ற நவீன ஏகாதிபத்தியத்தின் தலைமை படிப்படியாக - இரு உலக யுத்தங்களிலும் அதிக இழப்புகளை சந்தித்திராத - பொருளாதார பலத்தில் ஏனைய சகல நாடுகளையும் மிஞ்சும் அளவிற்கு வளர்ச்சி பெற்றிருந்த - அமெரிக்காவின் கைகளுக்கு மாறியது. சோசலிசம் இக்காலப் பகுதியில் அவர்களைப் பீதிகொள்ள வைத்த பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. எனவே உலக சோசலிச இயக்கத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக ஏகாதிபத்தியங்கள் தமது முரண்பாடுகளைச் சமரசம் செய்து கொண்டு கூட்டுச் சேர்ந்தன. ஆனால் துரதிஷ்டவசமாக இரு பெரும் சோசலிச நாடுகளான சோவியத் யூனியனும் மக்கள் சீனாவும் 1962ல் சித்தாந்த வேறுபாடுகளால் முரண்பட்டு பகை நாடுளாக மாறியதால் சோசலிச முகாம் இரு முகாம்களாக பிளவுண்டு பலவீனப்பட்டது. இக்காலப் பகுதியில் சீனாவும் சோவியத் யூனியனும் பல நாடுகளில் கம்யூனிச அமைப்பின் தலைவர்களை ஆள் பிடிக்கும் பாணியில் - சில சமயங்களில் முதலாளித்துவ பாணியில் - தமது முகாமுக்கு செயற்கையான முறையில் இணைத்ததின்மூலம் உலகெங்கும் கம்யூனிச கட்சிகள் பிளவுண்டன. அதேபோல தேசிய விடுதலை இயக்கங்களும் பிளவுண்டன. இப்பிளவுகள் அப்போது பலவீனமான நிலையிலிருந்த ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது.

### மனித உரிமைகள் - மனித உரிமை இயக்கங்கள் சிஐஏ - ஐ.நா.:

இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்தவுடன் 1945 ஒக்டோபர் 24ந் திகதி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. இத்தகைய உலக அமைப்பின் தேவை ஒன்று அப்போது வெகுவாக உணரப்பட்டிருந்தது. ஆனால் அதன் உருவாக்கத்திலும் அதனைக் கட்டுப்படுத்துவதிலும் அமெரிக்காவே முதன்மை இடத்தைப் பெற்று வந்தது. ஐ.நா. உருவான





காலம் முதல் மனித உரிமைகள் என்ற சித்தாந்தத்தை அமெரிக்க தலைமையிலான வல்லரசுகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் சாராம்சத்தில் மனித உரிமைகள் கோஷம் அமெரிக்காவின் ஊடுருவலை அல்லது செல்வாக்கைப் பிற நாடுகளில் நவீன வடிவில் திணிப்பதற்கான கருவியாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை வரலாறு நிரூபிக்கின்றது.

1776ம் ஆண்டு அமெரிக்க சுதந்திரப் போருக்கு முன்னால் மனித உரிமை என்ற சொற்பதம் அதிகம் பரிச்சயமானதாக இருக்கவில்லை. அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில் மனித உரிமைகள் பற்றிய வாசகம் முதற்தடவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அது பின்வருமாறு கூறுகிறது: "சகல மனிதர்களும் சமமானவர்களாகவே படைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் படைத்தவனால் - எவராலும் பறித்தெடுக்க முடியாத - உரிமைகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் உயிர் வாழும் உரிமை, சுதந்திரம், மகிழ்ச்சியுடன் இருப்பதற்கான உரிமை என்பன உள்ளடங்கும்".

இதன்படி அமெரிக்க சுதந்திரப்போரில் உயிர் வாழ்வதற்கான உரிமை, தனி மனித சுதந்திரம், மகிழ்ச்சியான வாழ்க்கை என்பன அடிப்படை மனித உரிமைகளாக முன்வைக்கப்பட்டன. இம்முழக்கம் அக்கால கட்டத்தில் மிகவும் முற்போக்கானதாக இருந்தது. ஏனெனில் அவை அப்போது வர்க்கத்தன்மை கொண்டதாக இருக்கவில்லை. இப்பிரகடனத்தின் ஒரு வாசகம் மக்கள் விருப்பத்தினால் தெரிவு செய்யப்படாத எந்த ஒரு அரசாங்கத்தையும் தூக்கியெறியும் அதிகாரம் மக்களுக்கு உண்டு எனக் குறிப்பிடுகிறது. எனவே அது மக்களின் கையில் அரசியல் அதிகாரத்தை வைத்திருப்பது பற்றியே அழுத்தம் கொடுக்கிறது.

1789ம் ஆண்டு நடைபெற்ற பிரான்சியப் புரட்சி, அடிப்படை மனித உரிமைகள் பிரச்சினையை மற்றொரு கட்டத்திற்குக் கொண்டு சென்றது. அது: "மனிதர்கள் சம உரிமையோடும் சுதந்திரத்தோடும் பிறந்தவர்கள், வாழ்பவர்கள். சகல அரசியல் ஒன்றிணைப்பினதும் நோக்கம் மனிதர்களின் பிரிக்கமுடியாத இயற்கை உரிமைகளைப் பாதுகாப்பதாகும். இவ்வுரிமைகளாவன சுதந்திரம், சொத்துரிமை, பாதுகாப்பு, ஒடுக்குமுறை மறுதலிப்பு என்பனவாகும். சகல இறைமைத் தத்துவங்களும் குடிமக்கள் மீதே ஆதாரப்பட்டிருக்கிறது. சுதந்திரம் என்பது பிறரைப் புண்படுத்தாமல் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கான ஆற்றலாகும்". இச் சாசனத்தில் தனிச்சொத்துரிமை இணைக்கப்பட்டதன் மூலம் அதற்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தன்மை கொடுக்கப்பட்டது. இவ்வர்க்கத் தன்மையை மார்க்ஸ் மிகத்துல்லியமான முறையில் விமர்சித்திருக்கிறார்.

மூலதனம் என்ற மார்க்ஸின் வரலாற்றுப் புகழ்மிக்க நூலில் இதைப்பற்றி கூறும் போது "பண்ட பரிமாற்றத்தின் போது உழைப்புச் சக்தியை விற்பதுவும் வாங்குவதும் பரிணமிக்கிறது. இங்குதான் யதார்த்த ரீதியில் உண்மையான மனிதனின் உரிமைகள் என்ற சொர்க்கம் காணப்படுகின்றது" எனச் சுவைபட விபரிக்கிறார். இதன் அர்த்தம் முதலாளித்துவ சமூகம் கூறும் சுதந்திரமானது தொழிலாளர்களின் உழைப்பை விற்பதற்கும் வாங்குவதற்குமான உரிமையையும், சொத்துகளை தனியுடைமையாக்கி அவற்றை வாங்குவதற்கும் விற்பதற்குமான சுதந்திரத்தையுமே குறிக்கிறது என்பதாகும். "தத்துவத்தின் வறுமை" என்ற அவரது மற்றொரு நூலில் "சுதந்திரம் என்ற தெளிவற்ற சொற்பதத்தால் ஏமாற்றப்படாமல் இருங்கள். இது யாருடைய சுதந்திரம்? ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மற்றொருவனின் மீதுள்ள உறவின் சுதந்திரம் அல்ல அது. அது தொழிலாளியை நசுக்குவதற்கான மூலதனத்தின் சுதந்திரமாகும்" எனக் குறிப்பிட்டார். "புனித குடும்பம்" என்ற மற்றொரு நூலில் யூதர்களின் பிரச்சினை என்ற தலையங்கத்தின் கீழ், பிரான்சிய மனித உரிமைச் சாசனத்தை நேரடியாக விமர்சிக்கும் போது "இயற்கையானதும் பிரிக்கமுடியாததுமான இவ்வுரிமைகளான சமத்துவம், பாதுகாப்பு, சொத்துரிமை என்பனவாகும். இச் சுதந்திரம் எதைக் கொண்டிருக்கிறது? இத்தகைய சுதந்திரத்திற்கான உரிமை மனிதனை மனிதனோடு ஒன்று படுத்துவதில் ஆதாரப்பட்டிருக்கவில்லை அதற்கு மாறாக மனிதனை மனிதனிலிருந்து பிரிப்பதிலேயே ஆதாரப்பட்டிருக்கிறது... மனிதனது நடைமுறைப் பிரயோகத்தில் சுதந்திரம் என்பது தனிச் சொத்துரிமைக்கான மனித உரிமையையே ஆகும். ஆகவே தனிச் சொத்துடைமைக்கான மனித உரிமை என்பது ஏனைய மனிதர்களைப் பற்றிய கரிசனை எதுவுமின்றி ஒருவரிடமிருந்து தனிச் சொத்துரிமையை இல்லாமல் செய்து அதனை மற்றொருவர் பெற்று அனுபவிப்பதற்கான உரிமையாகும்" எனக் குறிப்பிடுகிறார். மார்க்சும் ஏங்கெல்சும் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்ற நூலில் இவ்விடயம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அடிப்படை தனிமனித உரிமைகள் என மூலதனத்துவவாதிகள் குறிப்பிடுவது சாராம்சத்தில் சுரண்டும் உரிமையையே, அதாவது இயற்கை வளங்களைத் தனிச் சொத்துடைமையாக்கி அவற்றை வாங்கி விற்பதன் மூலம் லாபம் சம்பாதிப்பதையும் உழைப்பாளர்களின் உழைப்பை மலிவான விலையில்





வாங்குவதற்கும், பொருட்களைச் சந்தையில் விற்றுக் கொள்ளை லாபம் ஈட்டுவதற்கும் உள்ள உரிமையையே என மார்க்சிச மூலவர்கள் எமக்கு விளக்கியிருக்கிறார்கள். அத்துடன் தனிச் சொத்துடைமை நிலவும் வரைக்கும், மூலதனத்தின் ஆட்சி நிலவும் வரைக்கும், உண்மையான தனிமனித சுதந்திரம் என்பது கற்பனாவாத முழக்கமாகவே திகழும்.

அமெரிக்கா மனித உரிமைகள் என்ற முழக்கத்தை தூக்கிப்பிடிப்பது மனித குலத்தின் மீது அதற்குள்ள அக்கறையால் அல்ல. மாறாக தனது அரசியல் நோக்கங்களை நவீனமுறையில் அடைவதற்கும் தனது அப்பட்டமான மனித உரிமை மீறல்களை மூடி மறைப்பதற்கும் தான் என்பதை அதன் செயற்பாடுகள் உணர்த்துகின்றன. நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் இக்காலப் பகுதியில் தான் மனித உரிமைகள் பற்றிய பிரச்சாரம் அமெரிக்காவின் தலைமையில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு முனைப்பாக முன்னெடுக்கப்பட்டது. இப்பிரச்சாரங்கள் யாவும் சாராம்சத்தில் சோசலிசத்திற்கு எதிராகவே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் யதார்த்தத்தில் அமெரிக்காவைப் போல மனித உரிமைகளை மீறிய நாடு உலகத்தில் வேறெதுவும் கிடையாது என்பதை வரலாறு எமக்கு நிரூபித்துள்ளது. குறிப்பாக 1947ல் சி.ஐ.ஏ. நிறுவனம் உருவாக்கப்பட்ட பிறகு உலகெங்கும் அமெரிக்கா ஜனநாயக ஆட்சியாளர்களைத் தூக்கியெறிவதற்குச் செய்துள்ள சதிகளையும் கொடூரமான படுகொலைகளையும் ஒரு நீண்ட பட்டியலிட்டுக் காட்ட முடியும்.

உலகில் அணுகுண்டைப் பயன்படுத்திய ஒரே ஒரு நாடு அமெரிக்காவாகும். ஆபிரிக்க மக்களின் சுதந்திர தாகத்தை நசுக்குவதற்கு சி.ஐ.ஏ. மேற்கொண்ட சதிகளை உலகறியும். ஆபிரிக்கத் தேசியவாதியான லுமும்பாவைக் கைது செய்து கடும் சித்திரவதைக்குள்ளாக்கித் தலையில் வெடிவைத்துக் கொன்றதுடன் நில்லாமல் அவரது உடலை அமிலத்தில் கரைத்தது அமெரிக்கபாணியில் மனித உரிமையைக் காப்பாற்றுவதற்குத் தான். சிலி நாட்டில் தேர்தலிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சோஷலிசவாதி சல்வதோர் அலண்டேயை 1973 செப்டம்பர் சி.ஐ.ஏ. சதிமூலம் படுகொலை செய்துவிட்டு அகஸ்டோ_பினோசே தலைமையிலான பொம்மை ஆட்சியை ஏற்படுத்திக் கோரமான அடக்குமுறையை சிலி மக்கள்மீது திணித்தது மனித உரிமையைக் காப்பாற்றத்தான். அங்கோலாவில் கிளர்ந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்காக ஜோனஸ் சுவாம்பி என்ற பயங்கரவாதிக்கு மூன்று தசாப்தங்களாக சி.ஐ.ஏ. மூலம் பணமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதமும் பயிற்சியும் வழங்கி ஒரு கறைபடிந்த நீண்ட அத்தியாயத்தை அமெரிக்கா எழுதியதும் மனித உரிமைக்காகத் தான். சயரே நாட்டில் மொபூட்டு என்ற சி.ஐ.ஏ. ஏஜெண்டை வைத்துக் கொண்டு அங்கு நடத்திய சர்வாதிகார வெறியாட்டம் அமெரிக்காவின் மனித உரிமைகளைப் பறைசாற்றும் மற்றொரு அத்தியாயம். ஹெயிட்டி நாட்டில் இமானுவேல் கொன்ஸ்டன்ட் என்ற கொடூரமான ஏஜென்டின் மூலம் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைப் படுகொலை செய்ததும் ஈரானிலே 1953ல் சதிகளை மேற்கொண்டதும் மனித உரிமையைக் காப்பதற்காகத்தான். 1965ல் இந்தோனேசியாவிலே சுகர்னோ அரசாங்கத்தைத் தூக்கி எறிந்துவிட்டு சுகார்ட்டோ என்ற கைப்பொம்மையை ஆட்சியில் அமர்த்துவதற்காக 42 ஆயிரம் எதிர்ப்புரட்சியாளர்களைப் பயிற்றுவித்து சுமத்திரா தீவுக்கு அனுப்பி அதனை ஒரு எதிர்ப்புரட்சித் தளமாகப் பாவித்து 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைப் படுகொலை செய்தது அமெரிக்காவின் மனித உரிமை வரலாறாகும்.

மனித உரிமைகளின் பேரால் அமெரிக்கா நடத்திய நீண்ட கால யுதத்தத்தில் வியட்நாமிலே ஊனமுற்ற சிறுவர்களின் தொகை மாத்திரம் 5 இலட்சத்திற்கும் அதிகம். உலகின் மிகக்கூடிய அங்கவீனர்களைக் கொண்ட நாடு என்ற பெருமை கம்பூச்சியாவிற்கு அமெரிக்காவின் மனித உரிமை நடவடிக்கையால் கிடைத்திருக்கிறது. வியட்நாமிலே அமெரிக்கா பயன்படுத்திய இராசயன ஆயுதங்களின் பாதிப்பை இன்னும் அந்த நாடு அனுபவித்து வருகிறது. கியூபா மீது அமெரிக்கா பயன்படுத்திய பிளேக் வைரஸ் பல வருடங்கள் அந்நாட்டின் பன்றி உற்பத்தியைப் பாதித்தது. சீனாவிலே, கொரியாவிலே, கௌதமாலாவிலே, பெருவிலே, கிரெனெடாவிலே, பனாமாவிலே, எல் சல்வடோரிலே, நிக்கராகுவாவிலே, பொஸ்னியாவிலே, யூகோஸ்லாவியாவிலே, லிபியாவிலே, சோமாலியாவிலே, ஈரானிலே, ஆப்கானிஸ்தானிலே, ஈராக்கிலே என்று அதன் மனித உரிமை சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இத்தகைய வெளிப்படையான செயல்களைவிட அமெரிக்காவின் மறைமுகமான செயல்பாடுகளே மிகவும் ஆபத்தானவை. அது பல சித்தாந்தங்களை மிக லாவகமாகத் தனது நோக்கத்திற்காகப் பயன்படுத்தியிருக்கிறது. மார்க்சிசம் என்பது மறுதலிக்க முடியாத சமூக விஞ்ஞானம் என்பதைப் புரிந்து கொண்ட அது அச்சிந்தாந்தத்தை ஏற்றுக் கொண்டவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக அதற்குள் நிலவும்





ட்ரொட்ஸ்கியிசம், ஸ்டாலினிசம், மாவோயிசம், குருச்சேவிசம் போன்ற பல்வேறு வேறுபாடுகளுக்குத் தீனி போட்டு உள்மோதல்களை ஊக்குவித்து வருகிறது. பல எழுத்தாளர்களுக்குப் புதுப்புது இசங்களை அறிமுகம் செய்வதற்காக சி.ஐ.ஏ. நிதி உதவி நல்கி வருகிறது.

மார்க்சிச சமூக விஞ்ஞானத்தை மாத்திரம் அல்ல மதங்களின் உட்பிரிவுகளைக் கூட அது தனது ஏகாதிபத்தியத் தேவைக்காகப் பயன்படுத்தி வருகிறது. பாகிஸ்தானைத் தளமாக கொண்டு புதுப்புது இஸ்லாமிய தத்துவங்களைக் கொண்ட பல்வேறு இஸ்லாமிய தீவிரவாத குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. மத்திய கிழக்கில் இஸ்லாம் மதத்தின் உட்பிரிவுகளுக்கிடையே பெரும் முரண்பாட்டை வளர்த்து ஒன்றோடொன்று மோதிவிடும் காரியத்தை வெற்றிகரமாக செய்து வருகிறது. ஒரு காலத்தில் துருக்கியை மையமாகக் கொண்டு உருவாகியிருந்த உலகளாவிய இஸ்லாமிய தத்துவம் சோசலிச முகாமுக்கு ஆதரவானதாக செயல்பட்டது. ஆனால் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இஸ்லாமிய தத்துவத்தை கம்யூனிசத்திற்கு எதிரான வலுவான தத்துவமாக மாற்றுவதில் சி.ஐ.ஏ. வெற்றி பெற்றிருக்கிறது. இன்று உலக பயங்கரவாதியாக சித்திரிக்கப்படும் பின் லாடனும் தலிபான் இயக்கமும் அமெரிக்காவின் உற்பத்திகள். சோவியத் சார்பு நஜிபுல்லா அரசாங்கத்திற்கு எதிராக ஆப்கானிஸ்தானில் இஸ்லாமின் பெயரால் உருவாக்கப்பட்ட நச்சுக் குழந்தைதான் தலிபானாகும்.

அமெரிக்கா தனது நோக்கத்திற்காக போராட்டக் குணம்மிக்க இஸ்லாமிய மதத்தை மாத்திரம் அல்ல சாத்வீகத்தைப் போதிக்கும் இந்து மதத்தைக் கூட பயன்படுத்தி வருகிறது. இன்று இந்தியாவில் இந்துத் தீவிரவாதம் வன்முறை வடிவை எடுத்து வருகிறது. இதற்குப் பின்னால் ஆர்.எஸ்.எஸ் (R.S.S) சிவசேனா போன்ற அமைப்புகள் இருந்து வருகின்றன. இவற்றினூடாக சி.ஐ.ஏ. இயங்கி வருவது உலகறிந்த விடயமாகும். இந்தியாவின் ஐக்கியத்திற்கு அச்சுறுத்தல் வெளியிலிருந்து வரவில்லை. இந்து தீவிரவாதத்திலிருந்து தான் வருகிறது. இதனைப் புரிந்து கொண்டு தான் அமெரிக்கா அதற்குத் தூபமிட்டு வளர்த்து வருகிறது.

இப்போது நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் காலப் பகுதியில் தான் அரசுசாரா நிறுவனங்கள் என்ற கருத்தோட்டம் மிகவும் பிரபல்யம் பெற்றது. குறிப்பாக மனித உரிமைகளுக்கான அரசுசாரா நிறுவனங்கள் இக்காலகட்டத்திற்கு முன்னர் இருந்ததில்லை. இம்மனித உரிமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புகளின் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் தனது நோக்கத்தின் பெரும்பகுதியை நிறைவேற்றி வருகிறது. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மிகச் சிறந்த மூளைவளங்களையும் புரட்சிகர உணர்வுள்ள செயல் வீரர்களையும் ஏதோ ஒரு விதத்தில் இணைத்து அவர்களைப் புரட்சியின் பாதையிலிருந்து திசை திருப்பி விடும் வேலையை இவ் அரசுசாரா நிறுவனங்களுக்கு நிதி வழங்கும் நிறுவனங்கள் மிகக் கெட்டித்தனமாக செய்கின்றன. இந்நிதி நிறுவனங்களுக்கான பண உதவியின் பெரும் பகுதி அமெரிக்காவிலிருந்து தான் வருகிறது.

மனித உரிமை அமைப்புகள் அனைத்தும் பிழையானவை எனக் கூற முடியாவிட்டாலும் அவை பெரும்பாலும் இலக்கற்றவையாக, பொதுவான புரட்சிகரப் போராட்ட இயக்கத்திலிருந்து அந்நியப்பட்டவையாக இருப்பதை அவதானிக்க முடியும். மனித உரிமைப் போராட்டம் என்பது ஒரு திட்டவட்டமான இலட்சியத்தைக் குறிக்கும் ஒன்றாக அன்றி ஒரு தெளிவற்ற (Abstract) பயணமாகவே அமைகிறது. இதற்கு அண்மையில் ஈராக் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தம் ஒரு நல்ல உதாரணமாகும். ஜார்ஜ் புஷ்சும், டோனி பிளேயரும் மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்ற பெயரில்தான் இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தை மேற்கொண்டார்கள். அதே சமயம் இவ் யுத்தத்திற்கு எதிராக உலகெங்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நடத்தப்பட்டன. இவ் ஊர்வலங்களும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது. சில நாடுகளில் சில மனிதஉரிமை அமைப்புகள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான பணிகளில் முற்போக்கான பாத்திரங்களை ஆற்றியுள்ளன என்பதையும் அப்பணியில் தன்னலமற்ற பலர் தம்முயிரையும் இழந்துள்ளனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. அவர்களது தியாகங்களும் சேவைகளும் மதிக்கப் படவேண்டியவை. ஆனால் அடிப்படைப் பிரச்சினை என்னவென்றால் இவர்களின் பணிகளும் தன்னலமற்ற கடும் உழைப்பும் சுரண்டல் அமைப்பைச் சிற்சில சீர்திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டு அதனை நிலைநிறுத்துவதற்கே பயன்படுகிறது.

நாம் ஆய்வுக்குட்படுத்தும் இக்காலப் பகுதியில் மனித உரிமைகளுக்கான இயக்கங்களை ஒட்டுமொத்தத்தில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் தமது நோக்கத்தை அடைவதற்காக பயன்படுத்துவதில் - குறிப்பாக, கம்யூனிசத்திற்கு எதிராகவும் சோசலிச முகாம்களுக்கு எதிராகவும் பயன்படுத்துவதில் - ஏகாதிபத்திய சக்திகள் வெற்றி பெற்றிருக்கின்றன.





1960களில் ஆபிரிக்க நாடுகளின் எழுச்சிக்குப் பின்னர் குறிப்பாக 1975ல் வியட்நாம் யுத்தத்தில் கிடைத்த அவமானகரமான தோல்விக்குப் பின்னர் அமெரிக்கா தனது மறைமுக வேலைகளை முடுக்கி விட்டது. இதன் பின்னரே அரசுசாரா நிறுவனங்கள் பெரும்பாலான நாடுகளில் புதிதாக உருவாக்கப்பட்டன. இவை உருவாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் மக்கள் நலனைப் பாதுகாப்பதல்ல ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாப்பதாகும்.

இக்காலப்பகுதிக்கே உரிய மற்றொரு பிரத்தியேக அம்சம் யாதெனில் உலகெங்கும் இளைஞர்களும் கீழ்த்தட்டு சிறுமுதலாளித்துவ வர்க்கமும் செயலூக்கம் மிக்க பெரும் அரசியல் சக்தியாக முன்னொருபோதும் இல்லாத அளவில் எண்ணிக்கைப் பலத்திலும் சமூக பலத்திலும் முன்னணிக்கு வந்தன. தொழிலாளவர்க்கம் குணாம்சமாற்றத்திற்கு உள்ளானது. அநேகமான விடுதலை இயக்கங்களும் புரட்சிகர இயக்கங்களும் சிறுமுதலாளித்துவ அணியினரால் தலைமை தாங்கப்பட்டன. இவ்வணியின் முத்திரை இப்போராட்டங்களில் ஆழமாகப் பதிந்தது. அரசுசாரா நிறுவனங்கள் அச்சக்திகளை உள்வாங்கி அவற்றை மழுங்கடிக்கும் பணியைத்தான் பெரும்பாலான நாடுகளில் செய்தன.

எண்பதுகளில் உலக மயமாக்கல் என்ற பெயரில் ஏகாதிபத்தியம் புதியதோர் வடிவத்தை எடுத்தது.

## உலக மயமாக்கல் - உலக ஏகாதிபத்தியமாக்கல்:

ஏகாதிபத்தியங்கள் தமது நோக்கங்களை மக்கள் எதிர்ப்பின்றி லாவகமாக நிறைவேற்றிக் கொள்வதற்காக மனோதத்துவத்தையும் பயன்படுத்துகின்றன. எனவே அவை பயன்படுத்தும் சொற்றொடர்களையும் மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கின்றன. முன்னர் தனியார் மயமாக்கல் (Privatisation) என்ற சொல் பயன்படுத்தப்பட்ட இடத்தில் இப்பொழுது மக்கள்மயமாக்கல் (Peoplisation) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இச்சொற்றொடரைப் பயன்படுத்தும்போது மக்களால் அதன் உள்நோக்கத்தை உடனடியாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. எனவே மக்களிடமிருந்து உடனடியாக எதிர்ப்புகள் கிளம்புவதை அதனால் தவிர்க்க முடிகிறது. இதேவிதத்தில்தான் உலகமயமாக்கல் (Globalisation) என்ற சொற்பதமும் மக்களினை மயக்கத்திற்கு உட்படுத்துகிறது. தற்போது ஏகாதிபத்தியம் அதன் உச்சகட்டத்தை அடைந்திருக்கிறது. லெனின் ஏகாதிபத்தியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவத்தின் உச்சகட்டம் எனச் சரியாக அடையாளப்படுத்தினார். உலகமயமாக்கல் என்பது ஏகாதிபத்தியத்தின் உச்சகட்டமாகும். ஆகவே உலகமயமாக்கல் என்ற மயக்கம் தரும் சொல்லுக்குப் பதிலாக இக்கட்டுரையில் உலக ஏகாதிபத்தியமாக்கல் என்ற சொற்பதத்தை நான் பயன்படுத்துகிறேன்.

மேற்கத்திய நாடுகளில் உழைப்புக்கான விலை பெருமளவில் அதிகரிக்கத் தொடங்கியதையடுத்து மலிவான விலைக்கு உழைப்பை வாங்கக்கூடிய மூன்றாம் உலக நாடுகளில் தமது தொழிற்சாலைகளையும் தமது செயலகங்களையும் அவை நிறுவத் தொடங்கின. இதன் மூலம் அந்தந்த நாட்டின் மூலவளங்களை இன்னொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்யாமல் நேரடியாகவே பயன்படுத்த முடிந்தது. இதனால் உற்பத்திக்கான செலவு மேலும் குறைந்தது. இவ்வாறு அமைக்கப்படும் தொழிற்சாலைகளில் உற்பத்தி முழுவதும் ஒரே இடத்தில் மேற்கொள்ளப்படுவதில்லை. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு தொழிற்சாலைகளில் வெவ்வேறு உதிரிப்பாகங்கள் தயாரிக்கப்படுகின்றன. அவை மற்றொரு நாட்டில் பொருத்தப்படுகின்றன. அவற்றின் விற்பனையை இன்னொரு நாட்டிலிருக்கும் செயலகம் கட்டுப்படுத்துகிறது. இதன் மூலம் தேசியவாதம் உருவாகி தொழிற்சாலைகள் தேசியமயமாக்கப்படும் போது ஏற்படக்கூடிய இழப்புகளை முன்னெச்சரிக்கையாக குறைத்துக் கொள்வதற்கு வழி காணப்பட்டிருக்கிறது.

எல்லா இடங்களிலும் இவ்வாறு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு தொழில்நுட்பங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. மாறாக ஏகாதிபத்திய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள வளங்களையும் தொழிற் சாலைகளையும் தொழில் துறைகளையும் வங்கிகள் மருத்துவமனைகள் பாடசாலைகள் போன்ற சேவை நிறுவனங்களையும் மக்கள் மயமாதல் என்ற பெயரில் தனியார் மயமாக்கி ஊழல்மிக்க அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் துணையோடு மிக மலிவான விலைக்கு குத்தகைக்கு வாங்கி கொள்ளை லாபம் ஈட்டுகின்றன. சில நாடுகளில் தாம் மற்றொரு நாட்டில் மலிவாக உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக உள்நாட்டில் அப்பொருள் உற்பத்தியாவதை நேரடியாகவோ மறைமுகமாகவோ தடுக்கின்றன. இதற்குத் துணையாக அறிவு சொத்துரிமை, (Intellectual Property Rights) தனி உரிமை (Patent Right) என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன. மறுபுறத்தில் நாடுகளுக்கு ஏகாதிபத்தியங்கள் உலக வங்கி போன்ற தமது நிதி நிறுவனங்கள் மூலம் கடனுதவி நல்குகின்றன. கடன் பெறும் நாடுகளை மேலும் மேலும் கடன் சுழலில் சிக்க வைத்து மீள





முடியாத கடன்கார நாடுகளாக ஆக்கி கடன் உதவிக்கான வட்டியாக பெரும் அளவில் லாபம் ஈட்டுகின்றன. முன்னர் துப்பாக்கி செய்த காரியத்தை இப்போது உலக வங்கி வழங்கும் கடன் செய்து வருகிறது. நாட்டுக்குப் பொருந்தாத ஆனால் நாட்டுக்கு நன்மை பயப்பதைப் போன்ற வெளித் தோற்றத்தைக் கொண்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அது முன் மொழிகிறது. அவற்றை நிர்மாணிக்கும் பொறுப்பு எந்தெந்த பல்தேசிய நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் அதுவே தீர்மானிக்கிறது. இவ்வாறு ஒரு கையால் வழங்கப்படும் கடனுதவியை மறுகையால் ஏகாதிபத்திய நாடுகள் பெற்றுக் கொள்கின்றன. உதவி பெறும் நாடுகள் மீளாக் கடனில் மூழ்கின்றன. உள்நாட்டில் உள்ள அரசின் சேவைகளையும் அரசுடமை நிறுவனங்களையும் மக்கள் மயம் என்ற பெயரில் அவை தமது கைகளில் எடுத்துக் கொள்கின்றன. இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக உயர்மட்ட சுதேச அதிகாரிகள் பல்தேசிய நிறுவனங்களால் விலை கொடுத்து வாங்கப்படுகின்றனர். லாபத்தில் இயங்கிய பல நிறுவனங்கள் திடீரென நட்டத்தில் இயங்குகின்றன. மக்கள்மயமாக்கல் ஒன்றே இதற்கான தீர்வு என தொலைத்தொடர்பு ஊடகங்கள் முழங்குகின்றன. இவ் அதிகாரிகளே அரசாங்கத்திற்குப் பரிந்துரை அறிக்கைகள் சமர்ப்பிக்கிறார்கள். அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் இவ்வதிகாரிகளின் கைகளிலேயே உள்ளது. ஆச்சரியப்படத்தக்க குறைவான விலை கொடுத்து அவை வாங்கப்படுகின்றன.

உலக ஏகாதிபத்தியமாக்கலின் ஒரு அம்சம் யாதெனில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பூர்ஷ்வா வர்க்கத்தின் மேல் தட்டு வர்க்கத்தையும், உயர்மட்ட அதிகாரிகள் அணி ஒன்றையும், அரசியல்வாதிகளையும், பல்தேசிய நிறுவனங்களூடாக தம்முடன் இணைத்துக் கொள்கின்றன. அந்நாட்டின் ஊடகங்களையும் சர்வதேச பிரச்சார சாதனங்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டு தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்கின்றன.

உலக ஏகாதிபத்தியமாக்கலின் மற்றொரு அம்சம் யாதெனில் உள்நாட்டில் அரசுகள் வகிக்கும் பாத்திரம் மிகவும் மட்டுப்படுத்தப்படுவதாகும். "எங்கு அரசில்லையோ அங்குதான் சிறந்த அரசு இருக்கிறது" என்பது அதன் சித்தாந்தமாகும். (No Government is good Government) தொழிலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களை நசுக்கித் தமது மூலதனத்திற்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்தித் தருவதைத் தவிர ஏனைய அனைத்துத் துறைகளையும் வளங்களையும் ஏகாதிபத்தியங்களின் கையில் ஒப்படைக்க வேண்டும் என்பதே இதன் தாற்பரியமாகும்.

இதன் விளைவு யாதெனில் மூன்றாம் உலக நாடுகள் யாவும் வளர்ச்சியடைந்த ஏகாதிபத்தியங்களின் கிராமப்புறங்களாக மாறுகின்றன. அவை கத்தரியின் இருமுனைகளால் வெட்டப்படும் நாடாக்களைப் போல ஆக்கப்படுகின்றன. ஒருபுறத்தில் கடனுதவி என்ற பெயரால் சுரண்டப்படும் அதே சமயம் மறபுறத்தில் அதன் உழைப்பின் விலை செயற்கையான முறையில் கட்டுப்படுத்தப்பட்டு மலிவான விலைக்கு வாங்கப்படுவதுடன் அந்நாட்டு வளங்களும் மிக மலிவான விலைக்கு கொள்ளை அடிக்கப்படுகின்றன. இன்னொருபுறத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் நுகர்ச்சிப் பொருட்கள் பொதுச் சந்தையில் தாராளமாக இறைக்கப்படுகின்றன. இவற்றுள் சில நவீன தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. ஆனால் இவற்றில் பல செயற்கையான முறையிலே நுகர்ச்சிச் சந்தை ஒன்றை உருவாக்கிக் கொள்ளை லாபம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டவை.

அத்துடன் மூன்றாம் உலக நாடுகளில் அமைக்கப்படும் பெரும்பாலான தொழிற்சாலைகள் சுற்றாடலை மாசுபடுத்துபவையாக இருக்கின்றன. ஆபத்தான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் மூன்றாம் உலக நாடுகளுக்கே இடமாற்றம் செய்யப்படுகின்றன.

விரிவடைந்துவிட்ட உலக சந்தையைக் கட்டிகாப்பதற்கு ஏகாதிபத்திய நாடுகள் இராணுவச் செலவுக்குப் பெருமளவு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. மூன்றாவது உலக நாடு எதுவும் சுயமாக இராணுவ ரீதியில் பலம்பெற்று வருவதை அதனால் சகித்துக் கொள்ள இயலாது. அதனை எதிர்கால அச்சுறுத்தலாகவே அது நோக்கும். இதனால் தான் அணுவாயுத தயாரிப்பில் ஈடுபடக் கூடாதென சில நாடுகளை எச்சரிக்கை செய்கின்றன. அதேசமயம் தன்வசமுள்ள அணு ஆயுதங்களை அழிப்பதற்கு அவை தயாராக இல்லை. மாறாக, நட்சத்திர யுத்தத்திற்காக (Star War) கோடிக்கணக்கில் பணத்தை அமெரிக்கா செலவிடுகிறது.





எமது பரிசீலனையில் இருக்கும் இக்காலகட்டத்தின் முற்பகுதி 1949 முதல் 1975 வரை விடுதலை இயக்கங்களினதும் சோசலிச முகாம்களினதும் உன்னதமான காலகட்டம் எனக் கூறமுடியும். ஆனால் அதன் பின்னர் தனது அழிவிலிருந்து தன்னைச் சுதாரித்துக் கொண்ட ஏகாதிபத்தியம் புது வடிவத்தில் புதிய ஒழுங்குமுறையின் கீழ் நவீன தொழில் நுட்பங்களின் துணையோடு தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. ஸ்டாலினின் மறைவிற்குப் பின்னர் சோவியத் யூனியனில் அதிகாரத்திற்கு வந்த குருசேவ் காலத்திலிருந்து சோவியத் யூனியனின் சரிவு தொடங்கி விட்டது. இதற்கு ஸ்டாலின் விட்ட தவறுகளும் ஒரு காரணமாக அமைந்து விட்டன. அதற்கு மேலாக சில வரலாற்று நிலைமைகளும் சோவியத் யூனியனின் தலைமைகள் விட்ட தவறுகளின் விளைவுகளைப் பாரதூரமாக்கி விட்டன. ஒக்டோபர் புரட்சி வெற்றிபெற்ற 1917ல் இருந்தே சோவியத் யூனியன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தொடர்ச்சியாகப் போராட வேண்டியிருந்தது. சோவியத் யூனியனை அதன் தொட்டிலிலே கழுத்தை நெரித்துக் கொன்றுவிட பதினான்கு ஏகாதிபத்திய நாடுகள் ஒரே சமயத்தில் படையெடுத்தன. அவற்றிற்கெதிராகப் போராடி இளம் சோவியத் யூனியன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அதே சமயம் உள்நாட்டுக் கலகங்களையும் சமாளிக்க வேண்டியிருந்தது. மீண்டும் 1930களின் கடைசிப் பகுதியில் உலகம் அதுவரை கண்டிராத இராட்சதப் பலத்தோடு பாசிசம் சோவியத் யூனியன் மீது படையெடுத்த போது மீண்டும் ஒரு ஜீவமரணப் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. உலகின் மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்டிருந்த இந்நாட்டைப் பாதுகாப்பது என்பது சாதாரணமான காரியமல்ல. எனவே கனரக தொழிற்சாலைகளை அமைப்பதில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. பிரமாண்டமான நீண்ட ரயில்பாதை, பிரமாண்டமான நீண்ட போக்குவரத்துப்பாதை, இவற்றை அமைப்பதற்கான இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான பிரமாண்டமான தொழிற்சாலைகள், பாரிய யுத்த தளபாடங்களைத் தயாரிப்பதற்கான பிரமாண்டமான தொழில்பட்டறைகள் என அனைத்தும் அங்கு பிரமாண்டங்களாக உருவாக்கப்பட்டன. சராசரி மனிதனின் அன்றாட நுகர்ச்சிக்கும் அபிலாசைக்கும் தேவையான மென்ரக உற்பத்தித் தொழிற்சாலைகள் அங்கு புறக்கணிக்கப்பட்டன. மறுபுறத்தில் யுத்தத்தின் பளு பெரும்பாலும் விவசாயிகளின் மீதே திணிக்கப்பட்டது. பொருளாதார நிர்மாணத்தில் பாரிய தவறுகள் இழைக்கப்பட்டன. இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்த பின்னர் கூட இத்தவறுகள் நிவர்த்தி செய்யப்படவில்லை. இரஷ்யாவின் பொருளாதார சுமை சோவியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனியனின் இணைந்திருந்த ஏனைய தேசங்கள் மீதும் தேசியங்கள் மீதும் சுமத்தப்பட்டன. எனவே அங்கு உருவாகியிருந்த புதியரக அதிகார வர்க்கத்தின் மீது ஒரு வகை வெறுப்பு ஏனைய தேசியங்கள் மத்தியில் வளரத் தொடங்கியது. இத்தவறுகளை எல்லாம் அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் தமக்குச் சாதகமாக அறுவடை செய்து கொண்டன. 1989ல் ஆரம்பித்த சோவியத் யூனியனின் வீழ்ச்சி 1991ல் முற்றுப் பெற்றது. உலக ஏகாதிபத்தியமாக்கல் தற்காலிகமாகப் பெற்ற இந்த வெற்றியை நிரந்தரமாக்கிக் கொள்ள முயல்கிறது.

## 2.5. 1991க்குப் பின்னர். (பின் சோவியத் யூனியன் காலகட்டம்):

பிரஸ்நேவ்வின் மறைவிற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சோவியத் யூனியனின் தலைவர் கோர்பசேவ் காலத்தில், சோவியத் யூனியனின் வீழ்ச்சி துரிதம் அடைந்தது. கோர்பசேவை புகழ்ந்து கைகுலுக்கியபடி அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் சோவியத் யூனியனின் வீழ்ச்சியை துரிதப்படுத்தின. பதினைந்து நாடுகள் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து சென்றன. இது உலக ஏகாதிபத்தியங்களுக்கு கிடைத்த வெற்றியாகவும் சோசலிசத்திற்கு கிடைத்த தோல்வியாகவும் இன்றைய ஏகாதிபத்திய வாதிகளால் சித்திரிக்கப்படுகிறது. ஆனால் உண்மையில் சோவியத்தின் வீழ்ச்சி என்பது ரஷ்யாவின் பொருளாதாரக் கொள்கைக்கும் தேசிய பிரச்சினையைக் கையாள்வதில் லெனினின் மறைவுக்குப் பின்னர் அது கடைபிடித்த கொள்கைக்கும் கிடைத்த தோல்வியேயாகும்.

பிரான்ஸில் வர்க்கப் போராட்டம் என்ற நூலில் ஏங்கெல்ஸ் ஒரு முக்கியமான தத்துவத்தை முன் வைக்கிறார். "வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கம் நல்லது எதையும் பிற தேசியங்கள் மீது திணித்துவிட முடியாது" என்பதே அதுவாகும். ஒவ்வொரு மக்களும் சுயமாகப் போராடியே தமது விடுதலையைப் பெறமுடியும். தமது சொந்த இரத்தத்தால் தான் தமது நாட்டில் புரட்சியைக் கொண்டுவர முடியும். சோசலிசத்தைக் கூட எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டின் மீது திணிக்க முடியாது. அதாவது ஒரு தேசியத்தின் அல்லது தேசத்தின் சுய நிர்ணய உரிமையை மீறி எதையும் திணித்தால் அது நீடிக்காது. இதைத் தான் சோவியத் யூனியனின் சிதைவு உணர்த்துகிறது. மறுபுறத்தில் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து சென்ற நாட்டின் மக்கள் இன்று மூலதனத்துவ ஜனநாயகம், சுதந்திரம் என்பவற்றின் சுயரூபத்தை





நேரடியாக காண்கிறார்கள். அவர்கள் "அன்று எமக்கு சுதந்திரம் இல்லை என்று சொன்னார்கள். இன்று எமக்கு சோறே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது" என கூறத் தொடங்கியிருக்கிறார்கள்.

சோசலிச ஜனநாயகம் என்பது மக்கள் ஜனநாயகமாகும். இது மூலதனத்துவவாதிகளை தூக்கி எறிந்து விட்டு அந்த இடத்தில் புதிய அதிகாரிகள் வர்க்கம் ஒன்றை அமர்த்துவதைக் குறிப்பதல்ல. அது அரசியல் அதிகாரமும் விவகாரங்களைத் தீர்மானிக்கும் அதிகாரமும் பரந்துபட்ட மக்களின் கைகளுக்குச் செல்வதையே குறிக்கிறது. ஒக்டோபர் புரட்சியின் போது ஜனித்த சோவியத் முறையைப் பற்றி கூறும் போது லெனின் குறிப்பிட்டதும் இதைத் தான். மேலிலிருந்து அதிகாரம் செலுத்துவதற்குப் பதிலாக கீழிலிருந்து அதிகாரம் பிறப்பது தான் உண்மையான சோவியத் முறை என அவர் கூறினார். இதுதான் மக்கள் ஜனநாயமாகும். இந்த விழுமியம் செயல் வடிவம் பெற்று சோசலிசக் கட்டுமானத்தில் முன்னைய சோசலிச நாடுகள் தாம் விட்ட தவறுகளை திருத்திக் கொண்டு முனனேறுமானால் இப்போது நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் உலக ஏகாதிபத்தியம் வீழ்ச்சியுறும் வேகமும் சோசலிசமுகாம் வீறுநடை போட்டு முன்னேறும் நிலைமையும் உருவாவதற்கு நீண்ட காலம் பிடிக்காது.

நாம் வாழும் இன்றைய காலகட்டம் ஏனைய முன்னைய காலகட்டங்களைவிட வித்தியாசமானது. ஏனெனில்,

முதலாவதாக, இன்றைய உலகம் முன்னரைப் போல இரு முகாம்களாகப் பிரிந்திருக்கவில்லை. பெரும்பாலும் சீனா, வடகொரியா, கியூபா, ரஷ்யா தவிர்ந்த ஏனைய சகல நாடுகளும் உலக ஏகாதிபத்திய மயமாக்கலின்கீழ் உலக சந்தையாக மாறியிருக்கின்றன. இன்று அமெரிக்காவைத் தட்டிக் கேட்கக் கூடிய பலம் எந்த ஒரு நாட்டிற்கும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இரண்டாவதாக, முன்னர் விடுதலை இயக்கங்களின் தார்மீக சித்தாந்த தலைமையை சோசலிச முகாம் கொண்டிருந்தது. இன்று அந்த தார்மீக பலத்தை சோசலிச முகாம் இழந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாக, ஒரு தேசியத்தின் சுய நிர்ணய உரிமை என்பது மனித உரிமை என்ற பெயரால் வல்லரசுகள் மீறுவதை ஏனைய நாடுகள் தடுத்து நிறுத்த முடியாத நிலைமை உள்ளது.

நான்காவதாக, 2001 செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் எந்த நாட்டின் மீதும் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் போர் தொடுக்கும் உரிமையை அமெரிக்கா தானே தனது கையில் எடுத்துக் கொண்டுள்ளது. அதுமாத்திரமல்ல நேரடியாகவே துப்பாக்கி முனையில் உலக ஏகாதிபத்தியமயமாக்கலை அமுல்படுத்தவும் அதில் கிடைக்கும் கொள்ளை லாபத்தைத் தானே தனியாக ஏப்பமிடவும் முனைந்துள்ளது. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நிர்வாகத்தின் கீழ் ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு பிறகு இப்போக்கு உருவாக்கியுள்ளது.

மறுபுறத்தில் உலக ஏகாதிபத்திய முகாம் ஒன்றுபட்டிருப்பதைப் போலவும் வலிமையுடன் திகழ்வதைப் போலவும் வெளிப்பார்வைக்குத் தோற்றமளித்தாலும் அவை தமக்குள் முரண்பாடுகளைக் கொண்டுள்ளன. இம்முரண்பாடு இப்போது மேலும் வலுவடைந்து வருகிறது. மூலதன ஏற்றுமதியில் முதன்மை வகிக்கும் அமெரிக்காவும் பிரிட்டனும் தம்மை முதலாந்தர ஏகாதிபத்தியமாகக் கருதிக் கொண்டு உலக ஏகாதிபத்திய மூலதனக் கொள்ளையில் பெரும் பகுதியை தமது பைக்குள் போட்டுக் கொள்கின்றன. இது பிரான்ஸ், ஜேர்மனி போன்ற ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. எனவே அவை தமக்கிடையே ஒரு பொதுச் சந்தையையும், பொது ஐக்கியத்தையும் ஏற்படுத்திக் கொள்ள முனைகின்றன. இதன் விளைவே யூரோ நாணயத்தின் அறிமுகமாகும். இதனை அமெரிக்கா விரும்பவில்லை. எனவே பிரித்தானியாவைத் தனது பிடியில் வைத்துக் கொண்டு தனது உலக மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள அது முயல்கிறது. மறுபுறத்தில் ஜேர்மனியைச் சுற்றியுள்ள டென்மார்க், ஒல்லாந்து போன்ற சிறிய நாடுகள் கடந்த இரு உலக மகா யுத்தத்தின் போது ஜேர்மனி தம் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பை இன்னும் மறந்து விடவில்லை. எனவே பொருளாதார ரீதியில் பிரான்சுடனும் ஜேர்மனியுடனும் ஒத்துழைத்துக் கொண்டு அதேவேளையில் தம்பாதுகாப்புக்காக அமெரிக்காவின் தயவை நாடி நிற்கின்றன. மற்றொரு பகுதியில் கைத்தொழிலில் அபிவிருத்தி பெற்றுப் பொருளாதார வல்லரசாக உலகிற்கு வந்துள்ள ஜப்பான் இவ்விரு அணிகளுடனும் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது. ஈராக் மீதான ஆக்கிரமிப்புக்குப் பின்னர், மத்திய கிழக்கின்





எண்ணெய் வளத்தை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தனக்குக் கிடைக்கும் இலாபத்தை அதிகரித்துக் கொள்ளவும் மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் அமெரிக்கா தன்னிச்சையாக எடுக்கும் முயற்சிகள் உலக ஏகாதிபத்திய முகாமுக்குள் மேலும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் பொருளாதார பலத்திலும் இராணுவ பலத்திலும் ஏனைய ஏகாதிபத்திய நாடுகள் அனைத்தையும் மிஞ்சியுள்ள அமெரிக்கா இறுமாப்புடன் தனது சொந்த லாபம் பற்றியும் சொந்த நலன் பற்றியும் மாத்திரமே அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது.

சோவியத் முகாம் வீழ்ச்சியுற்ற பின்னர் அமெரிக்காவின் இறுமாப்பு இறுக்கம் பெற்றுள்ளது. யூகோஸ்லோவியாவை துண்டாடுவதில் வெற்றி கண்ட அது செப்டம்பர் 11க்குப் பின்னர் ஏற்படுத்திய நிலைமையைப் பயன்படுத்தி ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. இன்று ஈராக்கை ஆக்கிரமித்துள்ளது. இப்போது ஈரானை மிரட்டுகிறது. இவ்வாறு இஸ்லாமிய நாடுகள் அதன் இலக்காக மாறிவருவதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன. முதலாவதாக, கம்யூனிசத்திற்கு எதிராக அது வளர்த்துவிட்ட இஸ்லாமிய தீவிரவாதம் வளர்த்த கடா மார்பில் பாய்வது போல அமெரிக்காவைத் தாக்கத் தொடங்கியுள்ளது. இரண்டாவதாக, இந்நாடுகளில் தான் எண்ணெய் வளம் அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே எண்ணெய் வளத்தைக் கட்டுப்படுத்தி உலகின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்கா முனைகிறது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு தனக்கு பிரதான அச்சுறுத்தலாக மாறியுள்ள இஸ்லாமிய தீவிரவாதத்தை ஆயுத முனையில் நசுக்கி அந்நாடுகளின் எண்ணெய் வளத்தை சூறையாட முடியும் என்ற நம்பிக்கை இப்போது அமெரிக்காவுக்கு அதிகரித்துள்ளது. ஆகவே தான் ஈரானையும் தைரியமாக மிரட்டுகிறது.

உண்மையில் மேலோட்டமாகப் பார்க்கும் போது அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் முழு உலகமும் இருப்பதைப் போலத்தோன்றினாலும் இன்று மிகக்கூடுதலான நாடுகளினதும் மக்களினதும் பகையை சம்பாதித்துக் கொண்டிருக்கும் நாடு அமெரிக்கா தான். உலகில் மிகக் கூடுதலான தொகையைப் பாதுகாப்புச் செலவினங்களுக்காகச் செலவிடும் நாடும் அமெரிக்காதான். தனது நாட்டுக்கு வெளியே தனது படைகளை நிறுத்தி அவ்வவ்நாட்டு மக்களின் எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டு அதற்காக ஏராளமான பணத்தைச் செலவிடும் நாடும் அமெரிக்கா தான். நாளை ஒரு உலகப்போர் வெடிக்குமானால் பல முனைகளில் தாக்குதலை எதிர்நோக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும் ஒரே நாடும் அமெரிக்கா தான். ஏகாதிபத்தியங்கள் உள்ளவரை யுத்தத்திற்கான ஆபத்து இருந்து கொண்டு தான் இருக்கும். ஆகவே மாவோவின் மொழியிலே கூறுவதானால் அமெரிக்கா ஒரு கடதாசிப் புலியே தவிர நிஜப்புலியல்ல. இதுவரை எந்த ஒரு இராணுவ வல்லரசோடும் நேரடியாக மோதிய வரலாறு அமெரிக்காவுக்குக் கிடையாது. அதன் அண்டை நாடான கியூபாவைக் கூட அதனால் எதுவும் செய்ய முடியவில்லை. வட கொரியாவிலும் வியட்நாமிலும் அது வாங்கிய உதையை இன்னும் மறந்துவிடவில்லை. இராணுவ ரீதியில் பலவீனமான நாடுகளை மிரட்டிக் கொண்டு உலகச் சண்டியனாகத் தன்னைக் காட்டிக்கொண்டிருக்கும் அதன் வேஷம் கலைவதற்கு நீண்டகாலம் பிடிக்காது என்பதனை நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் உலக ஏகாதிபத்தியமயமாக்கல் கட்டியம் கூறுகிறது. அதாவது எப்படி என்ன காரணங்களினால் அன்று அடிமைச் சமுதாயம் வீழ்ச்சியுற்றதோ அதேபோன்ற காரணங்களால் இன்று உலக ஏகாதிபத்தியம் வீழ்ச்சியை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. அன்று அடிமை உடமையாளர்களின் சோம்பலும் ஆடம்பர விரயமும் அடிமைகளின் சோர்வும் உற்சாகமற்ற உழைப்பும் கிளர்ச்சிகளும் அடிமை சமுதாயம் சிதைவதற்கு காரணமாயமைந்தன. இன்று வசதிபடைத்தவர்களின் ஆடம்பர விரயமும் வசதிபடைத்தவர்களுக்கும் வசதிகுறைந்தவர்களுக்கும் இடையிலான இடைவெளி ஆழமாக விரிவடைந்து செல்கின்றன. மேற்கத்தைய நாடுகளில் ஒருபுறத்தில் உழைப்பின் வேதனம் அதிகரித்து, உற்பத்திப்_பொருட்களின் விலை சந்தையில் போட்டியிட முடியாத அளவுக்கு உயர்ந்து செல்கின்ற அதேவேளையில் மறுபுறத்தில் இங்கெல்லாம் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, புதிய பல தேவைகள் அதிகரித்து, விலைவாசி, வாடகை, வரி என்பன விண்முட்டும் அளவுக்கு உயர்ந்து, சராசரி மனிதர்களின் வாழ்க்கை நெருக்கடிக்குள்ளாகி வருகின்றன. அனைத்திற்கும் மேலாக மேற்கத்தைய நாடுகள் உலக மாநகரங்களாகவும் மூன்றாம் உலக நாடுகள் அவற்றால் அதீத சுரண்டலுக்குள்ளாகும் உலக கிராமங்களாக மாறியுள்ளன. இங்கெல்லாம் வாழுகின்ற உழைக்கும் மக்களின் வாழ்க்கை சகிக்க முடியாததாகிக் கிளர்ச்சியை நோக்கிய போக்குகள் நகர்வதும், மேற்கத்தைய நாடுகளின் யுத்த செலவினங்கள் பெருமளவில் அதிகரித்து வருவதும் உலக ஏகாதிபத்தியமயமாக்கலின் நெருக்கடியை ஆழப்படுத்தியுள்ளன.

மூலதனத்துவம் தன்னை அழிவிலிருந்து தற்காலிகமாகக் காப்பாற்றிக் கொள்வதில் வெற்றி பெறலாம் ஆனால் நிரந்தரமாக அது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இயலாது. சோஷலிச முகாம் தற்காலிக பின்னடைவுகளைச் சந்திக்கலாம். ஆனால் அதன் எதிர்காலம் நிச்சயமானது.

உலக ஏகாதிபத்தியமயமாக்கலின் கல்லறையை இனி வீறுகொண்டெழப் போகும் விடுதலை இயக்கங்களே தோண்டப் போகின்றன என்பதும் உலக சோஷலிசப் புரட்சியின் உத்வேகமான சக்தியாக விடுதலை இயக்கங்கள் திகழப் போகின்றன என்பதும் திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 3

## இலங்கையின் தனித்துவ நிலைமை இன்றைய உலகில் இலங்கையின் முக்கியத்துவம்

இன்றைய அமெரிக்காவின் இராணுவ வியூகத்திலிருந்து நோக்குகையில் அதன் பிரதான அச்சுறுத்தலாக இருந்த சோவியத் யூனியனிடமிருந்து ஒரு நீண்ட காலத்திற்கு அச்சுறுத்தல் எழப் போவதில்லை. ஏனெனில் இரஷ்யாவின் பொருளாதார நெருக்கடியும் உள்நாட்டுப் பிரச்சினையும் தீர்க்கப்படுவதற்கு நீண்ட அவகாசம் தேவை. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்திய உபகண்டத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தியா, சோசலிச முகாமின் நேச சக்தியாக இருந்த நிலைமை மாறி பொருளாதார ரீதியில் அமெரிக்காவின் செல்வாக்கிற்கு உட்பட்ட நாடாக இப்போது மாறியுள்ளது. பொருளாதாரத்துறைக்கு அமெரிக்காவையும் தனது பாதுகாப்பிற்குச் சோவியத் யூனியனையும் வைத்துக் கொண்டு தனது அரசியல் சமநிலையைப் பேண அது முயல்கிறது. ஆகவே அதன் சொந்த நலன்கள் அச்சுறுத்தப்பட்டாலன்றி அமெரிக்காவுக்கு எதிராக செயல்பட முடியாத நிலைமைக்கு இந்தியா தள்ளப்பட்டிருக்கிறது. உலகின் இரண்டாவது பெரிய சந்தையான இந்தியாவில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தனது மூலதன சுரண்டலுக்கான வாசல் அகலத் திறந்துவிடப்பட்டிருப்பதால் இந்தியாவின் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இப்போது எழவில்லை.

எனவே சோவியத் முகாம் வீழ்ச்சியுற்ற பின்னர் இன்று அமெரிக்காவின் நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பது சீனாவும், வட கொரியாவுமே. தைவான், தென் கொரியா ஆகிய நாடுகளில் தனது இராணுவத்தளத்தைப் பலப்படுத்தி வரும் அமெரிக்கா சீனாவையும் வடகொரியாவையும் ஏனைய வழிகளால் வீழ்த்துவதற்கு எடுத்த முயற்சிகள் எதுவும் பெரிய வெற்றியைத் தராத நிலையில் நாளை ஒரு யுத்தத்தின் மூலம் அவற்றை எதிர்க்கொள்ள வேண்டி வரலாம் என்ற நிலையிலிருந்து கொண்டு தன்னைத் தயார்படுத்தி வருகிறது. சீனா உலகுக்குள் இன்னொரு உலகு என்பதைப் போன்று பல தனித்துவங்களைக் கொண்ட நாடு. உலகின் சனத் தொகையில் கால்வாசிப்பேர் அங்கு வகிக்கிறார்கள். ஆகவே உலக சந்தையின் நாலில் ஒரு பங்கு





அதன் கையில் இருக்கிறது. அங்கு வாழும் மக்களின் 95 சதவிகிதத்துக்கு மேற்பட்டோர் ஒரே மொழியைப் பேசுகின்ற ஒரே தேசியத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது மொழியும் அவர்களது கலாசாரமும் ஐரோப்பிய மொழியில் இருந்தும் கலாசாரத்திலிருந்தும் முற்றிலும் மாறுபட்டவை. எனவே கலாசார மொழித் தொடர்பு ஊடகங்கள் ஊடாக சீனாவுக்குள் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களால் ஊடுருவ முடியவில்லை. அங்கு ஒரு நிலையான ஆட்சிமுறை இருக்கிறது. அந்த அரசியல் அமைப்புக்குள் ஊடுருவி அதிகாரத் தலைமையில் மாற்றம் கொண்டு வருவது சாத்தியமான காரியமல்ல. சீனா சகல வளங்களையும் கொண்ட நாடு. எத்தகைய யுத்தத்திற்கும் ஈடுகொடுக்கக் கூடிய கடல் வளம், எண்ணெய் வளம், போன்ற சகல வளங்களையும் அது கொண்டிருக்கிறது. இராணுவத் துறையில் அது அணு ஆயுத வல்லமை உள்ள நாடாகத் திகழ்கிறது. உலகின் தலைசிறந்த பொருளாதார நிபுணர்களில் ஒருவரான டெங் சியாவோ பெங் தலைவராக இருந்த காலத்தில் சீனா சோசலிச நிர்மாணத்தில் கடந்த காலத்தில் விடப்பட்ட பல தவறுகள் திருத்தப்பட்டன. இப்பொழுது 2030ல் சகல துறைகளிலும் உலகின் சகல நாடுகளையும் விஞ்சுவது என்ற இலக்கை வைத்து அது வேகமாக முன்னேறி வருகிறது. இன்று அதன் பொருளாதார அபிவிருத்தி வேகம் உலகின் எந்த நாட்டுடனும் ஒப்பிட முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது. எனவே எதிர்காலத்தில் சீனாவே உலகில் மிகப் பலம் பொருந்திய வல்லரசாக திகழும் என அமெரிக்க நிபுணர்கள் கூட ஆருடம் கூறுகிறார்கள். இதனால் அமெரிக்கா கிலேசம் அடைந்துள்ளது. அண்மையில் பிபிசி (BBC) வெளியிட்ட ஒரு ஆவணத் தொலைக்காட்சி விவரணத்தில் இது பற்றி விரிவாக ஆராயப்பட்டு இந்த அச்சம் வெளிப்படுத்தப்பட்டது.

மக்கள் சீனாவின் ஆச்சரியப்படத்தக்க முன்னேற்றத்தை மனித உரிமை மீறல், ஜனநாயக மறுப்பு, சுதந்திரமின்மை ஆகிய திரைகள் போட்டு உலகின் கண்களில் இருந்து சோஷசலித்தின் உள்ளாற்றலை மறைக்க அமெரிக்கா பகீரதப் பிரயத்தனம் செய்தாலும் சீனாவின் வெற்றியைப் பறை சாற்றும் பல்வேறு ஆய்வுகள் மேற்கத்தைய நாடுகளிலேயே வெளியாகிக் கொண்டு தான் இருக்கின்றன. இத்தகைய ஆய்வுக் கட்டுரைகளில் ஒன்றை இங்கு குறிப்பிடாமல் இருக்க இயலாது. அது 404 பக்கங்கள் கொண்ட "பெரிய டிரக்கன் - சீனாவின் எதிர்காலம்: உலக ஒழுங்கமைப்பிலும், வாணிபத்திலும், பொருளாதாரத்திலும், அதன் அர்த்தம் யாது?" என்ற நூலாகும். இந்நூல் நியூயோர்க் முதலீட்டு வங்கியான பிளக்ஸ்டோன் குரூப்பின் சிரேஷ்ட ஆலோசகரான டானியல் பேர்ஸ்டைன், சீனாவில் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க கம்பெனிகளுக்கான தனியார் ஆலோசகரான ஆர்ன் டீ கெய்ஜர், ஆகிய இருவரால் இணைந்து எழுதப்பட்டது. ("Big Dragon – the future of China: What it means for Business, the Economy, and the Global Order" – By Daniel Burstein and Arne de Keijzer) .

இவ்வாய்வாளர்கள் உலகின் தற்கால பொருளாதாரப் போக்கினை விரிவாக ஆராய்ந்து இரண்டு முக்கியமான எதிர்வுகளைக் கூறியுள்ளனர். அதிலொன்று 2025ம் ஆண்டாகும் போது அமெரிக்காவும் சீனாவுமே உலக வல்லரசுகளாகத் திகழும். 2030களில் ஏதாவதொரு ஆண்டில் சீனாவே உலகின் மிகப்பெரிய பொருளாதார வல்லரசாகத் திகழும் என்பதாகும். மற்றது, உலகின் செல்வமும் பலமும் அத்திலாந்திக் மையத்திலிருந்து பசுபிக்கடல் மையத்திற்கு மாறிக் கொண்டிருக்கிறது. ( The world's wealth and power are moving from Atlantic-centric to Pacific-centric) சீனாவும் ஜப்பானும் கொரியாவும் அடைந்து வரும் அதிவேகமான வளர்ச்சி, இங்குள்ள இயற்கை வளம், சனத்தொகை, மலிவான உழைப்பு என்பன இக்கூற்றுக்கு வலுச்சேர்க்கின்றன.

இவ் ஆய்விலே வெளிச்சம் போட்டு காட்டப்பட்டுள்ள சில தகவல்கள் இதோ:

- சீனா வெளிநாட்டுச் சேமிப்பாக சுமார் 100 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொண்டுள்ளதால், இவ்வரிசையில் உலகின் மூன்று முதல்நிலை நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

- சீனாவிலே சுமார் 350,000 தகவல்துறை பொறியியலாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு வழங்கப்படும் சராசரி மாதச்சம்பளம் அமெரிக்காவின் தகவல்துறை பொறியியலாளர்கள் பெறுகின்ற சம்பளத்தை விட 29 மடங்கு மலிவானதாகும்.

- சீனாவின் உள்நாட்டு உற்பத்தி 1985ல் இருந்து மும்மடங்காக அதிகரித்துள்ளது. சீனாவின் மொத்த பொருளாதாரம் ஏனைய எந்த நாட்டையும் விட வேகமாக இருமடங்கு பெருகியுள்ளது.

- சீனாவின் வாங்குதிறன் உள்ள மத்திய தரவர்க்கத்தின் தொகை அமெரிக்காவின் முழு சனத்தொகைக்கு நிகரானது. இவ்வணியின் உண்மையான வருமானம் 1990களில் அமெரிக்காவின் உண்மையான வருமான வளர்ச்சியின் வேகத்தைக் காட்டிலும் 10 மடங்கு அதிகமாகும்.





கலாநிதி மார்க் பேபர் (Dr. Marc Faber) என்பவர் ஹொங்கொங் நாட்டில் சுமார் 20 வருடங்கள் தனது தலைமையகத்தை வைத்து ஆசியாவின் பொருளாதாரம் பற்றி விரிவாக ஆய்வுகள் நடத்திய ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியர். அத்துடன் பல பாரிய பல்தேசிய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கியும் வருகிறார். அவர் தனது "த கேஸ் போ சைனா" (The Case for China) என்ற கட்டுரையில் பல தகல்களை வெளியிட்டுள்ளார். சீனா ஆசியாவின் முதன்மைப் பொருளாதார அரசியல் வல்லரசாக எழுந்து வருகிறது. 1.2 பில்லியன் மக்களைக் கொண்டுள்ள சீனா தான் பெரும்பாலான பொருட்களையும் சேவைகளையும் நுகர்கின்ற உலகின் மிகப்பெரிய நுகர்வு நாடாகத் திகழப் போகிறது. இன்று உலகில் மிகக் கூடுதலான குளிரூட்டிகளையும், மொபைல் தொலைபேசிகளையும், தொலைக்காட்சிப் பெட்டிகளையும் மோட்டார் சைக்கிள்களையும் பயன்படுத்துகின்ற நாடு சீனாவாகும் எனக் குறிப்பிடும் அவர் சீனாவில் இன்று நடைபெற்றுவரும் மாற்றங்களை அமெரிக்காவில் நடைபெற்ற கைத்தொழில் புரட்சியுடன் ஒப்பிட்டு அதைவிடவும் சீனாவின் வளர்ச்சி வேகம் அதிகமாயுள்ளது எனச் சுட்டிக் காட்டுகிறார்.

அவரது கூற்றுப்படி 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் (1875 - 1890) அமெரிக்காவின் வருடாந்த கைத்தொழில் உற்பத்தி வேகம் 4.9 வீதமாக இருந்த போது பிரித்தானியாவின் வேகம் 1.2 வீதமாகவும் ஜேர்மனியின் வேகம் 2.5 வீதமாகவும் இருந்தது. அதேபோல 1978 - 1995 காலப்பகுதியில் ஏனைய உலகநாடுகளின் வருடாந்த தலாவீத உற்பத்தி வேகம் 1.11 ஆக வீழ்ச்சியடைந்த அதேசமயம் சீனாவின் சராசரி உற்பத்தி வேகம் ஐந்து சதவீதத்தைத் தாண்டியது. இவரது ஆய்வின் முடிவில், எத்தனை நெருக்கடிகளை சீனா கையாள வேண்டி வந்தாலும் அந்நாடு இன்னும் 10 அல்லது 20 வருடங்களில் உலகின் மிக முக்கியமான பொருளாதாரமாக மாறும் என எதிர்வு கூறுகின்றார்.

இன்று அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக கூடுதலான கணினிகளைப் பயன்படுத்தும் நாடு என்ற அந்தஸ்த்தை சீனா பெற்றுக் கொண்டுள்ளது. விரைவில் சீனா இந்நிலையில் அமெரிக்காவை விஞ்சும் என எதிர்வுகள் கூறுகின்றன. சீனாவின் கைத்தொழில் அபிவிருத்தியின் வேகம் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் நுகர்ச்சியை அதிகரிக்கச் செய்துள்ளது. இதனால் எதிர்காலத்தில் தனது பொருளாதாரம் ஒரு நெருக்கடியில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காக அது பல முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது. வெனின்சுலா, சூடான், ஈராக், ஈரான், பெரு, அசர்பைஜான் ஆகிய நாடுகளில் சீனா எண்ணெய் உற்பத்தி விற்பனையில் பங்குகளை வாங்கியுள்ளது. அண்மையில் சீனாவின் மிகப் பெரிய எண்ணெய்க் கூட்டுத்தாபனமான சீன தேசிய பெற்றோலிய கூட்டுத்தாபனம் கசகஸ்த்தானில் உள்ள அக்டோபெமுனாய்காஸ் என்ற எண்ணெய் நிறுவனத்தின் 60 சதவீதமான பங்கை வாங்கியுள்ளது.

இவ்வாறு அமெரிக்காவின் போலி - பிரச்சாரத் திரைக்கு பின்னால் ஆர்ப்பாட்டமில்லாமல் மக்கள் சீனா சோசலிசத் தீபத்தைப் பாதுகாத்து வருவதும், அதன் பிரமிக்கத்தக்க வளர்ச்சி வேகமும், நாளையது - மிக விரைவில் முழு உலகையும் சிவக்கச் செய்யப் போகிறது என்ற நம்பிக்கையை மலரச் செய்கிறது. இதற்கு வலுவூட்டுவதைப் போல இப்போது சீன - இரஷ்ய உறவு சீரடைந்து வருகிறது. குருஷ்சேவ் காலத்திலிருந்து சீனா, சோவியத் யூனியனையே உலக மக்களின் பிரதான எதிரியாக வர்ணித்து வந்தது. இத்தவறை, சீனா இப்போது சரி செய்து கொண்டுள்ளது. மறுபுறத்தில் இரஷ்யா சீனாமீது கடைப்பிடித்த பெரிய அண்ணன் மனோபாவத்தை இப்போது மாற்றிக் கொண்டுள்ளது. சோஷலிச முகாமைச் சேர்ந்த இவ்விரு பெரும் வல்லரசுகளும் அண்மையில் தான் இரு நாடுகளுக்குமிடையிலான எல்லைத் தகராறைச் சுமூகமாகத் தீர்த்துக் கொண்டன. தற்போது சீனாவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள ஹூ ஜின்டாவோ தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை இரஷ்யாவுக்கே மேற்கொண்டார். இவ்விஜயத்தின் போது இரஷ்ய அதிபர் புட்டின் வலு, விண்வெளி தொழில் நுட்பம், ஆயுத விநியோகம், பிராந்தியப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் சீனாவுக்கு ஒத்துழைப்பு நல்குவதாக உறுதியளித்தார்.

இரு தலைவர்களும் 2.5 பில்லியன் டொலர் செலவில் சைபீரியாவிலிருந்து சீனாவின் கைத்தொழில் மையமான டாகிங் நகருக்கு எண்ணெய் விநியோகக் குழாய் அமைக்கும் பிரமாண்டமான திட்டம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இரஷ்யா இப்போது மிக நவீன சுக்ஹோய் - 300 எம்.கே.கே ஜெட் யுத்த விமானங்களையும் சுப்பர் சோனிக் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளையும் சீனாவுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. கடந்த வருடம் இரஷ்யாவின் மொத்த ஆயுத ஏற்றுமதியில் 55 சதவீதத்தை சீனாவே கொள்வனவு செய்தது. இரு





நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் முன்னொருபோதும் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது.

சீனாவுக்கு அருகிலே இருக்கும் வடகொரியா சீனாவுக்கு நெருக்கமான நட்பு நாடாக இருந்து வருகிறது. 1954ல் அமெரிக்கா அதன் மீது படையெடுத்த போது சீனசெஞ்சேனை கொரிய மக்களுடன் இணைந்து அமெரிக்காவுக்கு எதிராகப் போராடியது. இப்போரின் மீது மாவோசே துங்கின் ஒரு மகனும் உயிர் துறந்தார். இன்று வடகொரியாவே மிகக் கூடுதலான ஏவுகணை உற்பத்தி செய்யும் நாடாகத் திகழ்கிறது. அந்நாடும் அணு ஆயுத உற்பத்தியில் இறங்கியுள்ளது.

இந்நிலையில் ஐ.நா. மூலம் வடகொரியாவை அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு அமெரிக்கா முயற்சி செய்தது. சிறிது காலம் இந்நிர்ப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டாலும் இப்போது அது மீண்டும் அமெரிக்காவுக்குச் சவால்விட்டுக் கொண்டு அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அதன் இராணுவ பலம் அணு ஆயுத உற்பத்தி மூலம் அதிகரிக்க முன்னர் அதைத் தாக்கி சீனாவைச் சுற்றிலும் தனது தளத்தை விரிவுபடுத்திக் கொள்ள அமெரிக்கா திட்டமிடுகிறது. இந்நிலையில் பிலிப்பைன்ஸ், தைவான், தென்கொரியா, ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்காவின் தளங்கள் வடகொரியாவின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய தூரத்தில் அமைந்துள்ளன. எனவே அதற்கு ஒரு பின்புலம் தேவைப்படுகிறது. தேவை ஏற்படின் தனது தளமாகப் பயன்படுத்திக் கூடிய விதத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை திகழ்வதை உறுதி செய்து கொள்ள அமெரிக்கா முனைகிறது. இலங்கையின் திருகோணமலைத் துறைமுகம் கடல்வழி தாக்குதலுக்கு மிகவும் பாதுகாப்பான தளம் என்பதால் இந்த முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கிறது. அத்துடன் நாளை இந்தியாவுடன் ஒரு யுத்தம் ஏற்பட்டால் இலங்கையைத் தளமாக கொண்டிருப்பது அமெரிக்காவுக்கு மிகவும் சாதகமாக அமையும். இலங்கையை போர்த்துகேயரும், ஒல்லாந்தரும், பிரித்தானியரும், ஒன்றன்பின் ஒருவராய் கைப்பற்றியதற்கு இலங்கையின் மூலவளங்கள் பிரதான காரணமாக அமைந்திருக்கவில்லை. இலங்கையைக் கைப்பற்றினால் இந்தியாவைக் கைப்பற்றுவது சுலபம் என்பதே வரலாறாக இருக்கிறது. இதனால் தான் இலங்கை அரசியலில் அமெரிக்கா இப்போது கூடிய கவனம் செலுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை இந்தியாவும் உணர்ந்துள்ளது. அது தனது பாதுகாப்புத் தொடர்பாக கவலை கொள்ள ஆரம்பித்துள்ளது. இதனால் தான் இலங்கை விவாகாரத்தில் இந்தியா மீண்டும் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் உள்ள கட்சி அரசியல் பிளவு ஈழத் தமிழர் மத்தியில் உள்ள அரசியல் பிளவை விட ஆழமானது. அவர்கள் கிட்டத்தட்ட சமபலம் கொண்ட இருபெரும் அரசியல் கட்சிகளில் பிரிந்திருக்கிறார்கள். வேறு சில சிறு கட்சிகளும் அங்கு உள்ளன. இந்நிலையில் அமெரிக்காவும் இந்தியாவும் ஆளுக்கொரு கட்சியைப் பிடித்துக் கொண்டு இலங்கையில் செல்வாக்கு பெறத் துடிக்கின்றன. இந்நிலையில் திருகோணமலை அமைந்துள்ள வடக்கு கிழக்கு அரசியலில் ஈழ மக்களின் போராட்டமும் விடுதலைப் புலிகளின் பாத்திரமும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆகவே இலங்கையின் தேசியப் பிரச்சினை என்பது ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாக மாத்திரமன்றி சர்வதேச அரசியலோடு சம்பந்தப்பட்ட விடயமாகவும் மாறி வருகின்றது. இதில் ஈழ மக்களின் விடுதலைக்காகப் போராடும் எந்த அமைப்பும் உலக ஏகாதிபத்தியத்தின் கைப்பாவையாக மாறி இந்தியாவுக்கு எதிராகவோ அல்லது மக்கள் சீனாவுக்கு எதிராகவோ செயல்படுமானால் அது அன்றைய ஸ்லாவிய தேசிய இயக்கங்கள் ஜாரிச ரஷ்யாவின் பிற்போக்கு நோக்கங்களை நிறைவேற்றும் கருவிகளாக செயல்பட்டதைப் போன்ற பிற்போக்குப் பாத்திரத்தையே வகிக்க முடியும். அதேசமயம் இந்தியா 1987ல் தமிழ் மக்களின் பெயரால் இலங்கையில் காலடி பதித்ததைப் போல இத்தடவை புலிகளை அடக்குவது அல்லது ராஜிவ் காந்தி கொலை தொடர்பாக புலிகள் இயக்கத் தலைவரை கைதுசெய்வது என்ற போர்வையில் தனது படைகளை அனுப்புமானால் அது இலங்கையில் வாழும் சகல தேசியங்களினதும் சுயநிர்ணய உரிமையை மீறும் செயலாகும். அப்படியான ஒரு நிலைமை உருவாகுமானால் அதற்கெதிராக விடுதலை யுத்தம் நடத்தும் உரிமை இலங்கையில் வாழும் சகல தேசியங்களுக்கும் உண்டு.

## இலங்கையில் வாழும் தேசியங்களின் தனித்துவம்

இலங்கை பல தனித் தன்மைகளைக் கொண்ட ஒரு தீவு. இங்கு சிங்களவர், ஈழத்தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், ஆகிய தேசியங்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றன. இவர்களை விட வேடர் பூர்வ குடிகளாக அங்கு வாழ்ந்து வருகின்றார்கள். அத்துடன் பறங்கியர் ஒரு தேசிய சிறுபான்மையாக வாழ்கிறார்கள்.





சிங்களவர் மத்தியில் கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் என்ற உட்பிரிவு இருந்த போதும் 1930களிலிருந்து இவ்விரு சாராரின் மேட்டுக் குடியினரும் இரண்டறக் கலத்தலால் ஒரே தேசியமாக உருவாகி உள்ளனர். பௌத்த மதமும் சிங்கள மொழியும் அவர்கள் வாழும் தொடர் நிலப் பிரதேசமும் இவ்விணைவுக்கு வலுச் சேர்க்கின்றன. இவர்களே எண்ணிக்கையில் பெரிய தேசியம். இலங்கையின் பாராளுமன்ற ஆட்சிமுறை சிங்கள ஆளும் வர்க்கத்தின் கைகளில் அரசியல் அதிகாரத்தை வழங்கியுள்ளது. இலங்கையின் சனத்தொகையில் 70 சதவிகிதம் சிங்களவர்கள். 1956ல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டமும் 1972ல் நிறைவேற்றப்பட்ட குடியரசு யாப்பில் இலங்கை ஒரு பௌத்த நாடாக பிரகடனப்படுத்தப் பட்டமையும் சிங்கள பௌத்த சித்தாந்தத்திற்கு வலுவூட்டி ஏனைய தேசியங்களை, பொது அரசியல் நீரோட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி உள்ளன. எனவே சிங்கள தேசியம் சலுகை பெற்ற ஆளும் தேசியமாக மாறி உள்ளது. இன்று இவர்கள் மத்தியில் பிரதேச வேறுபாட்டை விட கட்சி வேறுபாடே செல்வாக்குச் செலுத்துகிறது. கிட்டத்தட்ட சமபலம் கொண்ட பிரதான கட்சிகள் (ஐக்கிய தேசிய கட்சி - ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி) இம்மக்களை ஆழமாக பிளவுபடுத்தியுள்ளன. இவற்றைத்தவிர ஜே.வீ.பீ., ல.ச.ச.கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய செல்வாக்குமிக்க சிறுகட்சிகளும் இவர்கள் மத்தியில் காணப்படுகின்றன.

இலங்கையில் நிலவும் பாராளுமன்ற முறை தேசிய பிளவுகளை ஆழப்படுத்தியுள்ளது. சனத்தொகையில் 30 சத வீதத்தை மாத்திரமே கொண்டிருக்கும் தமிழ் பேசும் மூன்று தேசியங்களும் கூட்டாகக் கூட அதிகாரத்திற்கு வரமுடியாத நிலையில் நிரந்தரமாகப் பெரும்பான்மைச் சிங்கள தேசியத்தின் ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டு வாழ வேண்டிய அரசியல் கட்டமைப்பை அது கொண்டுள்ளது. மறுபுறத்தில் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய எந்த ஒரு அரசியல் தீர்வையும் இப்பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையிலான அதிகாரப் போட்டி இடம் கொடுப்பதில்லை.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த மட்டில் உலகில் வேறு எந்த நாட்டிலும் காணமுடியாத வித்தியாசமான நிலைமை காணப்படுகின்றது

ஒரே மொழியை - தமிழ் மொழியைப் பேசுகின்ற மூன்று தேசியங்கள் அங்கு வாழ்கின்றன. அவையாவன: ஈழத்தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் ஆகியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழர்:

வரலாற்றுக் காரணங்களாலும் பிரதேச வேறுபாடு காரணமாகவும் யாழ்ப்பாணத் தமிழர், வன்னித் தமிழர், மட்டக்களப்புத் தமிழர் போன்ற உட்பிரிவுகள் இவர்கள் மத்தியில் காணப்பட்டாலும் மொழியாலும் பொதுக் கலாசாரத்தாலும் வாழும் தொடர் நிலப்பரப்பாலும் ஒன்றிணைந்த தேசியமாக இவர்கள் பரிணமித்து வருகிறார்கள். இவர்கள் மத்தியில் தமிழ் ஈழத்துக்கான ஆயுதப் போராட்டம் பிரதான அரசியல் போக்காக இருந்து வருகிறது. இத் தேசியத்தின் மத்தியில் ஒரு சிறப்பு நிலைமை காணப்படுகிறது. இவர்கள் மத்தியில் நவீன பாட்டாளி வர்க்கம் ஒன்று கிடையாது. இவர்கள் வாழும் வடக்கு கிழக்குத் தமிழ்ப் பகுதிகளில் ஒரு சில தொழிற்சாலைகளும் சில தொழிற்துறைகளும் இயங்கிய போதும் அவற்றில் பணிபுரியும் தமிழ்த் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதுடன் அவர்கள் நிலத்திலிருந்து இன்னும் பிரிக்கப்படாதவர்களாகவே உள்ளனர்.

யாழ்ப் பிரதேசம், படித்த மத்தியதர வர்க்க அணியொன்றைப் பெருமளவில் கொண்டிருக்கும் அதே வேளை வன்னியும் கிழக்கு மாகாணமும் விவசாயிகளைப் பெருவாரியாகக் கொண்டிருந்தது. இன்று ஈழத்தமிழர் மத்தியிலிருந்த படித்த மத்தியதர வர்க்க அணியின் பலம் குறைந்துள்ளது. அவர்களில் அனேகமானோர் வெளிநாடுகளில் குடியேறியுள்ளனர். எஞ்சியிருப்போர் நீண்ட கால யுத்தத்தால் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள். இன்று பெரும்பாலும் ஈழமண்ணில் எஞ்சியிருப்பவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வாய்ப்பும் வசதியும் இல்லாத அடிமட்ட மக்களேயாவர். இவர்கள் மத்தியில் கிராமிய உழைப்பாளர்கள் ஒரு சமூக சக்தியாகத் திகழும் அதேவேளை வெளிநாட்டில் வாழும் உறவினர்கள் அனுப்பும் பணத்தில் சற்று வசதியாக வாழும் ஒரு அணியும், வர்த்தகம், போக்குவரத்து, அரசாங்க உத்தியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒரு அணியும் உள்ளது. பெரும் கடற்பரப்பு வடக்கு கிழக்கு மண்ணின் காலடி முழுவதும் விரிந்து செல்வதால் மீனவர்கள் ஒரு சமூக சக்தியாக இங்கு திகழ்கிறார்கள்.

## முஸ்லீம்கள்:

இலங்கையில் வாழும் முஸ்லிம்களை, கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள், கிழக்கு மாகாணத்திற்கு வெளியே வாழும் முஸ்லிம்கள் எனப்





பிரிக்கலாம். இவர்களது தாய்மொழியும் தமிழாகவே உள்ளது. இவர்களில் ஒரு சிறு பகுதியினர், சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிறு பகுதியினர் மலாய் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்களில் பெரும்பாலோனோர் சாபி பிரிவைச் சார்ந்தவர்கள். கொழும்பு நகரை மாத்திரமே மையமாகக் கொண்டிருக்கும் யேமன், போரா, போன்ற முஸ்லிம் பிரிவினர் இவர்களுடன் இன்னும் இரண்டறக் கலக்கவில்லை. அவர்களது தாய்மொழியும் தமிழ் அல்ல. இன்று கிழக்கு மாகாண முஸ்லிம்களை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இஸ்லாமிய தேசியவாதம், அடிப்படையில் சிங்கள பெருந்தேசியவாதத்திற்கு எதிராகவே உருவானது. ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் இஸ்ரேலின் மொசாட் பிரிவை இலங்கைத் தீவுக்குக் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்ட போது அதற்கு எதிராக ஏற்பட்ட எழுச்சியை ஆதாரமாகக் கொண்டே முஸ்லிம் காங்கிரஸ் உருவானது. இதுவே இஸ்லாமிய தேசியவாதத்தின் புதிய தலைமையாக இன்று பரிணாமம் அளித்துள்ளது. சிங்கள பெருந்தேசியவாதத்திற்கு எதிராக உருவாகிய முஸ்லிம் தேசியவாதத்தைத் தமது போராட்டத்துடன் இணைத்து ஒடுக்கப்படும் தமிழ் பேசும் மக்களின் ஒட்டு மொத்த போராட்டமாக மாற்றுவதில் முஸ்லிம் தலைமைகளைப் போலவே தமிழ்த் தலைமைகளும் தோல்வி கண்டுள்ளன. ஆனால் ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிராக இஸ்லாமிய தேசியவாதத்தைப் பயன்படுத்துவதில் சிங்களத் தலைவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

இவர்கள் மத்தியிலும் நவீன பாட்டாளி வர்க்கம் ஒன்று கிடையாது. கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பாலோனோர் விவசாயிகளாக இருக்கும் அதே சமயம் அதற்கு வெளியே வாழும் முஸ்லிம்கள் மத்தியில் பலமான வர்த்தக அணி ஒன்று உள்ளது. ஆகவே கிட்டத்தட்ட ஈழத் தமிழரும் முஸ்லிம்களும் ஒரே வர்க்கத் தன்மைகளைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். முஸ்லிம் மக்களை ஏனைய தமிழ் மக்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் பிரதான அம்சம் மதத்தை மையமாகக் கொண்ட கலாசாரமாகும். இவர்களது தாய் மொழியான தமிழ் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் ஒரு இணைவை ஏற்படுத்தினாலும் அவர்கள் வழிபடும் இஸ்லாம் மதம் மற்றவர்களை அரவணைக்கக் கூடிய நெகிழ்ச்சியான தன்மையைக் கொண்டிருக்கவில்லை. மறுபுறத்தில் ஏனைய தமிழ் பேசும் மக்கள் முஸ்லிம்களோடு மொழியால் ஒன்றுபட்டாலும் அவர்கள் மத்தியிலுள்ள இறுக்கமான சாதிக் கட்டமைப்பு முஸ்லிம்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைக்கக் கூடிய நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டிருக்கவில்லை. பொதுவாக, தமிழ்த் தேசியவாதம் என்பது மதசார்பற்ற ஒன்றாக அன்றி சாராம்சத்தில் இந்து மதத்தின் அரசியல் தத்துப்பிள்ளையாக மேட்டுக் குடியினரால் உருவம் கொடுக்கப்பட்டதால் இத்தேசியப் பிளவு ஆழமடைந்தது.

தேசியவாதம் தொடர்பான ஆய்வில் நவீன உலகிற்கு நன்கு பரிச்சயமான பெனடிக்ற் என்டர்சன் (Benedict Anderson: Imagined Communities: Reflections on the Origin and Spread of Nationalism) கூறியதைப் போல தேசியவாதத்திற்கென வாய்ப்பாட்டு ரீதியான அடிப்படை எதுவும் கிடையாது.

சில தேசியங்கள் மத்தியில் அவை வாழும் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டும், சில தேசியங்கள் மத்தியில் மொழியை அடிப்படையாகக் கொண்டும் (linguistic nationalism), சில தேசியங்கள் மத்தியில் மதத்தை அடிப்படையாகக் கொண்டும் (Religious Nationalism) உருவாகின்றன.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் உருவாகியிருப்பது மதத்தை அடிப்படையாகக் கொண்ட தேசியவாதமாகும்.

## மலையகத் தமிழர்:

இலங்கையின் இரண்டாவது பெரிய தேசியமாக 1956வரை திகழ்ந்த இம்மக்கள் இன்று எண்ணிக்கை ரீதியில் நான்காவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களது வரலாறு 1823 பெருந் தோட்டங்கள் உருவானதிலிருந்தே ஆரம்பிக்கின்றது. இவர்கள் தாய்மொழியாக தமிழைப் பேசிய போதும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு வடக்குக் கிழக்குடன் தொடர்பில்லாத சிங்களக் கிராமங்களால் சூழப்பட்ட மத்திய மலைநாட்டில் குடியேற்றப்பட்டவர்கள். இவர்களது மூதாதையர்களின் கலாசார - உணர்வு சார்ந்த தொடர்புகள், தொப்புள்கொடி உறவுகள் என்பன இன்னும் தமிழ்நாட்டுடன் தொடர்வதால் இவர்கள் தனியான ஒரு தேசியமாக உருவாகியுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலோனோர் பெருந்தோட்டப் பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்டவர்கள். அத்துடன் இவர்கள் மத்தியிலான வர்க்க அமைவும் முற்றிலும் வேறுப்பட்டது. ஒரே இடத்தில் வாழ்ந்து ஒரே பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ள இவ்வளவு தொழிலாளர்களைக் கொண்ட மற்றொரு தேசியத்தை





உலகில் வேறெங்கும் காணமுடியாது. இவர்களில் பெரும்பாலானோர் தொழிலாளர்கள். ஆயினும் அவர்களை நவீன பாட்டாளி வர்க்கம் எனக் கூறமுடியாது. பெருந்தோட்டதுறைக்கே உரிய பின்தங்கிய விவசாயத் தொழிலாளர்களாகவே இவர்கள் திகழ்கிறார்கள். ஆயினும் ஏனைய எந்தச் சமூகங்களையும் விட, தமது தொழிற்சங்கங்களால் ஸ்தாபனப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். வெளியிலிருந்து வேறு எந்த அரசியல் கட்சியும் ஊடுருவ முடியாத அளவுக்கு இறுக்கமான பலம் பொருந்திய அரணாக இந்த தொழிற்சங்க வேலி இவர்களைப் பிரிக்கிறது. இவர்கள் மத்தியில் 1960களின் கடைசிப்பகுதியிலிருந்து சிறுமுதலாளித்துவ அணியொன்றும் மலையகத் தேசியவாதமும் உருவாகி வலுப்பெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 4

## சில முன்மொழிவுகள்

### தமிழ் பேசும் தேசியங்களின் ஒன்றிணைந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது எவ்வாறு?

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தமக்கிடையிலான பேதங்களை மறந்துவிட்டு தமிழர் என்ற ரீதியில் ஒன்றுபட வேண்டும் என்ற கோஷம் சில வேளை நல்ல நோக்கத்துடன் முன்வைக்கப்பட்டாலும் கூட யதார்த்தம் அப்படி அல்ல. சாராம்சத்தில் இக்கோஷம் ஏனைய தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை மறுதலிப்பதாகவே இருக்கும். தமிழ் - சிங்கள வேறுபாடுகளை மறந்து இலங்கையர் என்ற முறையில் நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என சில சிங்கள அன்பர்கள் முன்வைக்கும் கோஷத்திற்கும் இதற்கும் அதிகம் வித்தியாசம் இல்லை.

இன்று விடுதலைப் போராட்டத்தில் ஈழத்தமிழர்களே முன்னணிப் பாத்திரம் வகிக்கிறார்கள். வடக்கில் ஒரு மலையோ ஆறோ கிடையாது. ஆகவே இங்கு கொரில்லா யுத்தம் சாத்தியம் இல்லை என கருதப்பட்ட நிலையை மாற்றி மண்ணுக்கேற்ற வடிவத்தில் போர்முறைகளை மாற்றியமைத்து இன்று உலகின் மிகப் பலம் பொருந்திய கொரில்லா அமைப்பைக் கொண்ட விடுதலை அமைப்பாக மாறியுள்ளது. லெனின் போன்ற அல்லது மாவோ சே துங்கைப் போன்ற மேதைகளால் உருவாக்கப்பட்ட அமைப்பாக அன்றி சராசரி மனிதர்களால் உருவாக்கப்பட்டு உலகம் வியக்கும் ஒரு விடுதலை இயக்கமாக அதனை அனுபவக் கல்வி மூலம் கட்டியெழுப்பியிருப்பது வியந்து பாராட்ட வேண்டிய விடயமாகும். இன்று உலகின் ஏனைய பகுதிகளில் உள்ள தேசியவிடுதலை இயக்கங்கள் இதனிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பலவுண்டு. இராணுவ விஞ்ஞானத்தில் பல புதிய அத்தியாயங்களை எமது விடுதலைப் போராட்டம் எழுதியுள்ளது. ஆயினும் வேதனைக்குரிய பாரதூரமான பல அரசியல் தவறுகளை எமது விடுதலை இயக்கங்கள் இழைத்துள்ளன. அவற்றை எல்லாம் இங்கு பட்டியல் போட்டுக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல. ஆயினும் அத்தவறுகள் திருத்தப்படாவிட்டால் இராணுவ ரீதியில் நாம் இதுவரை ஈட்டிய வெற்றிகளைக் கூட இழக்க வேண்டிவரும். இதனை மனதில் கொண்டு எமக்கு முன்னால் உள்ள எதிர்காலப் பணியை சுட்டிக்காட்டி, தமிழ்பேசும் மக்கள் மத்தியில் ஒரு பொதுவான ஐக்கியத்தை ஏற்படுத்தி,





எமது விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுப்பது எவ்வாறு என்பதைப் பற்றியே இக்கட்டுரை ஆராய முயல்கிறது. இவ்வகையில் நாம் தீர்வு காண வேண்டிய சில பிரதான பிரச்சினைகளையும் நாம் ஆற்ற வேண்டிய சில முக்கய கடமைகளையும் இனி ஆராயலாம்.

### கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களை இப்போராட்டத்தில் இணைப்பது எவ்வாறு?

சிங்களப் பெருந்தேசிய வாதத்திற்கு எதிராக உருவான முஸ்லிம் தேசியவாதத்தை ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கு எதிராகத் திசை திருப்பி விடுவதில் சிங்கள ஆளும் வர்க்கம் வெற்றி பெற்றிருக்கிறது. ஈழ விடுதலைப் போராட்டம் அவர்களை நேச சக்தியாக இணைத்துக் கொள்வதில் தோல்வியையே கண்டிருக்கிறது. இதற்கான பழியை முஸ்லிம் தலைவர்களின் தலையில் மாத்திரம் போட முடியாது. இவர்களைக் கையாள்வதில் பாரதூரமான தவறுகளை ஈழவிடுதலை இயக்கங்களும் இழைத்துள்ளன. இதனால் கிழக்கு மாகாண இஸ்லாமியர்கள் தமது பாதுகாப்பிற்காக, சிங்களப் பெருந்தேசிய வாதத்திடம் சரணடைந்திருக்கிறார்கள். சிங்கள ஆளும் வர்க்கத்திடம் கையேந்துகின்ற அணி ஒன்று ஈழத்தமிழ் மக்கள் மத்தியிலும் இருந்தே வந்துள்ளது. அதைப்போன்ற ஒரு அணி முஸ்லிம்கள் மத்தியிலும் உள்ளது. இதற்காக ஒரு தேசியத்தையே ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

இன்று கிழக்கு முஸ்லிம் மக்கள் மத்தியில் ஜிஹாத் இயக்கம் உருவாகி இருப்பது சிங்களப் பெருந் தேசியவாதத்திற்கு எதிராக அல்ல. ஈழத்தமிழ் தேசியவாதத்தின் அடக்குமுறைக்கு எதிராகத்தான் என்பதையும் அவர்கள் சுய நிர்ணய உரிமையை உயர்த்திப்பிடிப்பது சிங்கள தேசிய வாதத்திற்கு எதிராக அல்ல ஈழத்தமிழ்த் தேசியவாதத்திற்கு எதிராகத்தான் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். "எம்மால் சிங்களவரோடு வாழ முடியும் ஆனால் தமிழர்களோடு வாழ முடியாது" என அவர்கள் கூறுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும். எப்படி? துப்பாக்கி முனையில் மாத்திரம் அதனைச் சாதிக்க முடியாது. எம்மிடம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான உணர்வு கிடையாது. எம்மை நம்புங்கள் எமது தமிழீழத்தில் நீங்கள் பாதுகாப்பாக வாழமுடியும் என என்ன தான் சத்தியம் செய்தாலும் எத்தனை உறுதி மொழிகளை வழங்கினாலும் முஸ்லிம் மக்களின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது. இந்த நிலைமையை மாற்றுவதற்குத் தெளிவான திட்டவட்டமான வேலைத் திட்டம் ஒன்று தேவை. முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதத்தில் ஈழத் தமிழர்களே கூடுதலான விட்டுக் கொடுப்பைச் செய்ய வேண்டும்.

லெனின் பிற தேசியங்கள் மீது காட்டிய அதே சகிப்புத் தன்மையும் நிதானமும் அக்கறையும் இங்கு தேவை. இதற்கு முதலில், முஸ்லிம் மக்களின் சுய நிர்ணய உரிமையையும் தனித்துவத்தையும் அங்கீகரிக்க வேண்டும். இரண்டாவதாக, அவர்கள் என்ன தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு அவர்களிடமே விடப்பட வேண்டும். அவர்கள் நியாயமான எந்த முடிவினை எடுத்தாலும் அதனை அங்கீகரித்து அமுல்படுத்தும் மனத் தைரியமும் பக்குவமும் தேவை. அது இருந்தால் மாத்திரம்தான் ஒருவர் உரிமையை மற்றவர் மதிக்கும் நிலையில் உளப்பூர்வமான ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும். சீனாவிலே ஹோச்சே என்ற உலகின் மிகச் சிறிய தேசியத்திற்கு சுய நிர்வாக அலகு ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்ததனால் சீன மக்கள் எதையும் இழந்து விடவில்லை. மாறாக அம்மக்களின் நம்பிக்கையையும் நட்பையும் பெற்றிருக்கிறார்கள். கற்பனாவாத ஐக்கியத்திற்கு மாறாக உண்மையான ஐக்கியத்தை இவ்வாறு தான் ஏற்படுத்த முடியும்.

எந்த ஒரு போராட்டத்திலும் எமது பிரதான எதிரி யார்? நேச சக்திகள் யார்? என்பதைத் தெளிவாக இனம் காண்பது அவசியம். எமது பிரதான எதிரியான சிங்களப் பெருந்தேசியவாதத்தைத் தனிமைப்படுத்துவது, ஈழப் போராட்டத்தை முன்னெடுப்பது என்ற நிலைப்பாட்டிலிருந்து பார்த்தால் கூட இத்தகைய வேலைத்திட்டம் ஒன்று நிச்சயம் தேவை.

மறுபுறத்தில் முஸ்லிம் மக்களுக்கு அரசியல் தீர்வாக எத்தகைய அலகு ஒன்று தேவை, அவ்வலகு ஈழத்துடன் சமஷ்டியாக அமையுமா? அல்லது அதன் அதிகாரங்கள் எந்தளவு யாருடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்பதில் தெளிவு தேவை. இன்று கிழக்கு முஸ்லீம்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை முன் வைப்பதில் முஸ்லிம் தலைமைகள் ஒன்றுபடத் தவறியுள்ளன. அவர்களில் ஒரு சாரார் சிங்களவாத அரசுடன் கூடிக் குலாவுவதையும் அவர்களுடன் ஐக்கியப்பட்டு வாழுவதையும் விரும்புகின்றனர். ஆயினும் தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் தமது தனித்துவம் பேணி சுய நிர்ணய உரிமை அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களுடன் ஐக்கியப்பட்டு ஒரு ஏற்பாட்டின் கீழ் வாழ்வது தான் முஸ்லிம் மக்களின் எதிர்கால நலனுக்கு உகந்தது என்பதை அவர்கள் உணர வேண்டும்.



## மலையக தமிழ் தேசியத்தை இப்போராட்டத்தில் இணைப்பது எவ்வாறு?

இலங்கையின் பொருளாதாரம் மலையக தமிழ் மக்களின் கைகளில் உள்ளது என்று. கூறினால் அது மிகையாகாது. ஒரு அவ்ரோ விமானத்தைச் சுட்டு வீழ்த்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படும் அதே நட்டம் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தால் ஏற்படும். இதனைப் புரிந்து கொண்டு சிங்களத் தேசியவாத அரசுகள் தொண்டமான் போன்ற தலைவர்களைத் தம் பக்கம் வைத்துக் கொண்டு மலையகத் தமிழர், தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில், ஒன்றுபட்டுத் தமது தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடாமல் தடுத்து வந்துள்ளனர். இம்மலையகத் தலைமைகள் மலையகத் தேசியவாதத்தை, மலையகத் தமிழ் மக்களைச் சிங்களத் தொழிலாளவர்க்கத்திடமிருந்தும் ஏனைய தமிழ்பேசும் மக்களிடமிருந்தும் தனிமைப்படுத்தி, தமது தலைமையைப் பாதுகாத்துக் கொண்டு தமது வர்க்க நலனை காப்பாற்றிக் கொள்வதற்குத்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மலையக மக்களும் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் இணைந்தால் இரண்டாவது உலக மகா யுத்தத்தில் இரண்டாவது போர்முனை திறக்கப்பட்ட போது பாசிஸ்டுகள் முகங்கொண்ட அதே சிக்கலான நிலைமை சிங்கள தேசியவாதிகளுக்கு ஏற்படும் இதனை சிங்கள தலைமைகள் புரிந்து கொண்டுள்ளன. ஆனால் தமிழ் தலைமைகள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

மலையகத் தமிழர்கள் ஈழப் போராட்டத்திற்கு எதிராக என்றுமே செயல்பட்டதில்லை. அவர்கள் வடக்குக் கிழக்கிற்கு வெகு தூரத்தில் தனியாக வாழ்வதால் சிங்கள ஆட்சியாளர்களால் அவர்களை ஈழப் போராட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்த முடியவில்லை. ஆனால் 1960களின் கடைசி பகுதிகளில் இரா. சிவலிங்கம் தலைமையில் உருவான மலையகத் தேசியவாதம் சிங்களத் தேசிய வாதத்திற்கு எதிராக அல்ல யாழ்ப்பாணத்தவர்களுக்கு எதிராகத்தான் உருவானது என்பதை நாம் மறந்துவிட இயலாது. 1983ன் பின்னர் மலையகத்தில் இருந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் ஏனைய அரசு ஊழியர்களும் பெருமளவில் வெளியேறிவிட்டதால் அந்த முரண்பாடு தீர்க்கப்பட்டு விட்டது. ஆனால் இரு தேசியங்களுக்குமிடையில் சந்திப்பு ஏற்படும் போதெல்லாம் இம்முரண்பாடு மீண்டும் மீண்டும் முளைவிடுவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக தமிழ்த் தேசியத்தின் சுய நிர்ணய உரிமையை ஈழத்தமிழர்கள் அங்கீகரிக்க வேண்டும். அவர்கள் இடம்பெயர்ந்து வடக்கு கிழக்கில் வந்து குடியேற விரும்பவில்லை. தாம் உருவாக்கிய மண்ணிலிருந்து தமது வாழும் உரிமைக்காக அவர்கள் போராட விரும்புகிறார்கள். அந்த உணர்வை ஊக்குவிக்கும் விதத்திலும் அவர்களது உரிமைகளை மதிக்கும் விதத்திலும் ஈழ விடுதலை இயக்கங்கள் செயல்பட வேண்டும்.

மறுபுறத்தில் மலைய மக்கள் தமது உரிமைக்காகத் தாமே போராட வேண்டும். தமக்காகப் பிறர் போராட வேண்டும் என்றோ தமக்கான அரசியல் தீர்வை வேறு யாரும் பெற்றுத்தர வேண்டும் என்றோ அவர்கள் எதிர்பார்க்கக் கூடாது.

## சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவது எவ்வாறு?

தமிழ் பேசும் மக்களின் எதிரி சிங்களப் பெருந்தேசியவாதமும் சிங்கள ஆளும் வர்க்கமுமே தவிர சிங்களப் பொதுமக்கள் அல்ல. சிங்கள மக்கள் தமது ஆளும் வர்க்கத்தையும் தமிழ் பேசும் மக்கள் தமது ஆளும் வர்க்கத்தையும் தூக்கியெறிந்து விட்டுக் கூட்டாக சோசலிசத்தை ஏற்படுத்தக்கூடிய சூழல் இன்று கிடையாது தான். ஆனால் இன்று தனிநாடு ஒன்றை அமைத்துக் கொண்டால் கூட சிங்கள மக்களுடன் அருகருகே இருந்து தான் வாழ்ந்தாக வேண்டும். சிங்கள மக்கள் மத்தியில் சிறுபான்மை மக்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தன்மையை ஆதரிக்கும் அணி ஒன்று எப்போதும் இருந்தே வந்துள்ளது. அன்று சமசமாஜிஸ்டுகள், அதனையடுத்து கம்யூனிஸ்டுகள், பின்னர் இலங்கை ஆசிரியர் சங்கம், இப்போது நவசமாஜ கட்சி என சர்வதேசியவாத குரல் சிறிய அளவிலேனும் தொடர்ச்சியாக ஒலித்தே வந்துள்ளது. அக்குரலை வலுப்படுத்தும் விதத்தில் எமது செயற்பாடுகள் அமைய வேண்டும். அப்பாவிச் சிங்கள மக்கள் மீதான தாக்குதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். அவர்கள் மத்தியில் திட்டமிட்ட பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவர்கள் நடத்தும் நியாயபூர்வமான போராட்டங்களுக்கு ஆதரவு நல்க வேண்டும். இத்தகைய போராட்ட ரீதியிலான ஆதரவே நாளடைவில் பரஸ்பர ஒத்துழைப்பிற்கான அத்திவாரமாக மாறும்.

மறுபுறத்தில் சிங்களத் தொழிலாள வர்க்கமும் ஏனைய உழைக்கும் மக்களும் தமிழ் மக்களை ஒடுக்குவதற்குத் தமது ஆளும் வர்க்கத்திற்கு





துணைபோகக் கூடாது. மாறாகத் தமது ஆளும் வர்க்கத்தைத் தூக்கி எறியும் பணியில் இணைந்த வலிமைமிக்க நேசப்படையாக ஒடுக்கப்பட்ட தேசியங்களின் விடுதலை இயக்கத்தைக் கருதவேண்டும் - தமது எதிரிகளாகக் கருதக் கூடாது.

## சிவில் அமைப்புகளின் இன்றைய கடமை

சிவில் அமைப்புக்கள் அவ்வப்போது ஜனநாயக விரோத செயல்களுக்கெதிராகத் தத்தம் எதிர்ப்புகளைக் காட்டிவிட்டு ஓய்ந்திருக்கும் போக்கைக் கைவிட்டு இன்றைய சூழலில் தமது பிரதான கடமை என்ன என்பதைத் தெளிவாக வகுத்துக் கொள்ள வேண்டும். இன்றைய சூழலில் அவற்றின் பிரதான கடமையாக சிங்கள மக்கள் மத்தியில் பிளவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியவண்ணம் உள்ள இரு பெரும் சிங்களக் கட்சிகளையும் கூட்டாக, தேசிய பிரச்சினையில் ஒரு தீர்வை முன்வைக்குமாறு நிர்ப்பந்திப்பதுடன் இலங்கையில் வாழும் சகல தேசியங்களினதும் உரிமைகள் சமமாக மதிக்கப்படும் விதத்திலான புதிய அரசியலமைப்புமுறை ஒன்றையும் விகிதாசாரமான பாராளுமன்ற - தேர்தல்முறை ஒன்றையும் உருவாக்குவதற்காகத் திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

இரண்டாவதாக, இலங்கை விவகாரத்தில் இந்தியாவோ, அமெரிக்காவோ, அல்லது வேறெந்த வல்லரசோ தலையிடுவதைக் கண்டித்து பரந்துபட்ட வெகுஜன அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும். அவற்றின் தலையீட்டைத் தடுத்து நிறுத்த உணர்வுபூர்வமாகச் செயற்பட வேண்டும்.

மூன்றாவதாக, மேற்கூறிய இருகடமைகளையும் செய்து கொண்டு நியாயபூர்வமான சமாதானத் தீர்வு ஒன்றை ஏற்குமாறும் ஜனநாயக விழுமியங்களை மதிக்குமாறும் தமிழ் இயக்கங்களை நிர்ப்பந்திக்க வேண்டும். இவை மூன்றும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த பிரிக்க முடியாத பிரச்சினைகளாகும். இவற்றில் ஒன்றுக்கு மாத்திரம் தனியாக அழுத்தம் கொடுத்தால் அது பக்கச்சார்பான செயலாக அமையும்.

## இன்றைய சூழலில் சாதியப் பிரச்சினையைக் கையாள்வது எவ்வாறு?

இன்று ஈழமண்ணில் ஈழப் போராட்டம் நடைபெறும் இடங்களில் சாதிக் கட்டமைப்பின் இறுக்கம் தளர்ந்துள்ளது என்பது உண்மைதான். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழச் சமூகத்தில் இருந்து சாதி அமைப்புமுறை தூக்கியெறியப்பட்டு விட்டது எனக் கூற முடியாது. அங்கிருந்து தூக்கியெறியப்பட்ட அத்தனை குப்பைகளும் அந்நிய மண்ணில் அடைக்கலம் புகுந்துள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களால் புனிதமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நாளை ஈழம் மலர்ந்தால் இவை மீண்டும் அங்கு கொண்டு வந்து பொருத்தப்படும். 1960களில் இடதுசாரிகள் தலைமையில் நடத்தப்பட்ட சாதி எதிர்ப்புப் போராட்டம் சாதியக் கட்டமைப்புக்கு எதிரான போராட்டத்தின் ஒரு கட்டத்தைப் பூர்த்தி செய்திருக்கிறது. இனி இந்தியாவில் இருப்பதைப் போன்ற தலித் அமைப்புகளும் போராட்ட கோஷங்களும் இங்கு தேவையில்லை. ஆனால் ஒரு வேலைத் திட்டத்துடன் கூடிய திட்டவட்டமான ஒரு ஏற்பாடு (Mechanism) இல்லாமல் சாதீயப் பாகுபாட்டையும் ஒடுக்குமுறையையும் இல்லாமல் செய்துவிட முடியாது.

உதாரணமாக: அமெரிக்காவிலே கறுப்பர் - வெள்ளையர் இனவாதம் ஒரு காலத்தில் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. அதற்கு எதிராகக் கறுப்பின மக்கள் நடத்திய போராட்டங்களும் நாட்டின் அரசியலில் மேற் கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களும் அதன் தீவிரத்தன்மையைத் தணித்த போதும் அதனைச் சமூக வாழ்விலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை. அதற்காக "பாகுபாட்டுக்கெதிரான ஆணைக்குழு" (Anti – Discrimination Commission) என்ற பெயரில் அதிகாரம் பொருந்திய ஏற்பாடு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் ஆணைக்குழுவுக்கு ஒருவர் கறுப்பர் என்பதற்காகவோ வெள்ளையர் என்பதற்காகவோ பாரபட்சமாக நடத்தப்பட்டால் அல்லது அவமரியாதையாக நடத்தப்பட்டால் முறைப்பாடு செய்யமுடியும். அம்முறைப்பாடு உரிய முறையில் விரைவாக விசாரிக்கப்பட்டு தவறிழைத்தவருக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும். இவ்வாணைக்குழு அமைக்கப்பட்ட பின்னர் Ba Ba Black sheep போன்ற கறுப்பினத்தவர்களை நையாண்டி செய்யும் பாடல்கள் தடை செய்யப்பட்டன. எவரும் இனவாதத்தைப் பேசவோ வெளிப்படுத்தவோ முடியாத நிலைமை ஏற்பட்டது. நாளடைவில் இவ்வாணைக்குழு இனப்பாகுபாட்டுக்கு எதிரான சித்தாந்தமாகவே அச்சமூக அமைப்பில் பொருந்தி விட்டது.

இதேவிதத்தில் பாகுபாட்டுக்கு எதிரான ஆணைக்குழு ஒன்றை சாதியத்திற்கு எதிராகத் தமிழீழ இயக்கங்கள் அமைத்துச் செயல்படுத்த





முடியும். அத்துடன் பின் தங்கிய மக்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான விசேட நடவடிக்கைகளையும் (Affirmative Action) மேற்கொள்ள வேண்டும். ஈழச் சமூகத்தில் வேளாளர் சமூகமும் ஏனைய சமூகங்களும் ஏறத்தாழ சம வீதத்தில் இருப்பதால் சாதி அடிப்படையில் ஒரு கோட்டை வரைவது கடினமான காரியம். ஆயினும் பின்தங்கிய கிராமங்களைத் தனியாகத் தரப்படுத்தி அவற்றிற்குச் சகல துறைகளிலும் முன்னுரிமை வழங்க இயலும்.

இவை அனைத்திற்கும் மேலாக சாதியத்தை அறவே இல்லாமல் செய்யும் நீண்ட கால கண்ணோட்டத்தில் சாதிமறுப்புத் திருமணங்களை (அகமண முறைக்கு எதிரான) ஊக்குவிக்க வேண்டும். இத்தகைய மணமுறைக்கு உடன்படும் தம்பதியர்களுக்கும் அவர்களது சந்ததியினர்க்கும் வேலை வாய்ப்புப் போன்றவற்றில் முன்னுரிமை வழங்குவதுடன் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்துடன் ஊக்கத் தொகையும் வழங்கப்பட வேணடும்.

## விமர்சனம் - சுய விமர்சனம்:

தமிழ் பேசும் சமூகத்தின் மத்தியில் உள்ள ஒரு பெரிய குறைபாடு சமூக விஞ்ஞானிகளின் பற்றாக்குறையாகும். இதன் ஒரு வெளிப்பாடு யாதெனில் எமது சமூகத்தில் அனைவருமே விமர்சகர்கள். சிலர் பிற இயக்கங்களை விமர்சிப்பதன் மூலம் மாத்திரமே அரசியலில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் இன்று வைக்கும் கருத்துக்கு எதிராக நாளை இன்னொரு கூட்டத்தில் பேசுபவார்கள். தான் நேற்றுப் பேசியது தவறு என சுயவிமர்சனம் செய்ய வேண்டிய தேவை அவருக்குக் கிடையாது. ஆனால் மற்றவர்கள் சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும் என அவர் எதிர்பார்ப்பார். இது சிறு முதலாளித்துவ மனோபாவமாகும். மாவோ கூறியதைப் போல விமர்சனம் என்பது ஒரு கலை. அது நோயாளியின் நிலை அறிந்து மருத்துவம் செய்யும் பணிக்கு ஒப்பானது. பலவீனமான நோயாளிக்கு தாக்குப் பிடிக்க முடியாத மருந்தைக் கொடுப்பவன் சிறந்த மருத்துவனாக இருக்க முடியாது. தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு நடைமுறைப் போராட்டத்தின் மூலம் வளர்ந்து வரும் இயக்கங்களுக்குத் தமது தவறுகளைத் திருத்திக் கொண்டு, அப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு உதவியாக விமர்சனங்கள் அமைந்தால் அது ஆக்கபூர்வமான விமர்சனமாக இருக்கும். அல்லது அது வசைபாடல் புராணமாக மாறுவதுடன் விமர்சகரை மொத்தப் போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி மறைமுகமாக எதிரிகளுக்குச் சேவை செய்பவராகவும் மாற்றி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமக்கு முதலில் தேவை சுயவிமர்சனம். நாம் அனைவரும் தவறிழைத்திருக்கிறோம். திருத்திக்கொண்டு முன்னேற வேண்டும் என்பதே நமது தொடக்கப் புள்ளியாக இருக்க வேண்டும். சகல இயக்கங்களும் விமர்சனத்தை ஏற்கவும் அவற்றைத் திருத்திக் கொள்ளவும் தயாராக வேண்டும். இதற்குத்தான் உண்மையான தைரியமும் நேர்மையும் தேவை. இதற்கு நாம் தயாரில்லை என்றால் நாளை வரலாறு நம்மைக் கேலி செய்யும். இனிமேல் முற்போக்கான பாத்திரம் எதையும் எம்மால் வகிக்க முடியாமற் போய்விடும்.

*



## நூலாசிரியர் பற்றி.......

பாவா அப்துல் காதர் என இயற்பெயர் கொண்ட பி.ஏ.காதர் பன்முக ஆற்றல் கொண்டவர். தொழில் முறையில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றியவர். தனிவாழ்வை விடவும் சமூக வாழ்வில் அக்கறை கொண்டவர். சமூக ஆய்வாளராகவும் அறியப்பட்டவர். பதினான்கு ஆய்வுக் கட்டுரைகளை இதுவரை எழுதியுள்ளார். மிக நீண்ட சிறைவாழ்வை அனுபவித்தவர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இருபதாண்டு கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்ட முதல் தமிழ்பேசும் அரசியல் கைதி என்ற பெருமைக்குரியவர்.

மலையக மக்கள் முன்னணியை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியவர். பதினொரு வருடங்கள் அதன் செயலாளர் நாயகமாகச் செயல்பட்டவர். மத்திய மாகாணசபை உறுப்பினராகவும் திகழ்ந்திருக்கிறார்.

இலங்கை தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான கருத்தியல் விவாதத்தை மேற்கிளப்புவதிலும் அதற்காக குரல் கொடுப்பதிலும் முன்னின்றவர். 1977ல் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் துணைத் தலைவராக இருந்த போது அதன் வருடாந்த மாநாட்டில் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைத் தீர்மானத்தை முன்மொழித்தவர். அப்போது அந்த ஆசிரியர் சங்கத்தின் தலைவராக எச்.என்.பெர்ணாண்டோ இருந்தார். இவர் மக்கள் விடுதலை முன்னணி என்னும் ஜே.வி.பி. இயக்கத்தின் நிறுவனரான ரோகண விஜயவீரவின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தீவின் பழம்பெரும் இடதுசாரிக் கட்சிகள் எதுவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத அக்காலகட்டத்தில் சிங்கள ஆசிரியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தில் இத்தகைய தீர்மானம் ஒன்றை இவர் முன்மொழிந்தது ஒரு விவாதப் புயலைத் தோற்றுவிக்கக் காரணமாகியது.

1984ல் ஈரோஸ் அமைப்பின் வெளியீடான "இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்" என்ற நூலை எழுதியவர் இவர் என்பது பலரறியாத விடயம். அப்போது நூலாசிரியரின் பெயர் மோகன்ராஜ் என்று மாற்றுப் பெயரில் குறிப்பிடப்பட்டிருந்தது. 1983 இனக் கலவரத்தின் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மலையகப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு சிறந்த கள ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இவ்வாய்வு 1984ல் தமிழ் தகவல் நடுவத்தால் சென்னையில் வெளியிடப்பட்டு பின்னர் இந்த ஆய்வு ஜெனிவா மனித உரிமை மாநாட்டிலும் படிக்கப்பட்டது.

இலங்கை அரசியல் யாப்புத் தொடர்பாகவும் இலங்கையின் தேர்தல் தொகுதிகள் சிறுபான்மை மக்களுக்குப் பாதகமாக எவ்வாறு வரையப்பட்டுள்ளது என்பது பற்றியும் ஆய்வுகள் நடாத்தியுள்ளார். இது தொடர்பான இவரது ஆய்வொன்று கண்டி சத்யோதய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை மலையகத்தின் ராகலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது இலண்டனில் வசித்து வருகின்றார்.

அண்மையில் 'சுயம் நிர்ணயம் உரிமை' என்னும் இவரது நூல் அப்பால் தமிழின் முதல் வெளியீடாக வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org